உ

அகஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய

வைத்திய
ரத்தினச் சுருக்கம் - 360

A. இரங்கசாமி முதலியார் சன்ஸ்

சென்னை

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1934 [அணா 8

உ

கடவுள் துணை

அகஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய

வைத்திய

ரத்தினச் சுருக்கம்-360

காப்பு

பூரணமாய் நிறைந்தகுரு மலர்த்தாள்போற்றிப்
புகலுகின்றேன் வயித்யரத்ன சுருக்கந்தன்னை
வாரணமா முகத்தோனைப் பணிந்துவாழ்த்தி
வயித்தியந்தான் முந்நூற்றே டறுபதுக்குள்
காரணமாஞ் செந்தூரம் பற்பம்லேகியங்
கருவான தயிலமொடு கிருதமெண்ணெய்
சூரணமாக் கிராணமொடு கலிக்கமாத்திரை
சுளுவாக நாடிமுதற் சொன்னேம்பாரே.

நூல்

நாடி நிதானம்

கரிமுக னடியை வாழ்த்திக் கைதனி னாடி பார்க்கில்
பெருவிர லங்கு லத்திற் பிடித்தடி நடுவே தொட்டால்
ஒருவிர லோடில் வாத முயர்நடு விரலிற் பித்தந்
திருவிரன் மூன்றி லோடிற் சேத்தும நாடி யாமே. 1

ஆகிய நாடி மூன்றும் படபடென் றோடிற் சன்னி
வாகினி லன்னங் கோழி மயிலென நடக்கும் வாதம்
ஏகிய வாமை யட்டை யிவையென நடக்கும் பித்தம்
போகிய தவளை பாம்பு போலவாஞ் சேத்துமந் தானே. 2

சேத்தும மெழுந் திருக்கிற் றித்திப்பு நாவி லேறும்
ஏத்திய கசப்பு மீறி லெழும்பிடும் பித்த மாகும்
வாத்திய புளிப்பு மீறில் வந்திடும் வாத மாகும்
சேத்துமந் தண்ணீர் பித்தந் தீக்காற்று வாத மாமே. 3

வாதத்தில் [illegible] மாகில் வளர்ந்திடு மன்னம் போல
நீதுற்ற வுட [illegible] னேர்ந்து நெகிழ்ச்சியாய்ச் சுருங்கும் வாங்கும்
ஆதுத்துப் [illegible] தறு மேனி யசனமு மற்ப மாகும்
ஏதுற்ற தன [illegible] த்தின் மின்னே யெண்ணியே யறிந்து சொல்லே. 4

வாதத்திற் பித்த மாகில் வாயது குழறிப் பேசும்
பேதித்துக் குளிருங் காலில் வீக்கமும் பெருக வுண்டாம்
தாதுற்ற புத்தி தானுந் தடைபடுந் தடங்கண் மாதே
கோதுற்ற வயிறு விம்மிக் குடலைப் புரட்டுந் தானே. 5

வாதத்திற் சேத்தும மாகில் வலியொடு வீக்க முண்டாம்
பேதித்துத் தலை யிடித்துப் பிணங்கிய குணங்கள் வேறாய்த்
தீதுற்ற மெய் வெளுத்துத் திடமுட னசனஞ் செல்லாப்
பேதித்து நாவு பேசும் பெருகவே வீக்க முண்டாம். 6

பித்தத்திற் பித்த மாகிற் பிதற்றிடுங் கிறு கிறுக்கும்
சத்திய மதிக மாகுஞ் சரீரத்தி லிளைப்பு முண்டாம்
அத்தியா யுலரு மேனி யாகமும் வேற தாகும்
வற்றியே வெளுத்துக் காயம் வரண்டுபின் வீக்க முண்டாம். 7

பித்தத்தில் வாத மாகிற் பிடரியுங் காலுங் கையும்
குத்தது போலே யாகுங் குறுகிமெய்ப் பதறும் பின்னே
அத்தியா யுலரு மேனி யாகமுஞ் சுரத்தால் நோவாம்
புத்தியு மடியு மிக்கப் பொறுமைபோய்க் கோப மாமே. 8

பித்தத்திற் சேத்தும மாகிற் பிதற்றும்வாய் குழறு மிக்கச்
சத்தியும் வாய்நீர் தானுந் தானறி யாம லோடும்
சுற்றிடும் பேய்கள் போலச் சுழற்றிய வயிற்றி னோவாம்
பித்தமு மெடுத்துக் கொட்டிப் பிடரியில் நோவ தாமே. 9

வாட்டிடுஞ் சேத்து மத்தில் வந்திடும் வாத மாகில்
நாட்டிய கால்கள் போல நரம்பெலாம் வலித்து நிற்கும்
கூட்டிய பிடரி தானுங் குன்றநீ வலிக்கு மாகில்
நாட்டிய விழியு மேலாய் நாக்குவாய் குழறுந் தானே. 10

சீர்பெறு சேத்தும பித்தந் தின்பது கசப்புண் டாகும்
பார்பெறு நாவு தன்னிற் பலவிதம் புளிப் பிணிப்பாம்
சேர்பது பேசு மாறுந் திடமில்லை கோழை யாகும்
சார்பது கண்ணும் பீளைச் சாரும்பின் சத்தம் வேறாம். 11

சேத்துமத்திற் சேத்தும மாகிற் றிமிர்தமா யறியுஞ் சொன்னோம்
ஆத்தும நல்ல தல்ல வழிவது மெய்கண் டாயே
கூற்றன்வந் திடுவ தாகுங் குறுமிழி வட்டங் கொள்ளும்
சாத்திர மறிந்து சொன்னோம் யாத்திரை நாடி தானே. 12

நாடி பார்க்குங் காலம்

காலமே சேத்தும நாடி கட்டுச்சிப் பித்த நாடி
மாலையில் வாத நாடி வகைதப்பிப் பதறி நின்றால்
ஏலவே யிவர்கட் கெல்லா மியம்பினு ரிதுதா னென்று
நாலஞ்சின் மரண மென்று நன்முனி யருளிச் செய்தார். 13

நாடி இலக்கணம்

போற்றிய நாடி தானும் போத்துபோற் புறந் துடித்தாற்
கீற்றுவின் னுதலே மிக்கக் கிஞ்சுக மானே கேளாய்
காத்திடுந் திங்க ளொன்றிற் கருதியே தீரா விட்டால்
மாற்றிய மாதம் பத்தின் மரணமென் றுரைக்க லாமே. 14

குதித்திடுஞ் சேத்தும நாடி குதிரைபோல் திமிர்ந்து நின்றால்
கறுத்திடு விழியாய் நல்ல காரிகை யாளே கேளாய்
மறுத்திவை பேச வேண்டாம் வயதிவை முடிந்த தென்று
பொருப்பில்லை திங்க ளொன்றிற் புகன்றிடு மரண மாமே. 15

ஆதித்தன் சந்திரன் போ லந்தித்த நாடி தானும்
பேதித்து நிற்கு மாகிற் பெருக்கவே கையி னூடே
சோதித்துக் கண்டு நாடி சுரங்களிற் புக்கு மாகில்
வாதத்தில் வாய்வு பீடை வந்துற நிற்குந் தானே. 16

கடிந்ததோர் நாடி தன்னைக் கருதியே பார்க்கும் போது
விடிந்தபின் சேத்தும நாடி விதறியே தொடர்ந்து நின்றால்
கடிந்தது பித்த நாடி கட்டுச்சித் துடிக்கு மாகில்
மடிந்தது வாத நாடி மாலையில் மரணந் தானே. 17

சேத்தும நாடி தானுந் தியங்கிய மஞ்ஞை போல
நாட்டிய வட்டை போல நடுங்கியே பதறி நின்றால்
கூட்டவே வேண்டா மேழு நாளினின் மரணங் கொள்ளும்
நாட்டமாய் முனிவர் சொன்னார் நயம்படக் குறித்துப் பாரே. 18

ஏற்றிய தீபந் தன்னி லெரிசுடர் முனையைப் போலத்
தோற்றிய நாடி தானுந் துயரற நடக்கு மாகில்
கூற்றனுக் கிடமு மில்லை குறைப்படா மருந்து செய்யில்
மாற்றிய வாணு டானும் வளர்ந்திடுந் திண்ணந் தானே. 19

கண்ணும் பல்லுந் தான்கறுத்துக் கருது மூச்சு வாய்திறந்து
உண்ணும் வயிற்றிற் சேத்துமமு மோடி மிகவே தானடந்தாற்
பண்ணும் மருந்து பலியாது பண்பாய் சுவாச மேல்வாங்கும்
மண்ணுங் விண்ணுந் தானறிய மரண மாவார் கண்டீரே. 20

இடைதொடை மார்பின் கீழே யெறிபடப் பதறி யோடின்
முடுகிட வீங்கு மாகின் மூவரி லொருவ ரோடில்
படரவே தாக மிஞ்சிப் பஞ்சிடுங் கண்ணும் வாயும்
அடரவிக் குணங்கள் கண்டா லறிந்துகொண் மரண மென்றே. 21

எடுக்கும் படுக்கு மெழுந்திருக்கு மிளைத்தே மூச்சுதனை வாங்கும்
வடுக்க ணொத்த விழியிரண்டு மலர விழிக்கும் வழிபார்க்குந்
தொடுக்குந் தொடுத்த சேத்துமமுந் தொண்டை தன்னை யடைப்பிக்கு
மடுத்து வருவ திதுகண்டா லறிவீர் மரண நிச்சயமே. 22

ஊசிபோன் முகமு நீண்டு உடம்பெலா நரம்பு தோன்றிப்
பாசிபோற் கண்பஞ் சிட்டுப் பறந்திருண் மூடு மாகில்
பேசுநா வரண்டு பேசிப் பித்தது பிதற்று மாகில்
காசினி யறியச் சொன்னோங் கண்டுகொண் மரண மென்றே. 23

நாடியான் முன்னோர் சொன்ன நற்குறிக் குணங்க ளாறு
நீடிய விழியி னாலு நின்றநாட் குறிப்பி னாலும்
வாடிய மேனி யாலு மலமொடு நீரி னாலுஞ்
சூடிய வியாதி தன்னைச் சுகம்பெற வறிந்து சொல்லே. 24

சுகம்பெற வங்க மெல்லாஞ் சுருங்கிய குணங்க ளாய்ந்து
முகங்குறி நாடி மூக்குச் செவிநுத னயன நாடி
அகந்துடி யடக்கு நாடி யதுதிசை விடுதி நாடி
உகந்துடி யுந்தி நாடி யுண்மையாய் நடைகள் பாரே. 25

பார்மனக் கவலை யற்றுப் பலபல விசாரம் விட்டுத்
தேர்மனந் தெளிந்து நீயுஞ் செய்குண வழியீ தென்று
ஊரக முந்தி தன்னி லொளிபல வியாதி செப்பும்
தீபன வுண்டி யாலே சேர்ந்திடு நோய்க டானே. 26

சொல்லிய வுந்தி தன்னிற் சுழிந்ததோ ரெழுத்தைப் பற்றி
எல்லையி லெழுந்த நாடி யெழுபத் தீரா யிரத்தில்
வல்லவர் புகலு நாடி பத்ததி லேழு நீக்கி
நல்லதோர் நாடி மூன்று நயந்துநீ யறிந்து பாரே. 27

தான்மிகக் குளிர்ச்சி கொள்ளி றயங்கிய நாடி வாதம்
மீன்முகில் குழலாய் நெய்பா லிறைச்சிக ளுண்டால் வாதந்
தீன்மிக வருமே கோழி நின்னவர் நாடி பித்தம்
வானநற் கனிக டன்னை வாங்கினால் வாத மாமே. 28

வாதத்தி லிளநீர் தன்னை வாங்கினா லுடி வாதம்
போதவே கோப முள்ளே பொருமினா லுடி பித்தம்
கோதைசேர் குழலார் தன்னைக் கூடினா லுடி பித்தம்
தீதிலா முனிவர் சொன்னார் திறமுட னறிந்து தானே. 29

ஸ்திரீ புருடர்களுக்கு நாடிபார்க்கும் வகை

தானென வுலகத் துள்ளே தயங்கிய நாடி பார்க்கில்
வானெனு மின்னே கேளாய் வரும்புலன் சொல்லக் கேளு
நானெனும் புருடர்க் கெல்லா நாடிதான் வலக்கை யாகும்
தேனெனு மடவார்க் கெல்லாந் திடம்பெற விடக்கை சித்தே. 30

நாடிபார்க்கும் மாதவகை

சித்திரை வைகா சிக்குச் செழுங்கதி ருதயந் தன்னில்
அத்தமா மானி யாடி யைப்பசி கார்த்தி கைக்கு

மத்தியா னத்திற் பார்க்க மார்கழி தையு மாசி
வித்தகன் கதிரோன் மேற்கில் விழுகின்ற நேரந் தானே. 31

தானது பங்கு னிக்குந் தனதுநல் லாவ ணிக்கும்
மானமாம் புரட்டா சிக்கு மற்றை ராத்திரியிற் பார்க்கத்
தேனென்று மூன்று நாடித் தெளிவாகக் காணு மென்று
கானமா முனிவர் சொன்ன கருத்தைநீ கண்டு பாரே. 32

சித்தானந்த வைரவம்

பாரப்பா புலத்தியனே சித்தானந்தம்
பரிவான வைரவந்தான் சொல்லக்கேளு
சேரப்பா திரிகடுகு சிவப்புநாவி
திறமான வெரிச்சலொடு பொரிச்சலேழும்
நீரப்பா சமன்கூட்டிப் பழத்தின்சாற்றால்
நிசமாக நாற்சாம மரைத்துக்கொண்டு
தாரப்பா குன்றிபோ னிழலுலர்த்தித்
தப்பாமற் செப்பில்வைத்துச் சொல்லக்கேளே. 33

கேளப்பா விஞ்சிநீ ருள்ளித்தைலங்
கெடியான முலைப்பாலிற் கொடுத்தாயானால்
நாளப்பா சன்னிவகை யெல்லாம்போகும்
நலமான தேன்கூட்டிக் கொடுத்தாயானால்
தாளப்பா தோஷமென்ற தெல்லாம்போகுந்
தப்பாது கண்ணிலிடத் தீருந்தீரும்
கேளப்பா ரசானந்த வைரவந்தான்
செப்புகிறேன் சிவப்புநாவற் பொரிதானெட்டே. 34

இரசானந்த வைரவம்

எட்டப்பா நாவியீ ராறுமாகு
மிதமான திப்பிலியும் பன்னிரண்டு
தட்டப்பா யிஞ்சிரசந் தன்னாலாட்டித்
தளமாக நாற்சாம மரைத்துக்கொண்டு
விட்டப்பா மிளகுபோ னிழலுலர்த்தி
விருதான செப்பில்வைத்து சொல்லக்கேளு
அட்டப்பா வநுபான மறிந்துபோடு
அப்பனே சன்னியென்ற மூலம்போமே. 35

---

(33) சிவப்பு-லிங்கம். எரிச்சல்-பெருங்காயம். பொரிச்சல்-வெண்காரம்.
(34) பொரி-வெண்காரம்.

வாத ராக்ஷசன்

போமப்பா வாதராக்ஷசனைக்கேளு
புதுமையாம் வேந்தனொடு நாற்றங்காந்தஞ்
சேமப்பா வப்பிரக தாம்பிரபற்பம்
திறமாக வஞ்சவிதஞ் சமனாய்க்கூட்டிச்
சாமப்பா வெள்ளைச்சா றணையின்சாற்றால்
தளமாக நாற்சாம மரைத்தபின்பு
வேமப்பா சிந்தியிட கியாழந்தன்னால்
வெகுசுருக்காய் நாற்சாம மரைத்திடாயே. 36

அரைத்திடுவாய் கொடிவேலிக் கியாழந்தன்னில்
அறுந்துளசிச் சாறுதிரி பலைக்கியாழம்
அரைத்திடுவாய் வெவ்வேறே சாமம்ரண்டு
அழகாக மொத்தைமா யுருட்டிக்கொண்டு
அரைத்திடுவாய் சாறணையி னிலையரைத்து
அன்பாக மருந்தையுள்ளே வைத்துமூடி
அரைத்திட்ட விலைகருகப் புடத்தைப்போட்டு
ஆறினபின் னெடுத்தேதா னரைக்கக்கேளே. 37

கேளப்பா சித்திரமூலத் தின்கியாழம்
கிருபையாய் நாற்சாம மரைத்துக்கொண்டு
நாளப்பா மும்மூன்று வராகன்வீதம்
நலமாக வேயுருட்டிக் கட்டிக்கொண்டு
தாளப்பா நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
தளமான சன்னிவகை தோஷமெல்லாம்
வேளப்பா வனுபான மறிந்துபோடு
வெகுசுருக்காய் வாதமெல்லாம் விழலாய்ப்போமே. 38

சுயமக்கினி

போமப்பா சுயமக்கினி சொல்லக்கேளு
புகழான ரசமூன்று நாற்றம்ரண்டு
காமப்பா காந்தசெந் தூரம்நாலு
கலங்காதே சிலையிரண்டு சிவப்பிரண்டு
தாமப்பா வெழுகுபொடி பலந்தானொன்று
தவறாமல் குமரிச்சா றரைப்புக்கேளு
ஆமப்பா பட்சமொன்று வரைத்துருட்டு
அப்பனே யிஞ்சிரசந் திரிகடுகுதூளே. 39

(36) வேந்தன்-ரசம். நாற்றம்-கந்தகம்.
(37) திரிபலை-கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய்.
(39) நாற்றம்-கந்தகம். சிலை-மனோசிலை. சிவப்பு-லிங்கம். குமரி-சோற்றுக் கற்றாழை.

தூளிலே தேன்கூட்டிப் பணவெடைதான்போட்டுத்
தொடர்ந்துவரை மண்டலந்தான் கொண்டாயானால்
நாளிலே யக்கினியா மந்தந்தீரும்
நாடாது பீலிகையுங் குன்மவாய்வும்
தேளிலே வாயுவென்ற தெல்லாந்தீருந்
திறமான கவுசியொடு பாண்டுதீரும்
சூளிலே சுரமெல்லாஞ் சுருக்காய்த்தீருஞ்
சுகமாகும் பத்தியந்தான் புளிகசப்புத்தள்ளே. 40

தள்ளவே யின்னமொரு செய்திகேளு
தயவான வேந்தனொன்று நாற்றம்ரண்டு
விள்ளவே அயப்பொடிதா னாலுங்கூட்டி
விருதான குமரிச்சா றதனாலாட்டிப்
பள்ளவே நாற்சாம மரைத்துருட்டிப்
பாங்கான வெருக்கிலையாற் சுற்றிக்கட்டிக்
கள்ளவே பாண்டத்தில் பக்ஷம்வைத்துக்
கலங்காதே பொடிசெய்து திரிகடுகிற்கொள்ளே. 41

கொள்ளடா தேன்கூட்டி மண்டலந்தான்
கொடிதான குன்மமெட்டும் பீலிகையுந்தீருந்
தள்ளடா பாண்டுவகை யெல்லாந்தீருந்
தளமான வக்கினியா மந்தந்தீரும்
நள்ளடா விஞ்சிரசந் தேனுங்கூட்டி
நலமான மண்டலந்தான் கொண்டாயானால்
விள்ளடா சுரமென்ற தறுபானான்கும்
விட்டுவிட்டுக் கடல்புக்கும் விருதுப்போடே. 42

கபாட மாத்திரை

போடவே கபாடமாத் திரைதான்கேளு
புகழான சாதிக்காய்ப் பத்திரிக்காயம்
நாடவே சீரகமும் விடையம்கிராம்பு
நலமான வபினிசடை வன்னிக்கற்பந்
தேடவே வெந்தயமுங் கழற்சிவித்துத்
திறமான குரோசாணி பதினொன்றுந்தான்
ஆடவே சமன்தூக்கிக் கல்வத்திட்டு
அப்பனே யானந்த மூலிச்சாறே. 43

சாற்றாலே நாற்சாம மரைத்துக்கொண்டு
சாதகமா யிலந்தைவிதைப் பிரமாணந்தான்
காத்தாலே மேதியென்ற தயிர்நாள்மூன்று
கசக்காதே மதுவிலிடு மூன்றுநாள்தான்

(43) சடைவன்னிக்கற்பம்-சடைக்குஞ்சாம். ஆனந்தமூலி-கஞ்சா.
(44) மது-தேன்.

வாத்தாலே வாழையுட பூவின்சாற்றில்
வகையான தனிச்சாற்றி விட்டாயானால்
வேத்தாலே யிரத்தமூலஞ் சீழ்க்கிராணி
விதமான சலக்கிராணித் தானுமாமே. 44

ஆமப்பா சதக்கிராணி வாய்வுக்கிராணி
அப்பனே சூசிகா கிராணிதீரும்
போமப்பா சோறுசோறாய்க் கழிகிராணி
பொலிவான நீரதாக் கிராணிதீரும்
நாமப்பா வயிற்றிலுள்ள கடுப்புத்தீரும்
நலமான பாண்டுநோய்க் கிராணிதீரும்
தாமப்பா வதிசாரக் கடுப்புத்தீருந்
தப்பாது புளிகூட்டிப் பத்தியம்போடே. 45

பூபதி குளிகை

போடப்பா சடலத்தூண் ணோய்கள்போகப்
பூபதிதன் மருந்தொன்று சொல்லக்கேளு
சாடப்பா தங்கமொடு வெள்ளிநாகந்
தளமான லோகமொடு முத்துரத்தினம்
நாடப்பா சூதமொடு கெந்திலிங்கம்
நலமான சீலையொடு தார்சிங்கிநாவி
ஆடப்பா விவையெல்லாம் பழச்சாற்றாலே
ஆட்டியே நாற்சாமம் வில்லைசெய்யே. 46

செய்யப்பா ரவியுலர்த்தி யகலில்வைத்துத்
திடமாக மேன்மூடிச் சீலைசெய்து
வையப்பா முப்புடத்தில் சிவந்துபோகும்
வளமாக வெடைக்கெடைதான் லிங்கங்கூட்டி
மெய்யப்பா முலைப்பாலி னான்கேசாமம்
விடாமலரை விரனீள வுண்டைசெய்து
கையப்பா நிழலுலர்த்திச் செப்பில்வைத்துக்
கலங்காதே வைரவற்குப் பூசைபண்ணே. 47

பண்ணியே பூபதியை முலைப்பாலுக்குப்
பரிவாக வரிசியெடை கொடுத்தாற்கேளு
சண்ணியே சன்னிபதின் மூன்றுந்தீரும்
தப்பாது தோஷமென்ற தேழுந்தீரும்
கண்ணித்திரி தோஷஞ்சிங் கிலிதமெல்லாங்
காணாது கடல்புக்குங் கருதிப்பாரு
விண்ணியே சிரசினின்ற தோடமெல்லாம்
வெகுசுருக்காய்த் தீருமடா விரைந்துபாரே. 48

பாரப்பா பூபதியை யிஞ்சிச்சாற்றிற்
பரிவான தேன்கூட்டிக் கொடுத்தாற்கேளு

சாரப்பா சவமாகப் போனாலுந்தான்
சாதுரியப் பிராணன்வந்து சற்றேபேசும்
ஆரப்பா பிரமலபி யவ்வளவேயாயின்
ஆசித்துப் பேசிவிட்டு மரணமாவான்
தாரப்பா பூபதியைச் சொன்னேன்சொன்னேன்
சாதித்து வைத்தியஞ்செய் தருமமாமே. 49

இரச சிந்தாமணி

ஆமப்பா ரசசிந்தா மணியைக்கேளு
அப்பனே சூதமொடு சிவந்தரத்நம்
தாமப்பா தங்கமொடு வெள்ளிமுத்துத்
தயவான பவழமொடு தீட்சணந்தான்
நாமப்பா சிலைகெந்தி யட்பிரேகம்
நலமாக வகைக்குமிரு கழஞ்சுகூட்டிக்
காமப்பால் விட்டரைப்பாய் சாமம்நாலு
கருவான சித்திரமூலக் கியாழந்தானே. 50

கியாழத்தா லரைத்திடுவாய் சாமம்நாலு
கெடிதான வெருக்கம்பாற் சாமம்ரண்டு
நியாயமாஞ் சோகிதனி லடைத்துக்கொண்டு
நிலவரமாய் மூலமென்ற சாம்பலுக்குள்
வியாழமா யறையறையாய் வைத்துமூடி
விதமாக வெழுசீலை மண்ணுசெய்து
கியாழமா யிரவிதனி லுலரப்போட்டுத்
திறமாகக் கசப்புடத்திற் சென்றுவாங்கே. 51

வாங்கியே யெடைக்கெடைதான் சூதங்கூட்டி
மைந்தனே நாபிமுக்காற் கழஞ்சுங்கூட்டி
ஓங்கியே நாற்சாமந் திரிகடுகுகியாழ
முத்தமனே திரிபலையின் கியாழந்தன்னாற்
றேங்கியே யிருசாம மரைத்தபின்பு
திறமாக வெருக்கினிட பட்டைச்சாற்றில்
தாங்கியே யொருசாம மறைத்துருட்டித்
தப்பாம னிழலிலே யுலர்த்திவையே. 52

வைத்திதனை வைரவற்குப் பூசைபண்ணு
வாகாகக் கணபதியைப் பூசைபண்ணு
தைத்ததொரு மாத்திரைக்குச் செபந்தான்பண்ணு
தப்பாமற் றேவியைத்தான் பூசைபண்ணு
சித்திதரு மாத்திரையை யனுபானத்தில்
திறமாகக் குன்றியெடை கொடுத்தாற்கேளு

(50) காமப்பால்-முலைப்பால்.
(51) சோகி-பலகறை.

பற்றிநின்ற சன்னிமுதற் றோஷமெல்லாம்
பறக்குமடா சுரமென்ற தெல்லாந்தானே. 53

தானென்ற ரசசிந்தா மணியின்பேரைச்
சாற்றினால் யமதூதர் நடுங்குவார்பார்
ஏனென்றே யிருந்தாக்கால் வைத்தியோரே
யெய்துமோ மாத்திரைதா னியம்பக்கேளு
பானென்ற மாத்திரைகள் பண்பாய்ச்செய்து
பரிவான வுலகத்தில் வைத்தியஞ்செய்ய
தேனென்ற வைத்தியர்க்குச் சொன்னேனிந்நூல்
திறமான வாதியென்றுஞ் செய்வான்பாரே. 54

கோரோசனைக் குளிகை

பாரப்பா கோரோசனைக் குளிகைகேளும்
பாங்காகக் கோரோசனையுங் குங்குமப்பூச்
சாரப்பா கர்ப்பூரம் ரசசெந்தூரஞ்
சார்பான பச்சைக்கர்ப் பூரமேலம்
சேரப்பா வப்பிரகங் கிராம்புக்கோஷ்டம்
திறமான சாதிக்கா யக்கிரகாரம்
ஆரப்பா வகையொன்று கழஞ்சிமூன்று
அப்பனே கல்வத்திற் பொடித்துக்கொள்ளே. 55

பொடித்திதனை யரைப்பதற்குக் கியாழங்கேளு
போரான சந்தனத்தூள் கியாழஞ்செய்து
துடித்திதனைச் சாமநா லரைத்துக்கொண்டு
துலங்கவே சண்பகப்பூக் கியாழஞ்செய்து
கடித்திட்டு விருசாம மரைத்துக்கொண்டு
கருவான குங்குமப்பூ கியாழஞ்செய்து
துடித்திட்டு விருசாம மரைத்துக்கொண்டு
துலங்கவே குன்றிபோ லுண்டைசெய்து. 56

உண்டைசெய்து நிழலுலர்த்திச் செப்பில்வைத்து
உத்தமனே முலைப்பாலில் கொடுத்தாயானால்
தொண்டையுறு சேத்துமங்க டொண்ணூற்றாறும்
தொலைந்துவிடுஞ் சன்னியெலாஞ் சொல்லாதோடும்
மண்டைகட்டுச் சூலைமுத னீர்த்தோஷங்கள்
மயக்கமொடு சேத்துமசுர மாண்டுபோகும்
சண்டையிட்டு வந்ததொரு வலிப்பிசுவுஞ்
சண்ணுண்டு போகுமடா சொல்லக்கேளே. 57

பூமணிக் குளிகை

கேளடா பூமணிதான் சொல்லக்கேளு
கிருபையாம் ரோகணியு மிலுப்பைப்பூவும்

நாளடா வாளமது ரெட்டிசேர்த்து
நலமான குமரிச்சா றதனாலாட்டி
வேளடா நாற்சாம மரைத்துக்கொண்டு
விதமான தூதளங்காய்ப் போலுருட்டித்
தாளடா நிழலுலர்த்திச் செப்பில்வைத்துத்
தளமான விஞ்சிரசந் தேனுங்கூட்டே. 58

கூட்டிய மாத்திரைதா னொன்றுதேய்த்துக்
குழப்பியே காலமே கொடுத்தாற்கேளு
நாட்டியதோர் சன்னிசுர மெல்லாந்தீரும்
நலமான விடசுரமும் நாடாதோடும்
தீட்டியதோ ருள்ளியென்ற தைலத்தூட்ட
திறமான தோடமெல்லாந் தீருந்தீரும்
வாட்டியே யெண்ணெயிலே கொடுத்தாயானால்
வாங்கிவிடும் வாயுவெல்லா மாண்டுபோமே. 59

அர்த்தநாரீஸ்வரச் சூரணம்

போமப்பா அர்த்தநாரி சூரணந்தான்கேளு
புகழான சூதமொடு நாவிகெந்தி
நாமப்பா வெங்காரம் சமனாய்த்தூக்கி
நலமான நொச்சியிலைச் சாற்றினாலே
வேமப்பா விருசாம மரைத்துக்கொண்டு
விதமான குகையிலிட்டுச் சீலைசெய்து
தாமப்பா மண்செய்து சட்டிக்குள்ளே
தயவாக வுப்பையிட்டுக் குகையைவையே. 60

வைத்ததிலே மேலுமந்த வுப்பைக்கொட்டி
வாகாக மேற்சட்டி கொண்டுமூடி
தைத்ததிலே சீலைசெய் தடுப்பிலேற்றித்
தப்பாமற் கமலவன்னி நாலுசாமம்
நைத்ததிலே யாறவிட் டெடுத்துக்கொண்டு
நலமான செங்கழுநீர்ச் சாற்றினாலே
பைத்ததிலே நாற்சாம மாட்டிக்கொண்டு
பருவமுட னைச்சிரசம் விட்டேயாட்டே. 61

ஆட்டப்பா நாற்சாமம் பாகற்சாற்றால்
அப்பனே நாற்சாம மாட்டிக்கொண்டு
நாட்டப்பா ரவிமுகத்தி லுலர்ந்தபின்பு
நன்றாகக் குழலடைத்து வைத்துக்கொண்டு
மூட்டப்பா பணவெடைதூள் முன்சாற்றிலிட்டு
முறையாகக் கொடுத்திடவே சுரங்கடீரும்
காட்டப்பா விருபுறத்தோர் புறந்தானிற்குங்
கருவான முன்சாற்றி னசியம்பண்ணே. 62

பண்ணப்பா வொருபுறத்திற் சுரந்தானிற்கும்
பக்குவமாய் மறுபுறத்தி னசியம்பண்ண
தண்ணப்பா விருபுறமுந் தணிந்துபோகுந்
தப்பாது ஆட்டுப்பாற் கஞ்சிகொள்ள
நண்ணப்பா புலத்தியனே சொன்னேன்கேளு
நாட்டிலுள்ளோ ரிதையறிந்து யார்தான்செய்வார்
கண்ணப்பா வொளிப்பில்லைச் சொல்லிவிட்டேன்
கருவான வைத்தியர்க் கருமைகாணே. 63

சிலோதாரிமணி

காணப்பா சிலோதாரி மணியைக்கேளு
கனத்தபொரி திரிகடுகு படியொவ்வொன்று
நாணப்பா கடுனுரையுஞ் சூரைவித்து
நலமான விந்துப்பு காயமொன்று
மாணப்பா நேர்வாள மிரண்டுகூட்டி
வகைப்பத்து மிளநீரிற் சாமமாட்டி
பேணப்பா விலந்தைவிரைப் பிரமாணந்தான்
பிசகாம னிழலுலர்த்திச் செப்பில்வையே. 64

வைத்தப்பா விஞ்சிநீர் தேனுங்கூட்டி
வளமான மாத்திரையைக் கொடுத்தாயானால்
சத்தப்பா வாய்வோடு வாதமெல்லாஞ்
சாந்தமாம் பித்தமெல்லாங் கிழேசாடும்
வைத்தப்பா மதுவிலே விட்டாயானால்
மாந்தமொடு வப்பிசமும் வாங்கிப்போகும்
எய்த்தப்பா நீரடைப்பு சதையடைப்புத்தீரு
மிதமான சிலோதாரி யென்றுகாணே. 65

கரிசாலை லேகியம்

காணப்பா பாண்டுவகை யாவும்போகக்
கரிசாலை லேகியந்தான் சொல்லக்கேளு
நாணப்பா பொற்கையான் சாறுபடியிரண்டு
நலமான நெருஞ்சிரசம் படியிரண்டு
வாணப்பா சிறுகீரைச் சாறுபடியொன்று
வளமான பொடுதலைநீர்ப் படிதானென்று
தாணப்பா கீழ்க்காயி னெல்லிச்சாறு
தருவான செருப்படிநீர்ப் படிதானென்றே. 66

ஒன்றப்பா கியாழவகை சொல்லக்கேளு
உரமான நாவல்கருங் காலியத்தி
ஒன்றப்பா தென்னம்பூ வகையொன்றுக்கு
ஓர்பலந்தான் மஞ்சணன்று யிடித்துப்போட்டுக்

(64) பொரி-வெண்காரம்.

கண்டப்பா தூணிநீ ரெட்டொன்றுக்கிக்
கருவான சாற்றிலுள்ளே கருத்தாய்வைத்துக்
கிண்டப்பா சமமாக்கி யிறக்கிக்கொண்டு
கெணிதமுடன் கருவான சாற்றிற்சேரே. 67

சேர்க்கவின்னங் கியாழமொன்று சொல்லக்கேளு
செப்புகிறேன் மிளகொடு மிளகருணைமூலம்
மார்க்கமாம் அவுரியொடு சிற்றாமுட்டி
வளமான பேராமுட்டி விலாமிச்சோடு
தீர்க்கமாய்ப் பலம்மூன்று நிறுத்துக்கொண்டு
திறமாக விடித்ததனைத் தூணிநீரில்
சேர்க்கவே சோடசத்தோ டொன்றாய்க்காய்ச்சி
சிதறாதே முன்கியாழந் தன்னிற்கூட்டே. 68

கூட்டுவாய் பனைவெல்லம் பலந்தானெட்டு,
கூரான கன்னல்வெல்லம் பலந்தானெட்டு
மாட்டுவா யாவின்பாற் படிதானொனு
வளமாகக் கரைத்துவிட்டுச் சொல்லக்கேளு
காட்டுவா யடுப்பேற்றிப் பாகுசேரிற்
கருவான சீரகமு மேலங்கிராம்பு
நீட்டுவாய் சாதிக்காய் சாதிப்பத்திரி
நினைவாக வோமங்குரோ சானியாமே. 69

ஆமப்பா நாகப்பூ கர்க்கடகச்சிங்கி
அப்பனே கோஷ்டமோ டக்கிராகாரம்
தாமப்பா மதுரமொடு தாளிசப்பத்திரி
தப்பாமற் றிரிகடுகு திரிபலாதி
நாமப்பா வகையொன்றிற் பலந்தானென்று
நலமாகச் சூரணித்து முன்பாகிற்றாவி
வேமப்பா கிண்டையிலே யாவினெய்தான்
விரைவிலரைப் படிவீதம் விட்டுக்கிண்டே. 70

கிண்டப்பா தேனதிலே படிதான்விட்டுக்
கிருபையொடு திரிலோகச் செந்தூரந்தான்
றண்டப்பா பலமொன்று கூடப்போட்டுத்
தப்பாமன் மண்டூரம் பலமொன்றப்பா
மண்டப்பா கிண்டியதை மெழுகாய்வாங்கி
மகத்தான புன்னைக்கா யளவேவீதங்
கொண்டப்பா மண்டலந்தான் சென்றதானாற்
கூறுகெட்ட வெண்பாண்டுஞ் சிவக்கலாச்சே. 71

ஆச்சப்பா பாண்டுவகை யாவும்போகு
மப்பனே பித்தவெட்டைக் கைகாலோய்ச்சல்

(71) மண்டூரம்-பழஞ்செங்கற்சிட்டம்.

காச்சப்பா காந்தனுட னெரிவுபோகுங்
கனமான வாந்தியொடு மயக்கந்தூக்கம்
ஓச்சப்பா வீக்கமொடு நீர்சுரப்பு
முத்தமனே கிராணியெல்லா மொழிந்துபோகும்
நீச்சப்பா வரோசியங்க ளெல்லாம்போகும்
நிசமான அசுவகெந்தித் தைலமூழ்கே. 72

கண்டாத்திரி லேகியம்

மூழ்கவே கண்டாத்திரி லேகியஞ்சொல்வேன்
மூர்க்கமா யிஞ்சிரசம் படிதானொன்று
நீழ்கவே கண்டங்கத் திரியின்சாறு
நினைவாகப் படியொன்று கூட்டிவிட்டுத்
தாழ்கவே நெருஞ்சிநீர்ப் படிதானொன்று
தப்பாமல் முள்ளங்கிப் படிநீர்விட்டு
வீழ்கவே பழச்சாறு படிதான்விட்டு
வியவாவின் பாற்படியி னிரண்டுநன்றே. 73

நன்றான பனைவெல்லம் பலந்தானெட்டு
நணுகியதை யடுப்பேற்றிப் பாகுசேரிற்
குன்றான திரிகடுகு சீரகமுமேலங்
குலவும்வாய் விளங்கங்கிராம் புத்தாளிசம்
நன்றாகப் பலமொன்று சூரணித்து
நலமான பாகினிலே தூவித்தூவிச்
சென்றான பசுநெய்படி யரைதான்விட்டுத்
திண்ணமொடு காற்படிதான் றேனும்வாரே. 74

வார்த்தப்பா கிண்டியதை மெழுகுபோல
வளமான லேகியத்தைப் பதனம்பண்ணு
பார்த்தப்பா பாக்களவு வீதமாகப்
பதிறும விருநேரங் கொள்ளுங்காலங்
காத்தப்பா மண்டலந்தான் கொண்டாயானாற்
கலங்காதே வாதமொடு வாயுவெல்லாம்
போத்துறுநற் பித்தமொடு வாந்திசூலைப்
புகழுடலில் வலியிசுவும் பறந்துபோமே. 75

போமப்பா வரோசிகங்க ளன்னத்தோஷம்
பொறுக்காத குன்மமெட்டும் பொருமல்விக்கல்
சாமப்பா பித்தத்தி னெரிவிதெல்லாம்
சாடிவிடுங் கடுப்புவலி சாந்தமாகும்
நாமப்பா பித்தத்தின் கபாலக்குத்தல்
நாடாது மயக்கமெலா நங்கியோடும்

(72) அசுவகெந்தி-அமுக்கறா.

தேமப்பா குமரியிட தைலமூழ்கில்
திறமான பித்தநோய்த் தீரும்பாரே. 76

பஞ்சதீபாக்கினி லேகியம்

பாரப்பா பஞ்சதீ பாக்கினியென்னப்
பகருகின்ற லேகியந்தான் சொல்லக்கேளு
ஆரப்பா திரிகடுகு யேலஞ்சீரம்
அப்பனே வகையொன்று பலந்தானென்று
பேரப்பா விளவறுப்பாய்ச் சூரணித்துப்
பெரிதான வாவின்பாற் படியிரண்டு
சேரப்பா பனைவெல்லம் பலந்தானெட்டுச்
சிறப்பாகக் கரைத்ததிலே பாகுசெய்யே. 77

செய்யப்பா சூரணத்தைத் தூவிக்கிண்டு
திறமான தேனெய்தா னுரியுழக்கு
கையப்பா விட்டதிலே கிண்டிக்கிண்டிக்
கருவாக மெழுகுபத மாகவாங்கி
மையப்பா பாக்களவு மிருநேரந்தான்
மைந்தனே மண்டலந்தான் கொண்டாயானால்
தையப்பா தீருகின்ற வியாதிகேளு
தருவான வாய்வோடு வாதமாமே. 78

ஆமப்பா வுஷ்ணங்கள் பித்தவாய்வு
அப்பனே சரீரத்தி லுளைவுகுத்து
போமப்பா வலிகடுப்பு மெரிச்சல்பேதி
பொருமலுடன் வாயுவென்ற கிராணிதீரும்
வேமப்பா வஸ்திசுர மஸ்திவெட்டை
விருதான வாந்தியெல்லாம் விழலாய்ப்போகுஞ்
சாமப்பா வரக்கிரனிட தைலமூழ்கு
சகலசுரம் விட்டோடுஞ் சார்புபாரே. 79

கண்டங்கத்திரி லேகியம்

சார்வான லேகியந்தா னென்றுகேளு
சாற்றுகிறேன் கண்டங்கத் திரிதூக்கப்பா
ஆர்வாக விடித்ததனைத் தூணிநீரில்
அப்பனே யெட்டொன்றாய்க் காய்ச்சிவிட்டுச்
சேர்வாகப் பனைவெல்லம் பலந்தான்பத்து
சேர்த்ததிலே பால்படிதான் பாகுசேரில்
தார்வாகத் திரிகடுகு திரிபலாதிச்
சருவான வாய்விளங்க மோமமாமே. 80

ஓமமொடு குரோசானி லவங்கப்பட்டை
உத்தமனே சீரகமு நறுக்குமூலம்

நாமமோ டத்திதிப் பிலியுங்கோஷ்டம்
நலமான தாளிசமு மக்கிராகாரம்
வாமமொடு வகையொன்று பலந்தானென்று
வளமாகச் சூரணித்துப் பாதிற்றாவி
சேமமோ டாவினெய் படிகால்விட்டுத்
திறமான தேனதிலே படிகால்வாரே.

வார்த்ததிலே கிண்டியது மெழுகுபோலே
வளமான லேகியம்பாக் களவுவீதம்
பார்த்ததிலே யிருநேரங் கொண்டாயானால்
பறக்குமடா கழல்வாதம் பாரிச்சூலை
தேற்றியே கிருமியொடு புழுக்களெல்லாந்
தேகத்தை விட்டோடுங் கர்ப்பவாய்வு
சாற்றதிலே யூஷ்ணநோய்ப் பித்தமெல்லாஞ்
சாராது சித்தாதி லேகியங்கேளே.

சித்தாதி லேகியம்

கேளப்பா வாறுதிங்கள் சென்றகாடி
கிருபையாய் படிபத்தும் புளித்தமோரும்
நாளப்பா படிபத்து கூடவிட்டு
நலமான புளியிலைதாக் கிடித்துப்போட்டுக்
கோளப்பா துருபிடித்த விரும்பெடைதான்போட்டுக்
கொதிக்கவைத்து எட்டொன்றா யிடித்துக்கொண்டு
வேளப்பா கையானீர் படிதான்ரண்டு
விருதான விஞ்சிரசம் படிதானென்றே.

ஒன்றான பழச்சாறு படிதானென்று
உத்தமனே நெருஞ்சிரசம் படிதானென்று
சென்றான சிறுகீரைப் படிதானென்று
செருப்படிதான் படியொன்று தென்னம்பூநீர்
பண்டான படியொன்று கீழாநெல்லி
பதருமற் படியொன்று கூடச்சேர்த்து
கண்டான வாவின்பால் படிதானனு
கருவான பனைவெல்லம் பலந்தான்பத்தே.

பத்தாகக் கரைத்துவிட்டுப் பாகுசேரில்
பக்குவமாங் கடைசாக்கு திரிகடுகுவோமம்
நத்தான திரிபலை கோஷ்டமாஞ்சில்
நலமான சீரகம்வால் மிளகுஏலம்
கைத்தான கிராம்புதா ளிசப்பத்திரி
கருவான லவுங்கத்தோ லானைதிப்பிலி
ஒத்தான பலமொன்று தூக்கிக்கொண்டு
உருவாக இளவறுப்பாய் சூரணந்தான்செய்யே.

செய்யப்பா முன்பாகிற் றாவிக்கிண்டிச்
செரியாக வாவினெய் படிதான்வாரு
கொய்யப்பா தேனதிலே படிதான்வாரு
குழம்பாக லேகியத்தைப் பதனம்பண்ணு
பையப்பா விருகழஞ்சி யிருநேரங்கொள்ளப்
பறக்குமடா பாண்டுவகை யெல்லாந்தீரும்
மையப்பா பித்தவெட்டை பித்தவாய்வு
மயக்கமோ டக்கினியா மந்தந்தானே. 86

மந்தமொடு வெளுப்பான தேகமெல்லாம்
வண்டுபோல் கறுக்குமடா மண்டலத்தில்
அந்தமா மகோதரம்பீ லிகையாம்வாய்வு
அப்பனே சோகையொடு கிராணிமூலம்
பொந்தமா முடம்பெரிப் பிளைப்போடீளை
பொருமலுட னுப்பிசங்க ளிறைச்சல்தீரும்
பந்தமாம் பத்தியங்கள் நன்றாய்க்காத்து
பக்குவமா மண்டலத்தில் சொல்லக்கேளே. 87

மகாவில்வாதி லேகியம்

சொல்லக்கேள் புலத்தியனே யின்னமொன்று
சுறுக்காக நோய்க்கெல்லா மகாவில்வாதி
வல்லக்கேள் வில்வத்தின் மூலமப்பா
வளமாகப் பலம்நூறு வெட்டிவந்து
நல்லக்கேள் விலாமிச்சை வாகைபாதிரி
நலமாக நன்னாரி பருவிளாவும்
அல்லக்கேள் சிற்றாமல்லி பேராமல்லி
அழகான சிறுவிளா வேருமாமே. 88

ஆமப்பா சிறுவாகை முன்னையோடு
அப்பனே முசுமுசுக்கை கொடுவேலிதேற்றான்
நாமப்பா வகையொன்று பலமூன்றாகும்
நலமாக விடித்தேயிரு தூணிநீரில்
வேமப்பா வெட்டொன்றாய் வடித்துக்கொண்டு
வெறுளாதே கொம்மட்டிப் பழச்சாறிஞ்சி
காமப்பா சாறுபடி யொன்றுவிட்டுக்
கலங்காதே சர்க்கரைசேர் நாலுமாமே. 89

ஆமப்பா வாவின்பால் படிதான்ரண்டு
அப்பனே கரைத்தெல்லாம் பாகுசேரில்
போமப்பா திரிகடுகு திரிபலாதி
புகழான லவங்கமோ டேலங்கோஷ்டம்
நாமப்பா மதுரகெந்தஞ் சீரம்ரண்டு
நலமான விளங்கமொடு சாஸ்திரபேதி

வாமப்பா தாளிசம்செண் பகப்பூஅக்கிராகாரம்
வளமான மல்லிவிளா வரிசிதேக்கே. 90

தேக்கான முந்திரிகை பேரீச்சுவில்வந்
திறமான வாலுளுவை மாஞ்சில்சிறுநாகம்
பாக்கான நாகணமும் பருத்திவித்தும்
பகருவே னிம்பவித் திலுப்பைப்பூவு
தூக்கான வகையொன்று பலமொன்றாகச்
சூரணித்துப் பாகிலே தூவிக்கிண்டி
நீக்கான தேனதிலே படியரைதான்விட்டு
நினைவாக வாவினெய்படி யரைதான்வாரே. 91

வார்த்தப்பா மெழுகுபோல் கிண்டிக்கிண்டி
வளமான லேகியத்தைப் பதனம்பண்ணு
கோத்தப்பா லேகியத்தைப் புன்னைக்காயளவு
கொண்டுவா விருநேரந் தீரும்நோய்கள்
சாற்றப்பா சுவாசமுட னரோசியங்கள்
தவறாதே வீக்கமொடு சத்தியெரிப்பாண்டு
காத்தப்பா விஷபாண்டு வயிற்றெறிச்சல்
கனமான வுப்பிசங்கள் கிராணிபோமே. 92

போமப்பா கைகாலி லெரிவுகாந்தல்
புகலும்வெள் ளோக்காள மன்னதோஷம்
நாமப்பா சூலையொடு சயந்தானெட்டு
நலமான சுரங்களறு பத்துநாலுந்
தாமப்பா பித்தமென்ற நாற்பதுந்தான்
தளமான வஸ்திசுர மருந்தீடெல்லாம்
ஆமப்பா வதிசார முள்ளில்ரோகம்
அருளான லோகம்வைத்துக் கொள்ளுகொள்ளே. 93

கூழ்ப்பாண்ட லேகியம்

கொள்ளவே கூழ்ப்பாண்ட லேகியந்தான்
குணமான கூழ்ப்பாண்டச் சாறுபடிநாலு
விள்ளவே தாழையிட விழுதின்சாறு
விருதான படியொன்று தென்னம்பூவொன்று
தள்ளவே பழச்சாறு படிதானொன்று
தளமான வாவின்பால் படிதானிரண்டு
பள்ளவே சர்க்கரைதான் பலமோபத்து
பதறாமற் கரைத்ததனைப் பாகுசேரே. 94

சேருமே சீரகமு மல்லிகோஷ்டம்
திறமான மிளகுமா சக்காயேலம்

(91) நிம்பவித்து - வேப்பங்கொட்டை.

காருமே சாதிக்காய் சாதிபத்திரி
கருவான மதுரமொடு தாளிசந்தான்
வாருமே ஒருவகைக்குப் பலமொன்றாக
வகையாகச் சூரணித்துப் பாகிற்றூவி
நேருமே நேதனெய்படி யரைதான்விட்டு
நினைவாகக் கூழ்போலக் கிண்டிவாங்கே. 95

வாங்கியே புன்னைக்கா யளவுவீதம்
வளமான லேகியத்தைக் கொண்டாயானால்
நீங்குமே காமாலை சோகையெல்லாம்
நீங்காத வஸ்திசுர மஸ்திவெட்டை
தாங்கியதோர் பிரமியங்கள் வெள்ளைவீழ்தல்
தளமாகும் தேகபுஷ்டி விந்துவூறும்
பாங்கியே யூஷ்ணநோய் நீர்ச்சுருக்கும்
பறக்கும்புளி புகையிலைநீ தள்ளிக்கொள்ளே. 96

சரபங்கவில்வாதி லேகியம்

கொள்ளவே யின்னமொன்று சொல்லக்கேளு
குணமான சரபங்க வில்வாதிலேகியம்
விள்ளவே வில்வவேர் முட்காவேளை
விருதான சங்கவேர் வகைக்குத்தூக்கு
தெள்ளவே சிற்றமல்லி சிற்றுமுட்டி
திறமான பேர்மல்லி கூந்தல்முள்ளி
நள்ளவே சாரணைவேர் கண்டங்காலி
நலமான விலாமிச்சை சீந்தில்தானே. 97

தானென்ற கொடிவேலி பொன்முசுட்டை
தளமான நன்னாரி சிறுதேக்கப்பா
வானென்ற மூவிவகை பதின்மூன்றுந்தான்
வளமான பலமஞ்சு இடித்துநைய
வேனென்ற வாற்றுநீர் தூணிவிட்டு
விளங்கவே யெட்டொன்றாய் நிறுத்துக்கொண்டு
கானென்ற கன்னல்வெல்லஞ் சேர்தானுலு
கருவான வாவின்பால் படியிரண்டுசேரே. 98

சேர்த்தப்பா கரைத்ததிலே பாகுசெய்து
திறமான திரிகடுகு திரிபலாதி
வார்த்ததிலே கிராம்பேல மிருசீரகந்தான்
வளமான கோஷ்டந்தா ளிசபத்திரி
தாத்ததிலே யோமரண்ட ரத்தைரண்டு
தளமான கொத்தமல்லி லவங்கப்பட்டை

(97) கூந்தல் - முதியார்கூந்தல்.

ஆத்ததிலே யக்கிராகார மத்திதிப்பிலி
அப்பனே வால்மிளகு சாதிக்காயாமே. 99

ஆமப்பா வகையொன்று பலமொன்றாக
அப்பனே யிளவறுப்பாய் சூரணித்து
சேமப்பா பாகிலே தூவிக்கொண்டு
திறமான தேன்படிநெய் யரைதான்விட்டு
நாமப்பா குழம்புபோல் வாங்கிவைத்து
நலமாக கழஞ்சிநிறை யிருநேரங்கொள்ள
தாமப்பா பித்தவெட்டை பாண்டுஆறுந்
தவறுண்டு போகுமடா சயமெட்டுந்தானே. 100

தானென்ற குன்மமெட்டும் கிராணியாறுந்
தடமான வாய்கசப்பு வெள்ளோக்காளந்
தேனென்ற வாயூற லக்கினிமந்தந்
திறமான சூலையொடு கைகால்காந்தல்
பானென்ற பித்தமது நாற்பதுந்தான்
பறக்குமடா மண்டலத்தில் பரிந்துகொள்ளு
வேனென்ற பத்தியந்தான் புளிகசப்பு
விளங்கியதோர் புகையோடு பெண்ணுந்தள்ளே. 101

தள்ளப்பா திரிலோகம் வைத்துக்கொள்ளு
தளமான வாலரசச் செந்தூரந்தான்
கொள்ளப்பா லோகசெந் தூரந்தானும்
குறையாமற் பணவெடைதான் வைத்துக்கொள்ளு
தள்ளப்பா பித்தமென்ற தெல்லாம்போகும்
தருவான சேத்துமங்கள் தொண்ணூற்றாறும்
விள்ளப்பா கடல்புக்குக் கண்டுகொள்ளு
மேலாக வின்னமொரு சேதிகேளே. 102

கண்டங்கத்திரி லேகியம்

கேளப்பா மகாகண்டங் கத்திரியான
கெடியான லேகியந்தான் சொல்லக்கேளு
நாளப்பா வாற்றுமுள்ளி பலந்தானாறு
நலமான கரிமுள்ளி யதற்குப்பாதி
தாளப்பா சிற்றாமுட்டி பேராமுட்டி
தளமான மிளகரணை கொடுவேலிகளாகவும்
ஆளப்பா வாதண்டைச் சிறுகாஞ்சோரி
அப்பனே விலாமிச்சைமுட் காவேளையாமே. 103

ஆமப்பா கோரையுட னுத்தாமணியும்
அப்பனே சுழற்கொடியு மாவிலிங்கம்
தாமப்பா வகையொன்று பலமொன்றாகத்
தவறாம லிடித்தேயிரு தூணிநீரில்

வேமப்பா வெட்டொன்றா யிறுத்துவாங்கி
விருதான கொம்மட்டிப் பழநற்சாறு
தாமப்பா படியரையுங் கூடவிட்டு
தளமான வாவின்பால் படிதானரண்டே. 104

இரண்டான சர்க்கரைதான் பலமுவைந்து
நினைவாகக் கரைத்ததிலே பாகுசேரில்
கண்டான கடைச்சரக்குச் சொல்லக்கேளு
கருவான திரிகடுகு திரிபலாதி
நன்றாக சிங்கியிரு சீரகந்தான்
நலமான வார்த்தையக்கிரா லவுங்கப்பட்டை
பின்றாக லவுங்கஞ்சா திக்காய்பத்திரி
பேராத்தை லவுங்கப்பத் திரியுங்கூட்டே. 105

கூட்டுவாய் வகையொன்று பலமொன்றாகக்
கூசாம விளவறுப்பாய்ச் சூரணித்து
நாட்டுவாய் பாகிலே தூவிக்கிண்டி
நலமாகத் தேன்படிநெய் யரைதான்விட்டு
காட்டுவாய் மெழுகுபோல் கிண்டிக்கிண்டி
கசக்காமல் பீங்கானில் வழித்துவைத்து
தீட்டுவாய் லேகியந்தான் புன்னைக்காய்வீதம்
திறமாக மண்டலத்தில் தீரும்நோய்கள். 106

கேளுதான் சயமெட்டும் குன்மமெட்டும்
கெடியான வாதமென்ற தென்பதும்போம்
நாளுதா னிரைப்பீளை விழிநீர்கோவை
நாடாது இசிவுமுதல் கழல்வாதங்கள்
தாளுதான் கெற்பவெட்டை கெற்பச்சூலை
தவறுண்டு போகுமது புழுக்களெல்லாம்
ஆளுதான் தாளகமும் லோகங்கூட்டி
அடைவாகக் கொண்டுவரத் தீரும்பாரே. 107

கபாட லேகியம்

பாருமே கபாடலே கியத்தைச்சொல்வேன்
பண்பான நாவலொடு வரசுவத்தி
சேருமே கருங்காலி யொதியம்பட்டை
திறமாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
சாருமே யிடித்துநையத் தூணிநீரில்
தளமாக வடுப்பேற்றி யெட்டொன்றாக்கி
வாருமே பனைவெல்வம் பலந்தான்பத்து
வளமாகக் கரைத்ததனிற் பாகுசெய்யே. 108

பாகிலே தூவுதற்கு மருந்துகேளு
பதறாமல் கஞ்சாவைச் சுத்திசெய்து

பாகிலே பலமொன்று தூக்கிக்கொண்டு
பாங்கான மிளகுசுக்கு சீரகமுங்கூட
பாகிலே யோமமொடு குரோசாணியோமம்
பருவமாய் சிங்கிகாட் டாத்திப்பூவும்
பாகிலே வால்மிளகு சிறுநாகப்பூ
பக்குவமா மல்லியோ டேலமாகும். 109

ஆகுமே கிராம்புடனே சாதிப்பத்திரி
அடைவான சாதிக்காய் விடையந்திப்பிலி
நாகுமே வகையொன்று பலமொன்றாக
நலமாக விளவறுப்பாய்ச் சூரணித்து
வேகுமே பாகிலே தூவியேதான்
வெகுசுருக்காய் தேனெய்யும் விட்டுக்கிண்டி
தாகுமே பீங்கானில் பதனம்பண்ணி
தப்பாமல் மண்டலந்தான் பாக்களவுகொள்ளே. 110

அளவாகக் கொண்டுவரத் தீரும்நோய்கள்
அதிகமுள்ள சூசிகா கிராணிவாய்வு
பளுவான கடுப்புமுதற் பாண்டுகிராணி
பாங்கான பேதியொடு உஷ்ணவாய்வு
களவாக மூலத்தின் கிராணிவாய்வு
கண்காணு தோடுமது மற்றவாய்வு
வளமாகக் கிராணியெல்லாந் தீருந்தீரும்
மார்க்கமுட னின்னமொரு வரிசைபாரே. 111

திப்பிலிரசாயனம்

பாருமே திப்பிலிர சாயனஞ்சொல்வேன்
பகருகின்ற திப்பிலியும் பலந்தான்பத்து
சேருமே மிளகுமஞ்சு சுக்குமஞ்சு
திறமான விருசீர மோமமரண்டு
ஆருமே யரத்தைரண்டு தாளிசப்பத்திரி
அடைவான லவுங்கப் பத்திரியும்பட்டைக்
காருமே திரிபலை லவுங்கமேலங்
கனமான கொடிவேலி பலமொன்றுதூக்கே. 112

தூக்கியே யிளவறுப்பாய்ச் சூரணித்துச்
சுகமான சர்க்கரைதான் சமனாய்க்கூட்டி
தாக்கியே தேன்விட்டுப் பிசைந்துகொண்டு
தப்பாமல் வெறுகடிதான் கொள்ளும்போது
தேக்கியே யிளைப்போடே யிளைகாசம்
திறமான சேத்துமநோய் தொண்ணூற்றாறும்
நீக்கியே யுதரத்தில் வாய்வுவெல்லாம்
நீக்கிவிடு மண்டலத்தில் நினைவாய்ப்பாரே. 113

மஸ்துமிரசாயனம்

பார்த்திடுவாய் புலத்தியனே மேகவகைதீரப்
பண்பான மஸ்துமிர சாயனஞ்சொல்வேன்
சேர்த்திடுவாய் சீனமுத லமுக்கராவேர்
திறமான வகையொன்று பலம்பத்தாகும்
சாற்றிடுவாய் நிலப்பனைவேர் பலந்தானைந்து
தளமான தண்ணிமிட்டான் பலந்தான்ரண்டு
ஆற்றிடுவாய் நன்னாரி சங்குமூலம்
அன்பான திரிகடுகு திரிபலையுமாமே. 114

ஆமப்பா லவுங்கத்தோல் லவுங்கப்பத்திரி
அப்பனே சிறுநாகம் வாய்விளங்கம்
போமப்பா மல்லியிரு சீரமோமம்
புகழான குரோசாணி அரத்தைகெந்தம்
நாமப்பா சிறுதேக்கு கண்டங்காலி
நலமான கொடிவேலி விலாமிச்சைமூலம்
தாமப்பா தக்கோலம் வால்மிளகினோடு
தளமான முந்திரிகை பேரீச்சுக்கூட்டே. 115

கூட்டப்பா வெட்பாலை தாமரைக்கிழங்கு
குலமான சாதிக்காய் கிராம்புபத்திரி
நாட்டப்பா கருவேம்பி னிலைவகைக்கு
நலமாகப் பலமொன்று நிறுத்துக்கொண்டு
காட்டப்பா விளவறுப்பாய்ச் சூரணித்துக்
கருவான குங்குமப்பூ கோரோசனைகர்ப்பூரம்
வாட்டப்பா கழஞ்சுநிறை கூடச்சேர்த்து
வளமான சர்க்கரைசேர் நாலுவாங்கே. 116

வாங்கியே யாவின்பால் படிதானாலு
வளமான சர்க்கரையைக் கரைத்துக்கொண்டு
பாங்கியே பாகுபத மாகும்போது
பதறாதே சூரணத்தைப் பாய்ச்சிக்கொண்டு
தேங்கியே தேன்படிதா னொன்றுவாரு
திறமான வாவினெய் யரைதானப்பா
வாங்கியே மெழுகுபோல் கிண்டிக்கிண்டி
வளமான பீங்கானில் பதனம்பண்ணே. 117

பண்ணப்பா விருநேரம் பாக்களவுகொள்ளப்
பரிவுடனே தீருகின்ற வியாதிகேளு
புண்ணப்பா கிரந்தியொடு சூலைதீரும்
புதுமையாங் கண்டத்தில் மாலைதீரும்
கண்ணப்பா வாய்வோடு வாதமெல்லாம்
நாடாது பிரமியங்கள் விலகப்புற்று

தண்ணப்பா சேத்துமநோய் தொண்ணூற்றுறுந்
தவறுண்டே போகுமடா பத்தியங்காரே. 118

சவுபாக்கியசுண்டி

காரப்பா வுலகத்தோர் நோய்களெல்லாங்
கலங்குமடா சவுபாக்கிய சுண்டியென்றால்
நேரப்பா சுக்கதுதான் பலந்தானெட்டு
நினைவாக மேற்றோலைச் சீவிப்போட்டு
சாரப்பா மொச்சைவிரை பிரமாணந்தான்
தளமாக வேநறுக்கிப் புதுச்சட்டிக்குட்
சேரப்பா செம்முள்ளிச் செந்திராயும்
திறமான முருக்கிலையுங் கரிசாலையாமே. 119

ஆமப்பா சிறுசெருப்பு சாற்றிலாட்டி
அப்பனே சாறுவகை படிகால்வீதம்
நாமப்பா புதுசட்டிச் சுச்கில்விட்டு
நலமாக வெவ்வேறே ரவியுலர்த்தித்
தாமப்பா விடித்துநன்றாய்ச் சூரணித்துத்
தளமாக வடிகொண்டே யப்பால்வைத்து
போமப்பா தக்கோலம் வாலுளுவைவித்து
புகழான கூகைநீறு கரியபோளங்கூட்டே. 120

கூட்டப்பா வாய்விளங்கந் தான்றிக்காய்நெல்லி
கூறான திப்பிலியுந் திப்பிலிமூலம்
நாட்டப்பா வகையொன்று பலந்தான்வாங்கி
நலமாக விளவறுப்பாய்ச் சூரணித்து
கூட்டப்பா வழுக்குருப் பொன்முசுக்கை
குருவான கண்டங்கத் திரிநன்னாரி
நீட்டப்பா நிலப்பனையும் வகையொன்றுக்கு
நினைவாகப் பலமிரண்டு நிறுத்துக்கொள்ளே. 121

கொள்ளப்பா சுத்திசெய் திடித்துத்தூளாய்க்
குணமாக வடிகொண்டு வைத்துக்கொண்டு
விள்ளப்பா மூவகைத்தூ ளொன்றாய்க்கூட்டி
விளங்கவே சர்க்கரையைச் சமனாய்வாங்கி
நள்ளப்பா வாவின்பால் படியிரண்டில்
நலமாகச் சர்க்கரையைக் கரைத்துக்கொண்டு
அள்ளப்பா வடுப்பேற்றிப் பாகதானால்
அப்பனே முன்தூளைக் கொட்டிக்கிண்டே. 122

கிண்டப்பா தூளாக நன்றாய்க்கிண்டி
கிருபையாய்ப் புதுக்கலசந் தனிலடைத்து

(120) கரியபோளம் - கறுப்புக்குங்கிலியம்.

நண்டப்பா வேருகடிதா னிருநோய்கொள்ள
நலமாகத் தீருநோய் நவிலக்கேளு
கண்டப்பா கிராணிவகை யெல்லாந்தீருங்
கருவான பிரமியங்கள் சூசிகவாய்வு
கண்டப்பா வாதமொடு பித்தமெல்லாங்
கண்காணு தோடுமடா கண்டுகொள்ளே. 123

கொள்ளவே யந்திரமாம் வாய்வுதீரும்
கூறான மேகவகை வாதைச்சூலை
கொள்ளவே யக்கினியா மந்தந்தீரும்
கூர்ப்பான வாயூறல் வாய்கசப்பு
கொள்ளவே வயிற்றிலுள்ள வியாதியெல்லாங்
குடிபோகுஞ் சவுபாக்கிய சுண்டிகண்டால்
கொள்ளவே புளிகசப்புப் பத்தியந்தான்
கூறான புகையோடு பெண்ணுந்தள்ளே. 124

அக்கினி சூரணம்

தள்ளப்பா வக்கினியாஞ் சூரணத்தைச்சொல்வேன்
தளமான கொடிவேலி திரிகடுகுவோமம்
விள்ளப்பா சிறுதேக்கு யானைதிப்பிலியுங்கோஷ்டம்
விளங்கியதோ ரண்டுப்பு வகையொன்றுபலந்தான்
நள்ளப்பா காயங்கால் வசம்புகால்தான்
நலமான கடுகுபொடி யரைப்பலந்தான்கூட்டி
தெள்ளப்பாயிளவறுப்பாய்ச் சூரணித்துத்
திறமான சீனிசமன் கூட்டிக்கொள்ளே. 125

திரிராக்ஷத சூரணம்

கொள்ளவே வெருகடித்தூள் வெந்நீரிற்கொள்ளக்
கூறான கிராணிவகை யுதிரவாய்வு
பள்ளவே முகவாய்வு வாதமெல்லாம்
பறக்குமது திரிராக்ஷத சூரணங்கேள்
தள்ளவே மூந்திரிகைப் பேரீச்சம்பழந்தான்
தளமான வதிமதுரம் முட்காவேளை
நள்ளவே நெற்பொரியு முத்தக்காசு
நலமான வேலமொடு கிராம்புகூட்டே. 126

கூட்டுவாய் கொத்தமல்லி மிளகுவேலி
கூறான திப்பிலியுங் கூகைநீறும்
நாட்டுவாய் சாதிக்காய் சாதிபத்திரிகூட
நலமான வால்மிளகு லவுங்கப்பத்திரி
ஆட்டுவாய் வகையொன்று பலமொன்றாக
அப்பனே சூரணித்துச் சர்க்கரையைக்கூட்டி

(126) முத்தக்காசு-கோரைக்கிழங்கு.

வேட்டுவாய் வெருகடிதான் தேனிற்கொள்ள
வெகுசுருக்காய்ச் சொல்லுகிறேன் விளம்பக்கேளே. 127

கேளப்பா வந்திரவாய்வு பாண்டுரோகம்
கெடியான தாபசுர மயக்கந்தூக்கம்
வாளப்பா பித்தவகை நாற்பதுந்தான்
வளமான வரோசிகங்க ளன்னதோஷம்
நாளப்பா வுஷ்ணநோய் சேத்துமங்கள்
நலமான வக்கினியா மந்தவாய்வு
தாளப்பா கையெரிவு காந்தமெல்லாம்
தவறுண்டே போகுமடா நெய்யிற்கொள்ளே. 128

அசுவகெந்தி சூரணம்

கொள்ளவே யசுவகெந்தி சூரணங்கேள்
குலமான லவங்கமொன்று நாகப்பூண்டு
தள்ளவே யேலம்நால் மிளகோரெட்டு
தளமான திப்பிலியீ ரெட்டுசுக்கு
விள்ளவே முப்பத்தி ரண்டுங்கூட்டி
விசையான வசுவகெந்தி யறுபத்துநாலும்
நள்ளவே சுத்திசெய் துலர்த்திக்கொண்டு
நலமாக விளவறுப்பாய்ச் சூரணந்தான்செய்யே. 129

செய்யப்பா சமனுய்ச்சர்ச் கரையைக்கூட்டித்
திறமான வாவின்பால் நெய்யிற்கொள்ள
கையப்பா வெருகடிதான் கொள்ளும்போது
கனமான மேகவகை யெல்லாந்தீரும்
மெய்யப்பா வஸ்திசுரம் வெட்டைபோகும்
மேலான சுவாசமோ டிளைபோகும்
தையப்பா மேகத்தின் பாண்டுபோகும்
தளமான ஆறலெல்லாஞ் சாராதன்றே. 130

கண்டாத்திரி சூரணம்

சாரவே கண்டாத்திரி சூரணஞ்சொல்வேன்
தருவான விஞ்சியது பலந்தான்பத்து
சேரவே மேற்றோலைப் போக்கிப்போட்டு
சிறுகவே நறுக்கியதைப் பழச்சாறாட்டி
தாரவே நாளொன்று ஊறப்போட்டு
தவறாமல் மறுநாள்தான் ரவியுலர்த்தி
ஆரவே சீரகமும் பலந்தானென்று
அப்பனே முன்போலே பழச்சாறாட்டே. 131

ஊட்டியே மறுநாள்தான் காயப்போட்டு
உத்தமனே மிளகொடுதா ளிசபத்திரி

நாட்டியே திப்பிலியின் மூலங்கிராம்பு
நலமான கோஷ்டமொடு வாய்விளங்கம்
வாட்டியே யிளவறுப்பாய்ச் சூரணித்து
வளமான சர்க்கரைதான் சமனுய்க்கூட்டி
நீட்டியே வெருகடிதான் கொண்டாயானல்
நீங்கிவிடும் பித்தமுதல் வாய்வுபோமே. 132

போமப்பா வரோசியங்க ளன்னதோஷம்
புகழான பித்தவெட்டை பொருமல்விம்மல்
நாமப்பா வாயுவொடு வாதமெல்லாம்
நாடாது சூலையெல்லா நளினமாகும்
சேமப்பா வயிற்றிலுள்ள வியாதியெல்லாம்
திறமாகத் தீருமடா பத்தியங்கார்
நாமப்பா வுலகோர்க்கா யிரங்கிச்சொன்னேம்
நலமான சூரணத்தை நாட்டிப்பாரே. 133

தாளிசப்பத்திரி சூரணம்

நாட்டியே சொல்லுகிறேன் புலத்தியனேயையா
நலமான தாளிசப் பத்திரிசூரணந்தான்
காட்டியே தாளிசப்பத்திரி பலந்தான்பத்து
கருவான திரிகடுகு திரிபலாதி
நீட்டியே கோஷ்டமோ டக்கிராகாரம்
நினைவாக வத்திதிப் பிலிசீரகம்
கூட்டியே கொத்தமல்லி வாய்விளங்கங்
கூறுன கிராம்பேலஞ் சாதிக்காயே. 134

காயோடு பத்திரியு மாஞ்சில்சோம்பு
கருவான வால்மிளகு லவுங்கப்பட்டை
தாயோடு விவையெல்லாம் பலமொன்ருகத்
தவருமல் சூரணித்து வடியேகொண்டு
சேயோடு சர்க்கரைதான் சமனுய்க்கூட்டித்
திறமாக பிசைந்துகொண்டு வெருகடிதானேரம்
வாயோடு மண்டலந்தான் கொண்டாயானல்
வாங்குமடா க்ஷயகாச மீளைபோமே. 135

போமடா வஸ்திசுர மஸ்திவெட்டை
பொறுக்காத நீர்த்தாகம் புண்ணுநெஞ்சில்
நரமடா பித்தவெட்டை பித்தப்பாண்டு
நாடாது கிராணிவகை யெல்லாந்தீரும்
தாமடா வரோசிகங்க ளன்னதோஷம்
தளராத விம்மலொடு விக்கல்கக்கல்
சாமடா கைகாலி லெரிவுகாந்தல்
சாந்தமாம் புளியோடு புகையுந்தள்ளே. 136

பஞ்சதீபாக்கினி சூரணம்

தள்ளவே பஞ்சதீ பாக்கினியென் னுந்
தளமான சூரணத்தைச் சொல்லக்கேளு
விள்ளவே திரிகடுகோ டேலஞ்சீரகம்
விதமாக வகையொன்று பலமொன்றாக
நள்ளவே யிளவறுப்பாய்ச் சூரணித்து
நலமாக வடிகொண்டு சர்க்கரைதான்சேர்த்து
தெள்ளவே தேனெய்யில் வொருகடிதான்கொள்ளத்
திறமாகத் தீருநோய் செப்பக்கேளே. 137

செப்புகிறே னுஷ்ணநோய் சூலைவாய்வு
சேர்ந்தபித்த வாயுவொடு சிலேத்மரோகம்
தப்புகிறேன் பொருமலொடு செரியாமந்தம்
தளமான மயக்கமொடு கிறுகிறுப்பு
வெப்புகிறே னஸ்திசுர மஸ்திவெட்டை
வேறான மூலத்தின் வாய்வுதீரும்
நப்புகிறேன் புளிகசப்பு புகையுந்தள்ளு
நலமான காந்தம்வைத்து நலமாய்க்கொள்ளே. 138

நிலவாகைச் சூரணம்

நலமாகச் சூரணமொன்று சொல்லக்கேளு
நன்றான நிலவாகைச் சுக்குங்கூட்டி
பிலமாக மிளகுவாய் விளங்குமோமம்
பேராக வகைக்குவொரு பலமேதூக்கி
சிலமாக ரவிமுகத்தி லுலரப்போட்டு
சிதறாம லிடித்துச்சூ ரணமேசெய்து
தலமாகச் சர்க்கரைதான் சமனாய்கூட்டித்
தவறாம லிருநேரங் கொண்டாற்கேளே. 139

கேளப்பா வாயுவென்ற தெல்லாம்போகுங்
கெடியான பித்தமெல்லாங் கீழ்நோக்கிப்போம்
வாளப்பா ஊஷ்ணநோ யெல்லாந்திரும்
வளமான பொருமலொடு விம்மல்தீரும்
நாளப்பா சேத்துமநோ யெல்லாந்தீரும்
நலமான விக்கலொடு வாந்திதீரும்
தாளப்பா வுடம்பெரிவு சுவாசகாசம்
தவறுண்டு போகுமடா சாற்றக்கேளே. 140

சாற்றுகிறே னீருகல் மலபந்தங்கள்
தளராத வயிறுவிம்ம லிருமல்தீரும்
தேற்றுகிறேன் குன்மமெட்டு மகோதரங்கள்
தெளிவான வாயுவெல்லாந் தீருந்திரும்

ஆற்றுகிறேன் கெற்பவலி கெற்பரோகம்
ஆச்சரியம் புழுக்களெல்லா மகன்றுபோகும்
காற்றுகிறேன் வெந்நீரிற் கொண்டாயானால்
கலங்காதே வயிற்றி லுள்ள வியாதிபோமே. 141

வல்லாரைச் சூரணம்

போமப்பா சூரணமொன்று சொல்லக்கேளு
புதுமையாம் வல்லாரைப் பாலிற்போட்டு
நாமப்பா வவித்துலர்த்திக் காயப்போட்டு
நலமாகச் சூரணித்துப் பலம்பத்தானால்
தாமப்பா கிராம்பேலஞ் சாதிக்காயும்
தளமான பத்திரியு மாசக்காயும்
தேமப்பா தாளிசப் பத்திரிதிரிபலாதி
திறமாக விளவறுப்பாய்ச் சூரணந்தான்செய்யே. 142

செய்யப்பா வகையொன்று பலந்தானென்று
திறமாக விரண்டுமொன்றாய் சேர்த்துக்கொண்டு
பையப்பா சர்க்கரைதான் சமமாய்க்கூட்டிப்
பதறாமல் வொருகடிதா னெய்யிற்கொள்ள
தையப்பா மேகமெல்லாம் தவறுண்டேபோம்
சரீரத்தில் சாந்தியெல்லாஞ் சாந்தமாகும்
கையப்பா பிரமியங்கள் கிரந்தியெல்லாம்
கனமான வூஷ்ணநோய் காணாதன்றே. 143

காணாது நீருகல் நீரெரிப்பு
கண்ணெரிவு கண்புகைச்சல் காணாதோடும்
தோணாதே யுடம்பெரிவு மூலச்சூடும்
சுறுக்கான நீர்ச்சூடுங் குளிர்ந்துபோகும்
நாணாது மதுமேகந் தந்திமேகம்
நாடாது க்ஷயரோக நளினமாகும்
கோணாது தேகமெல்லாங் குளிர்ச்சிகாணும்
கொண்டுவா வப்பிரேகம் வைத்துக்கொள்ளே. 144

சஞ்சீவிச் சூரணம்

கொள்ளவே சஞ்சீவி சூரணத்தைச்சொல்வேன்
குணமான சீந்திலடித் தண்டுவாங்கி
விள்ளவே மேற்றோலை வாங்கிப்போட்டு
வெருளாதே நறுக்கியதை யுலரப்போட்டு
கள்ளவே யிடித்துநன்றாய்ச் சூரணித்துக்
கருவாக வடிகொண்டு படித்தூள்வாங்கி
நள்ளவே முந்நூற்றில் சுத்திசெய்து
நலமான பொடிபடிக்கு ஆவின்பாற்படியே. 145

படியாக வரைப்படிதான் சீனிபோட்டு
பாங்காக ரவியுலர்த்திக் காய்ந்தபின்பு
அடியாக உரலிலிட் டிடித்துக்கொண்டு
அப்பனே சாதிக்காய் சாதிபத்திரி
கடியாக வால்மிளகு யேலங்கிராம்பு
கசகசா தாளிசமு மாசக்காயும்
வடிவாக விளவறுப்பாய்ச் சூரணித்து
வளமாக வகைக்கொரு பலந்தான்கூட்டே. 146

கூட்டியே யிரண்டுமொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு
குறையாம லாறுபலஞ் சீனிசேர்த்து
நாட்டியே வெருகடிதா னெய்யிற்கொள்ள
நலமாகத் தீருநோய் நவிலக்கேளு
தாட்டிகமா மேகநீ ரிருபதும்போம்
தளமான பிரமியங்கள் மேகமெல்லாம்
வாட்டியே வற்றியதோர் தேகமெல்லாம்
வளமாகு மஸ்திசுரம் வெட்டைபோமே. 147

போமப்பா மூலத்தின் சூடுபோகும்
பொல்லாத பித்தவகை யெல்லாம்போகும்
நாமப்பா கண்ணெரிவு கைககால்காந்தல்
நாடாது தேகமெல்லாங் குளிர்ச்சியாகும்
தாமப்பா ஊறலெல்லாந் தவறுண்டேபோம்
தளமான கபாலத்தின் ரணங்கள்தீரும்
வேமப்பா வாலரசச் செந்தூரந்தான்
வெகுசுருக்காய் பணவெடையப் பிரேகங்கொள்ளே. 148

ஏலாதி சூரணம்

கொள்ளவே யேலாதி சூரணங்கேள்
குணமான லவுங்கமொன்று மிளகிரண்டு
விள்ளவே நாகம்நால் தாளிசமெட்டு
விதமான கூகைநீறு பதினாறாகும்
நள்ளவே சுக்கதுதான் முப்பத்திரண்டு
நலமான வேலமது வறுபத்துநாலு
கள்ளவே சர்க்கரைதான் சமனாய்க்கூட்டிக்
கலந்துபுது கலசமதிற் பதனம்பண்ணே. 149

பண்ணவே வெருசடிதா னிருநேரங்கொள்ளப்
பறக்குமடா பித்தமொடு வாதம்வாய்வு
தண்ணவே கிரந்திரண மரிகிரந்தி
தளமான மேலூறல் சொரிசிரங்கு
நண்ணவே சிலவிஷங்க ளாடாதோடும்
நலமான குஷ்டமொடு குறைநோய்தீரும்

பெண்ணவே பெரும்பாடு வெலும்புருக்கிப்
பின்பாரா தோடுமின்ன மொன்றுகேளே. 150

அசுவகெந்தி பலராக்ஷதைலம்

ஒன்றான வுலகத்தோர் நோய்கட்கெல்லாம்
உரைக்கிறேன் தைலமொன் றுறுதியாக
நன்றான வசுவகெந்தி பலராக்ஷத
நாமமது சொல்லுகிறே னவிலக்கேளு
சென்றான வசுவகெந்திப் பலமூவைந்து
சிற்றாமுட்டிப் பதினைந்து வெள்ளெருக்குநாலு
குன்றான நன்னாரி சீந்தில்விலாமிச்சு
கோரையுட னெய்ச்சட்டி யவுரியெண்ணே. 151

எண்ணவே நாரத்தை துளசிவெட்டி
இதமான மூவகை பலந்தானாலு
நண்ணவே யகில்நாலு தேவதாரநாலு
நலமான கீழ்நாடன் பலந்தானெட்டு
தண்ணவே கொம்பரக்கு பலந்தானெட்டு
தள்ளிவிட்டு வகையெல்லாம் பதினைந்தாகும்
ஒண்ணவே யிடித்துநன்றா யிருதூணிநீரில்
ஒருவிறகாய்த் தீயிட்டு சோடசத்தொன்றாக்கே. 152

ஆக்குவா யெள்ளெண்ணெய் சேர்தானைந்து
அதின்பாதி தயிர்தண்ணீர் பால்சேரைந்து
தூக்குவாய் கலக்கவகை மருந்துகேளு
துடியான திரிகடுகு திரிபலாதி
மாக்குவாய் கஸ்தூரி மதுரங்கோஷ்டம்
டாஞ்சில்முச் சீரகமும் பூஞ்சாந்துகெந்தம்
பாக்குவாய் மஞ்சள்ரோ கணிசெவ்வள்ளி
பச்சிலைபூ லாமூலங் கிளியூறல்கூட்டே. 153

கூட்டுவாய் சதகுப்பி லவுங்கப்பட்டை
கூறேலம் வகைக்கரைப் பலமதாக
ஆட்டுவா யாவின்பால் விட்டுநன்றாய்
அப்பனே கியாழமெண்ணெய் தனிற்கரைத்து
நாட்டுவா யடுப்பேற்றிக் கொதிக்கும்போது
நலமாக முன்னரக்குக் கியாழம்விட்டு
மூட்டுவா யடுப்பேற்றி முதிராமற்றான்
முன்னவற்குப் பூசித்து வடித்திடாயே. 154

வடித்திட்ட தைலமது முழுகும்போது
வாகாகத் தீருகிற வியாதிகேளு
பிடித்திட்ட மேகத்தின் சூலைபதினெட்டும்
போரான வாதத்தின் சூலைதானும்

மடித்திட்ட வாதசுரம் பித்தசுரவாய்வு
மயக்கமொடு சிலேத்மசுர மாண்டுபோகும்
அடித்திட்டுச் சண்ணுமடா பித்தவெட்டை யெல்லாம்
அணுகாதே யக்கினியா மந்தந்தானே. 155

மந்தமொடு பாண்டுவகை யெல்லாம்போகும்
மைந்தனே கண்புகைச்சல் கைகால்காந்தல்
பெந்தமா முடப்பெரிவு சுவாசகாசம்
பின்பாரா தோடுமடா மேகமெல்லாம்
பந்தமாம் பத்தியங்கள் புளிக்கசப்பும்
பாங்கான புகையோடு பெண்ணுந்தள்ளு
இந்தவகை யென்னைப்போ லியாருஞ்சொல்லார்
இகத்திலுள்ளோர் பிழைக்கவென் றியங்கினேனே. 156

வில்வாதி தயிலம்

இயங்கியே தைலமொன்று சொல்லக்கேளு
இதமான வில்வாதி யென்றநாமம்
பரங்கியே வில்வம் விலாமிச்சைக்கோரை
பாங்கான சஞ்சீவி வகையொன்றுக்கு
தரங்கியே கீழ்நாடன் பலந்தானெட்டு
தானிடித்து கலவெள்ள நீரிற்போட்டு
அரங்கியே சோடசத் தொன்றாகக் காய்ச்சி
அப்பனே கொம்பரக்கு சேர்தானரண்டே. 157

ரண்டான தூணிநீரெட் டொன்றாக்கி
நினைவாக எள்ளெண்ணெய் படிதான்சுத்தி
குன்றான வாவின்பால் படிதானஞ்சு
குலமான கற்கவகை சொல்லக்கேளு
நன்றான திரிகடுகு திரிபலாதி
நலமான கஸ்தூரி மதுரங்கோஷ்டம்
கன்றான விருசீர மாஞ்சில்மஞ்சள்
கருதுகெந்தங் கிளியூறல் பூஞ்சாந்தென்னே. 158

என்னவே செவ்வள்ளி லவுங்கப்பட்டை
இதமான பச்சையொடு பூலாவேலம்
பன்னவே வகையொன்று பலந்தான்வாங்கி
பாங்கான வாவின்பால் விட்டேயாட்டி
முன்னவே கியாழமெண்ணெய் தனிற்கரைத்து
மோகமா யடுப்பேற்றிக் கமலமாக
கன்னவே முதிராமல் மெழுகுபதமானால்
கணபதியைப் பூசித்து வடித்திடாயே. 159

வடித்திட்ட தைலமது முழுகும்போது
வாகாகத் தீருகிற வியாதிகேளு

பிடித்திட்ட மேகநீ ரிருபதும்போம்
போரான பித்தவகை நாற்பதும்போம்
துடித்திட்ட குன்மமெட்டுந் துலைந்துபோகுந்
துலையாத சிரசில்நோய் சொல்லாதோடுங்
கடித்திட்ட மேகவகை வரட்சியெல்லாங்
கண்காணு தோடுமடா கருதிப்பாரே. 160

குமரித்தைலம்

கருதியேநீ கேளுபுலத் தியனேயையா
கருவான குமரியிட தைலஞ்சொல்வேன்
விருதான குமரிச்சாற் படியிரண்டு
வெள்ளாவின் பாலதுதான் படியிரண்டு
சருதான எள்ளெண்ணெய் படியிரண்டு
சாற்றுகிறேன் கற்கவகை திரிகடுகுகோஷ்டம்
வருவானமாஞ்சிலொடு திரிபலையுஞ்சீரம்
மதுரமொடு பூஞ்சாந்தோ டேலமென்னே. 161

என்னவே பச்சையிலை பூலாமூலம்
இதமான லவுங்கப்பத் திரியும்பட்டை
அன்னவே செவ்வள்ளி யக்கிராகாரம்
அருளான கஸ்தூரி லவுங்கங்கெந்தம்
தின்னவே ரோகணிசெண் பகப்பூபானே
திப்பிலியு மந்திஷ்டி சோம்புமஞ்சள்
பன்னவே வகையொன்று பலமைதான்வாங்கி
பரிவான வாவின்பால் படிவிட்டாட்டே. 162

ஆட்டியே கரைத்தெண்ணெய்ச் சாற்றினுள்ளே
அப்பனே யடுப்பேற்றிக் கமலமாக
மூட்டியே மெழுகுபத மாகவாங்கி
முதிராமல் வடித்ததனைச் சீசாவில்விட்டு
நாட்டுவாய் தானியத்தில் வைத்துமூடி
நலமாக மண்டலங்கால் சென்றபின்பு
தாட்டிகமாய் மண்டலந்தான் முழுகும்போது
சாதகமாய் தீருநோய் சாற்றக்கேளே. 163

கேளடா மேகமென்ற தெல்லாம்போகும்
கெடியான வஸ்திசுரம் வெட்டைபோகும்
தாளடா பித்தமெல்லாஞ் சாந்தமாகுஞ்
சரீரத்தில் வரட்சிமுத லூரல்போகும்
வேளடா குன்மமெட்டும் பாண்டுமாறும்
வெளுப்பான தேகமெல்லாம் வண்டுபோலாம்
வாளடா வைத்தியற்காய் தைலஞ்சொன்னேன்
வளமான மனமுடையாய் மகிழ்ந்துபாரே. 164

கொம்பரக்குத் தைலம்

மகிழவே கொம்பரக்குத் தைலங்கேளு
மசத்தான கொம்பரக்குப் பலந்தானெட்டு
நெகிழவே துணிநீ ரெட்டொன்றாக்கி
நிசமான தாளிக்குள் வடித்துவிட்டுத்
தாழவே எள்ளெண்ணெய் சேர்தானஞ்சு
தயிர்தண்ணீர் சேரிரண்டு பால்சேரஞ்சு
நிகழவே காடியது சேர்தான்ரண்டு
நிசமாகக் கற்கவகை சொல்லக்கேளே. 165

கேளப்பா சதகுப்பை கடுகுரோணி
கிளிவூறல் பூஞ்சாந்து பச்சைப்பூலா
நாளப்பா செவ்வள்ளி லவுங்கப்பத்திரி
நலமான லவுங்கத்தோல் மாஞ்சில்கோஷ்டம்
தாளப்பா கஸ்தூரி மதுரங்கெந்தந்
தயவாக விருசீரம் விருகுவேலம்
ஆளப்பா வகையொன்று கழஞ்சிரண்டு
அப்பனே யாவின்பால் விட்டிட்டாட்டே. 166

ஆட்டுவா யெண்ணெய்க்குட் கரைத்துவிட்டு
அடுப்பேற்றி மெழுகுபத மானவாறு
நாட்டியே வடித்ததனை முழுகும்போது
நலமாகத் தீருகிற வியாதிகேளு
தாட்டிகமாம் பித்தவெட்டை யஸ்திசுரம்போம்
தலைமயக்கம் வாயூறல் சாந்தமாகும்
வாட்டியதோர் சீதசுர மாண்டுபோகும்
வற்றியதோர் தேகமெல்லா மூறும்பாரே. 167

ஊறுமே கணவெட்டை கணசுரங்கள்
உத்தமனே கணப்பாண்டு வெளுத்ததேகந்
தேறுமே தேகத்தில் வலிகடுப்புத்
திறமான சூலையெல்லாந் தீருந்தீரும்
மாறுமே கற்றாழை புறங்கைவீசி
நலமான தழுதளையு நாடாதோடும்
சீருமே காசமெல்லாந் தீர்ந்துபோகுந்
திறமான வொன்றைவிட் டொருநாளென்னே. 168

மிருகாமலத்தைலம்

என்னவே பத்தியந்தான் புளிகரப்பு
இதமான புகைபோடு பெண்ணுமாகா
தன்னவே தைலமொன்று சொல்லக்கேளு
தனமான மிருகாமலத் தைலஞ்சொல்வேன்

நன்னவே மிருகாமலச் சாறுபடிரண்டு
நலமான காணிச்சாறு படியிரண்டு
பன்னவே குமரிச்சாறு படியிரண்டு
பாங்கான செவ்விளநீர் படிதானெட்டே. 169

படியான சிறுகீரை சாறுபடிரண்டு
பழுதில்லா வாவின்பால் படிதான்ரண்டு
செடியான யெள்ளெண்ணெய் படிதான்மூன்று
சேர்க்கவிதிற் கற்கவகை மருந்துகேளும்
கொடியான மதுரமொடு கோஷ்டமேலங்
குரோசாணி பச்சையிலைப் பூலாமூலம்
கடியான கஸ்தூரி மாஞ்சில்தீரங்
கருவான பத்திரியுஞ்சா திக்காய்கூட்டே. 170

கூட்டுவாய் லவுங்கப்பத் திரியும்பட்டை
கொடிதான திரிகடுகு திரிபலாதி
நாட்டுவாய் பூஞ்சாந்து சோம்புவால்மிளகு
நலமான வகையொன்று கழஞ்சுமூன்று
ஆட்டுவா யாவின்பால் விட்டுநன்றாய்
அப்பனே சாறெண்ணெய் தனிற்கரைத்து
மூட்டுவா யடுப்பேற்றிக் கமலமாக
முதிராமல் கணபதிக்குப் பூசைபண்ணே. 171

பண்ணியே மெழுகுபதந் தனில்வடித்து
பாங்காக முழுகிவரத் தீருநோய்கேள்
கண்ணிலே காசமோ டந்திமாலை
கருவான நேத்திரநோய் தொண்ணூற்றாறு
மண்ணிலே பித்தவெட்டை பித்தவாய்வு
மயக்கமுட னஸ்திவெட்டை மாண்டுபோகும்
தண்ணிலே யுடம்பெரிவு கைகால்காந்தல்
தளமான வுஷ்ணநோய் சாராதென்னே. 172

சந்தனாதித்தைலம்

சாரவே சந்தனாதித் தைலஞ்சொல்வேன்
சார்பான புலத்தியனே சொல்லக்கேளு
சேரவே மலாக்காவின் சந்தனத்தூள்
செப்புகிறே னடையொன்று தூக்கியேதான்
வாரவே விலாமிச்சை வெட்டிவேரை
வகையுடன் சிந்திலொடு சிற்றாமுட்டி
காரவே பேராமுட்டி பேராமல்லி
கருவான சிற்றாமல்லி யகவமாமே. 173

ஆமப்பா நன்னாரி பற்பாடகந்தான்
அப்பனே வகையொன்று பலந்தானுலு

போமப்பா விருநாணி வெள்ளநீரில்
பொடியாக விடித்திடித் தடுப்பிலேற்றி
நாமப்பா சோடசத்தொன் ருகக்காய்ச்சி
நலமான பாண்டத்தில் வடித்துக்கொண்டு
தாமப்பா செவ்விளநீர் படியிரண்டு
தப்பாமல் காணிச்சாறு படியிரண்டுவாரே. 174

வாரப்பா சிறுகீரை படிதானென்று
வாகான பொடுதலைச் சாறுபடியொன்று
சேரப்பா வல்லாரை படிதானென்று
சிறுசின்னிச் சாறுதான் படிதானென்று
காரப்பா பொற்றலைச் சாறுபடியொன்று
கருவான நெல்லியின் சாறுபடியொன்று
ஆரப்பா கர்ப்பூர வள்ளிச்சாறு
அழகாகக் கூடவிட்டுப் படிதானென்றே. 175

ஒன்றப்பா தாழையுட விழுதின்சாறு
உத்தமனே யெள்ளெண்ணெய் படிதான்மூன்று
நன்றப்பா நறுநெய்தான் படிதானென்று
நலமான வாவின்பால் படிதானறு
குன்ருன தயிர்தண்ணீர்ப் படியிரண்டு
குறையாமல் பாண்டத்தி லூற்றிக்கொண்டு
சென்றுநீ யடுப்பிலே கொதிக்கவைத்து
திறமான கடைச்சரக்கு சொல்லக்கேளே. 176

கேளப்பா திரிகடுகு திரிபலாதி
கிருபையாங் கஸ்தூரி மதுரமேலம்
தாளப்பா பூஞ்சாந்து கிளியூறற்பட்டை
தளமான லவுங்கப்பத் திரியும்பட்டை
நாளப்பா கிராம்புசா திக்காய்பத்திரி
நலமான பச்சையிலே பூலாமூலம்
ஆளப்பா செவ்வள்ளி செண்பகப்பூ
அப்பனே கெந்தமொடு சீரமரண்டே. 177

ரெண்டான செங்கழுநீர் கோஷ்டமக்ரோ
நிலையான மஞ்சிஷ்டி பலகைமஞ்சள்
செண்டான சந்தனமு முத்தக்காசும்
திருக்கான வலம்புரிக்கா யிடம்புரிக்காய்
குன்ருமல் வகையொன்று பலமரைதான்வாங்கி
குலமான வாவின்பால் விட்டேயாட்டி
வென்ருன மேஷப்பால் படியிரண்டில்கரைத்து
வீறவே வெண்ணெயிலே விட்டுக்கேளே. 178

(178) மேஷம் - வெள்ளாடு

கேளப்பா வடுப்பேற்றிக் கமலமாகக்
கிருபையால் மெழுகுபதந் தன்னிலேதான்
நாளப்பா கணபதிக்குப் பூசைபண்ணி
நலமான கம்பிளியால் வடித்துக்கொண்டு
தாளப்பா குங்குமப்பூ கோரோசனையும்
தளமான புழுகதிலே கழஞ்சுவீதம்
கேளப்பா பொடித்திட்டுக் கலசத்துள்ளே
குணமாகத் தாளியதில் வைத்துமூடே. 179

மூடியே மண்டலங்கால் சென்றபின்பு
முழுகிவரச் சீக்காய் யரைப்பதாகும்
நாடியே தீருகிற வியாதிகேளு
நாடாது மேகமென்ற யிருபதுந்தான்
சாடியே நீரிழிவு நீரருக்கல்
தள்ளுண்டு போகுமடா க்ஷயந்தானெட்டும்
காடியே கண்ணெரிவு கண்புகைச்சல்
கையெரிவு காலெரிவு மோடுங்காணே. 180

ஓடுமடா பிரமியங்கள் ரிணங்கிரந்தி
உத்தமனே கற்ருழை நாற்றந்தீரும்
சாடுமடா வஸ்திசுர மஸ்திவெட்டை
சரீரத்தில் மயக்கமெல்லாஞ் சாந்தமாகும்
போடுமடா விந்திரகண்டி புண்புரைகள்போகும்
புழுவெட்டு கண்டத்தின் புரைகள்போகும்
தேடுமடா பெண்மேலே மோகமெத்தச்
சிக்காதே வலையினுள்ளே தெளிந்துநில்லே. 181

தெளிந்துகொண்டு மாயத்தில் சிக்கவேண்டாம்
தேகத்தி லுள்ளநோய் சிதறிப்போகும்
அளிந்ததொரு குட்டமொடு சொரிசிரங்கும்
அப்பனே யுள்வெட்டை யாறிப்போகும்
நளிந்திந்தத் தயிலமது முழுகும்போது
நன்ருன புளியோடு புகைகசப்பு
வளிந்துமிக வாய்வென்ற பதார்த்தந்தள்ளு
வளமாகுஞ் சரீரமெல்லா மருணனுமே. 182

பொன்னுங்காணித்தைலம்

ஆமப்பா பொன்னுங்காணித் தைலங்கேளு
அப்பனே காணிச்சாறு படியிரண்டு
நாமப்பா கரிசாலைச் சாறுபடியொன்று
நலமான நெல்லிக்காய்ச் சாறுபடியொன்று
தாமப்பா யெள்ளெண்ணெய் படியிரண்டு
தப்பாம லாவின்பால் படியிரண்டு

வேமப்பா மதுரமது பலமிரண்டு
விருதான முலைப்பாலா லரைத்துப்போட்டே. 183

போட்டப்பா மெழுகுபதந் தனில்வடித்து
புகழாக முழுகிவரத் தீருநோய்கேள்
நீட்டப்பா நேத்திரநோய் தொண்ணூற்றாறும்
நிலைமைகெட்ட காசமெல்லா நீங்கிப்போகும்
வாட்டப்பா பித்தமெல்லாம் வாங்கிப்போகும்
வளமாகு நேத்திரங்க ளொளியேமீறும்
நாட்டப்பா ஊஷ்ணநோ யெல்லாந்தீரும்
நலமான கீழ்க்காய்நெல்லித் தைலங்கேளே. 184

கீழ்க்காய் நெல்லித்தைலம்

கேளப்பா கீழ்க்காயி நெல்லித்தானும்
கிருபையாய்த் தூக்கிடித்து தூணிநீரில்
வாளப்பா வெட்டொன்றாய் வடித்துக்கொண்டு
வளமான வெள்ளெண்ணெய் படியிரண்டு
நாளப்பா வாவின்பால் படியிரண்டு
நலமான சீரகந்தான் பலமிரண்டு
வேளப்பா பாலிலே யரைத்துவிட்டு
விருதாக மெழுகுபதம் வடித்துவாங்கே. 185

வாங்கியே முழுகிவரப் பித்தவெட்டை
மயக்கமொடு மஞ்சள்கா மாலைதீரும்
தாங்கியே வாந்தியெல்லாந் தவறுண்டேபோம்
தலைமயக்கம் வாயூறல் சாந்தமாகும்
தேங்கியே யுட்சுரங்கள் தீர்ந்துபோகும்
தேகத்தில் நடுக்கல்முதல் தீர்ந்துபோகும்
ஏங்கியே திரியாதே மனஞ்சோம்பர்தே
எளிதல்ல நோயப்பா விரங்கிப்பாரே. 186

ஆதண்டைத் தைலம்

பாரப்பா சிரசிலுள்ள சூலைதீரப்
பக்குவமாய்த் தைலமொன்று சொல்லக்கேளு
நேரப்பா வாதண்டை நொச்சிசங்கு
நினைவாக வெருக்கோடு சிற்றாமுட்டி
ஆரப்பா வகையொன்று பலம்பத்தாகும்
அப்பனே தூணிநீ ரெட்டொன்றாக்கிக்
காரப்பா வெருக்கினிட பழுப்புச்சாறு
கருவான படியொன்று பழச்சாறொன்றே. 187

ஒன்றப்பா எள்ளெண்ணெய் படிதானொன்று
உத்தமனே வேப்பெண்ணெய்படி யரைதான்கூட்டி

நன்றப்பா திரிகடுகு வோமம்பூண்டு
நலமான வசம்பேல மஞ்சள்கூட்டிக்
கன்றப்பா வரைத்தெண்ணெய் தனிற்கரைத்து
கருவான மெழுகுபதந் தனில்வடித்து
மொண்டப்பா முழுகிவரத் தீருநோய்கள்
முதலான சிரசிலுள்ள சூலைபோமே. 188

சூலைபோம் வாயுவெல்லாஞ் சொல்லாதோடுஞ்
சுருக்கான வாதத்தின் சூலைதீரும்
வாலையாந் திமிர்வாத மிரைப்புதீரும்
வயிற்றிலுள்ள வாயுவெல்லாம் வாங்கிப்போகும்
சோலைபோஞ் சிறுகடுப்பு நேத்திரக்குத்தல்
சொறிசிரங்கு கரப்பானோ டிரணங்கள்தீரும்
ஆலப்பா பத்தியந்தான் புளிகசப்பு
அப்பனே புகைவாய்வு பதார்த்தந்தள்ளே. 189

பதின்மூன்றுவித சன்னிக்குத் தைலம்

தள்ளவே சன்னியெல்லாங் கடலேபுக்கும்
தயவாகத் தைலமொன்று சொல்லக்கேளு
நள்ளவே வேப்பெண்ணெய் புங்கனெண்ணெய்
நலமான புன்னையெண்ணெய் பசுவின்னெய்யும்
கள்ளவே காட்டாமணக்கினெண்ணெய்
கருவாகச் சமன்கூட்டிச் சட்டியிலேவார்த்து
அள்ளவே முசுமுசுட்டை காலதாகும்
அடைவிலே யெண்ணெய்படி காலதாமே. 190

காலான படிவீதஞ் சேர்த்துக்கொண்டு
கருவான குக்குடத்தின் முட்டைபத்து
மாலாக மஞ்சளையுங் கூடவிட்டு
மயங்காதே கடைமருந்து சொல்லக்கேளு
சாலான சாதிலிங்கந் தீமுறுகலோடு
சமர்த்தான கெந்திரசம் பாஷாணந்தான்
ஆலான நாமியுடன் மிளகுதிப்பிலியும்
அழகான யானைத்திப் பிலியும்போடே. 191

போடுவாய் லவுங்கமொடு நேர்வாளந்தான்
புகழான கழஞ்சுநிரை சமனாய்க்கூட்டி
நாடுவாய் கொடிவேலி யியாழத்தாலே
நலமாகச் சாமமொன் றரைத்துக்கொண்டு
சாடுவா யெண்ணெயிலே தான்கரைத்து
சதிராகக் கொதிக்கையிலே யெருக்கம்பாலும்

(191) குக்குடம் - கோழி.

கோடுவாய் கொடிக்கள்ளி சதுரக்கள்ளி
குணமான விலைக்கள்ளிப் பாலுங்கூட்டே. 192

கூட்டியே திருகுகள்ளி நானுங்கள்ளி
கூசாதே படர்ந்திருந்த முள்ளிக்கள்ளி
சாட்டியே பால்வகைதா னுழக்குமாகும்
சாதகமா யெண்ணெயுடன் கலந்துகொண்டு
மூட்டியே கமலமாந் தீயிலன்பாய்
முதிராமற் கொதிக்கையிலே கஸ்தூரிகேளு
நீட்டியே யஞ்சுபண முலைப்பாலாலே
நீயரைத்துக் கரைத்தெண்ணெ யதனில்வாரே. 193

வார்த்திடுவாய் முலைப்பால்தான் படிகால்வீதம்
வளமான தேசிப்பால் படிகாலாமே
சேர்த்திடுவாய் காட்டெருமைப் பால்பலந்தான்
திரியாம லெண்ணெயிலே விட்டுக்காய்ச்சி
ஆர்த்திடுவா யாற்றலரி யிலைநால்போடு
அன்பாக வெள்ளுள்ளி யரைத்துப்போட்டு
மூர்த்திடவே மெழுகுபத மானவாறே
முன்னவனைப்பூசித்து வடித்திடாயே. 194

வடித்திட்ட தைலமதைப் பானையிலேயூற்றி
வாகுகோ ரோசனையுங் கழஞ்சிபொடித்திட்டு
பிடித்திட்ட சன்னிவகை பதின்மூன் றுக்கும்
பேரான கரண்டிநிறை யீந்தாயானால்
துடித்திட்ட சன்னியெல்லாந் தொலைந்துபோகும்
துடியான விசுவுக்குத் துவளைபோட
நடித்திட்ட நரம்பெல்லா மிருதுவாகும்
நலமில்லா விசுவெல்லா நளினமாமே. 195

நிலப்பனைக்கிருதம்

நள்ளவே கிருதமொன்று சொல்லக்கேளு
நலமான நிலப்பனையு மொதியம்பட்டை
விள்ளவே கருங்காலி நாகம்பட்டை
விதமான வேந்தனுட பட்டைதானும்
அள்ளவே வகையொன்று பலம்பத்தாக
அப்பனே யிடித்துநன்று யிருதூணிநீரில்
தள்ளவே சோடசத்தொன் றுகக்காய்ச்சித்
தளமான வாவின்பால் படிதான்ரண்டே. 196

ரண்டப்பா வாவின்பால் படிதான்ரண்டு
நினைவாகப் புளியாரைச் சாறுபடியொன்று

(193) நானுங்கள்ளி-இலைக்கள்ளி.
(196) வேந்தன்பட்டை-அரசன்பட்டை.

விண்டப்பா கோவையுட தண்டுச்சாறு
விதமாகப் படியதுதான் கூடவிட்டு
நன்றப்பா பொன்முசுட்டை சிறுகாஞ்சோறி
நலமான விலாம்வித்துக் கோத்தமல்லி
கன்றப்பா திரிகடுகு திரிபலாதி
கருவான பேரீச்சு முந்திரிகையாமே. 197

ஆமப்பா கற்கடமாம் பருப்பரத்தை
அப்பனே காட்டாத்தி கீழ்க்காய்நெல்லி
நாமப்பா வதிவிடையங் கூவிளத்தின்பிஞ்சு
நலமான விளாம்பிஞ்சு மாதுளையின்பிஞ்சு
தாமப்பா சந்தனமுஞ் சாத்திரபேதி
தளமான புளிவிரைத்தோல் முத்தக்காசு
வேமப்பா சிறுநாகம் லவுங்கப்பட்டை
விதமான குரோசாணி யோமங்கூட்டே. 198

கூட்டப்பா மருந்துவெள்ளை யமுக்குறுவேர்
கூசாதே வகைக்கிரண்டு கழஞ்சிவீதம்
ஆட்டப்பா வாவின்பால் விட்டரைத்து
அப்பனே நெய்தனிலே கரைத்துவிட்டு
மூட்டப்பா வடுப்பேற்றிக் கமலமாக
முதிராமல் மெழுகுபத மானபோது
நாட்டப்பா வடிகொண்டு பரணிசெய்து
நலமாக விருநேரங் கழஞ்சிகொள்ளே. 199

கொள்ளவே பெரும்பாண்டு வெலும்புருக்கிக்
கூறான பிரமியங்கள் சுடுப்புமூலம்
விள்ளவே கிராணிவகை யெல்லாந்தீரும்
விதமான சுக்கிலந்தா னிறுக்கும்பாரு
தள்ளவே சடம்வெளுப்பு கைகால்காந்தல்
தளமான குழியெரிப்பு நீர்க்கடுப்பு
நள்ளவே தீருமடா பத்தியங்கார்
நலமாகச் சீரகக்கி யாழங்கொள்ளே. 200

பொன்னுங்காணிக்கிருதம்

கொள்ளவே கிருதமொன்று சொல்லக்கேளு
குறிப்பான காணிச்சாறு படிதானொன்று
நள்ளவே பொற்கையான் சாறுபடியொன்று
நலமான பழச்சாறு படியரைதான்விட்டு
விள்ளவே யாவின்நெய் படிதானொன்று
விருதான வாவின்பால் படிதானொன்று
தெள்ளவே மதுரமது பலந்தான்ரண்டு
தெளிவான வாவின்பால் விட்டிட்டாட்டே. 201

ஆட்டியே நெய்க்குள்ளே கரைத்துவிட்டு
அடுப்பேற்றி மெழுகுபதமானவாறே
நீட்டியே சாதிக்காய் சாதிப்பத்திரி
நினைவாககோ ரோசனையுங் கற்கண்டப்பா
நாட்டியே கழஞ்சிநிறை பொடித்துப்போட்டு
நலமாகக் கிண்டிவைத்துக் கரண்டிவீதம்
மூட்டியே யிருநேரங் கொண்டாயானால்
முக்கியமாய்த் தீருமடா மூலச்சூடே. 202

சூட்டுடனே யூஷ்ணநோ யெல்லாந்தீரும்
சுகமாக மேலெரிவு கைகால்காந்தல்
நாட்டுடனே யுலர்த்துகின்ற மேகந்தீரும்
நணுகாது வயிற்றிலுள்ள வெரிகட்டெல்லாம்
வாட்டுடனே நேத்திரமெல்லாங் குளிர்ச்சியாகும்
வளமாகும் வாய்நாற்றம் விட்டுப்போகும்
தீட்டுடனே யிறங்குகின்ற பிரமியந்தான்
தீருமடா புளியாரைக் கிருதங்கேளே. 203

புளியாரைக்கிருதம்

கேளடா புளியாரைச் சாறுபடியொன்று
கிருபையுள்ள வள்ளிச்சாறு படிதானொன்று
நாளடா காணிச்சாறு படிதான்ரண்டு
நலமான செவ்விளநீர் படிதான்ரண்டு
தாளடா வாவின்னெய் சேர்தானஞ்சு
தளமான கருவாவின் பால்சேரஞ்சு
ஆளடா சீரகமு மாசக்காயும்
அப்பனே மதுரமொடு கழஞ்சிநாலே. 204

நாலப்பா வாவின்பால் விட்டேயாட்டி
நலமாக நெய்சாற்றிற் கரைத்துவிட்டு
மேலப்பா வடுப்பேற்றி மெழுகதானால்
விருதாக வடித்துமேற் பொடிதான்கேளு
காலப்பா பத்திரியு மேலம்ரண்டு
கருவாகக் கழஞ்சிரண்டு பொடித்துத்தூவி
ஆலப்பா கற்கண்டு பலந்தானொன்று
அப்பனே பொடித்திட்டுக் காண்டிநிறையாமே. 205

ஆமப்பா விருநேர மண்டலங்கொள்
அப்பனே பித்தவெட்டை பித்தவாய்வு
தாமப்பா வெரிச்சலொடு நீர்ச்சுருக்கு
தளமான மயக்கமெல்லாந் தவறிப்போகும்
நாமப்பா வாயூற லரோசிகங்கள்
நாடாது பித்தமெல்லா நடுக்கியோடும்

போமப்பா வாந்திமுதல் சரீரமூறும்
புதிதாக வின்னமொரு கிருதங்கேளே. 206

வல்லாரைக்கிருதம்

கேளப்பா வல்லாரைக் கிருதஞ்சொல்வேன்
கெடியான வல்லாரைச் சாறுபடியொன்று
தாளப்பா காணிக்சாறு படிதானொன்று
தளமான பொடுதலைச் சாறுபடியொன்று
நாளப்பா பழச்சாறு படியரைதான்விட்டு
நலமான வாவினெய் படிதான்ரண்டு
ஆளப்பா வாவின்பால் படிதான்ரண்டு
அப்பனே கற்கவகை சாதிக்காயே. 207

காயோடு பத்திரியு மாசக்காயும்
கருவான சிங்கியொடு காட்டாத்திப்பூ
தாயோடு வால்மிளகே லங்கிராம்பு
தளமான மதுரமொடு வகையொன்றுக்குப்
பாயோடு மிருகழஞ்சி நிறைதான்தூக்கிப்
பருவமா யாவின்பால் விட்டேயாட்டி
வாயோடு கரைத்துவிட் டடுப்பிலேற்றி
வளமான மெழுகுபதந் தனில்வடித்தே. 208

வடித்திட்டுச் சீனிரண்டு பலந்தான்தூக்கி
வாகாகப் போட்டதிலே கிண்டிக்கிண்டிக்
கடித்திட்டுக் கரண்டிநிறை கொண்டாயானால்
கலங்காதே மண்டலத்தில் தீருநோய்கள்
தடித்திட்ட மேகவகை யெல்லாந்தீரும்
தளமான குளிர்ச்சியாஞ் சரீரமெல்லாம்
வெடித்திட்ட ரிணங்கிரந்தி விழலாய்ப்போகும்
விருதான பிரமியமும் விட்டுப்போச்சே. 209

போச்சப்பா ரசபஸ்பம் வைத்துக்கொள்ளு
புகழான மேகவகை சூலைபோகும்
காச்சப்பா குஷ்டமொடு சொறிசிரங்கு
கருவான சிங்ஙவைநோய் காணாதோடும்
வீச்சப்பா கிரந்தியொடு யோனிப்புற்று
விதமான புண்புரைகள் விழலாய்ப்போகும்
மாச்சப்பா நீருகல் குறியெரிப்பு
மைந்தனே யஸ்திரிண மாறிப்போமே. 210

கூழ்ப்பாண்ட கிருதம்

ஆறுமே கூழ்ப்பாண்ட கிருதங்கேளு
அப்பனே பூசினிக்காய் சாறுபடிரண்டு

(210) சிங்ஙவை-நாக்கு.

நாறுமே தாழையுட விழுதின்சாறு
    நன்றாக படியொன்று தென்னம்பூச்சாறு
காறுமே படியொன்று கூடவிட்டு
    கலங்காதே குமரிச்சாறு படிதானென்று
சாறுமே செவ்விளநீர் படிதானென்று
    தளமான வாவினெய் படிதான்ரண்டே. 211

ரெண்டான கற்கவகை சொல்லக்கேளு
    நிலையான சாதிக்காய் சாதிபத்திரி
பண்டான சாதிக்காய் திரிபலாதி
    பாங்கான சீரகமு மேலம்வால்மிளகு
குன்றான காட்டாத்தி கர்க்கடகசிங்கிக்
    கூறான மல்லியொடு குரோசாணியோமம்
நன்றாக கழஞ்சிநிறை மூன்றதாக
    நலமான வாவின்பால் விட்டிட்டாட்டே. 212

ஆட்டியே யாவின்பால் படிரண்டுக்குள்
    அப்பனே கரைத்துவிட் டடுப்பிலேற்றி
நாட்டியே மெழுகுபத மாகும்போது
    நலமாக வடிகொண்டு கலசத்துள்ளே
காட்டியே கற்கண்டு பலந்தான்ரண்டு
    கருவாகப் பொடித்திட்டுக் கரண்டிவீதம்
மூட்டியே மண்டலங்கால் கொண்டாயானால்
    மூதண்ட பிரமியங்கள் மேகம்போமே. 213

போமப்பா வூஷணங்க ளெரிவுகாந்தல்
    பொல்லாத நீர்க்குத்து குறியெரிப்பு
நாமப்பா வஸ்திரிண மஸ்திவெட்டை
    நாடாது கிராணியெல்லாம் நளினமாகும்
தாமப்பா வெலும்புருக்கி மாலையெல்லாம்
    தவறுண்டே போகுமடா பித்தமெல்லாம்
ஆமப்பா வப்பிரேகம் போட்டுக்கொள்ளு
    அணுகாது மேகநீ ரற்றுப்போமே. 214

தூதுளைக் கிருதம்

அற்றுப்போந் தூதுளைக் கிருதங்கேளு
    அப்பனே தூதுளை யெடைதானென்று
கற்றுப்போ நன்முள்ளி கண்டங்கத்திரி
    கருதுசிறு காஞ்சொறி யாடாதோடை
சற்றுப்போ மிளகுதிப் பிலிகடுக்காய்
    சதிரான துரால்பையும் வகையொன்றுக்கு
நற்றுப்போம் பலம்நாலு கொண்டிடித்து
    நலமாக விருதுணி நீரிலூட்டே. 215

ஊட்டியே சோடசத்தொன் றாகக்காய்ச்சி
    உத்தமனே வடித்துவொரு பாண்டத்தூற்றி
நாட்டியே யாவினெய் படிதான்ரண்டு
    நலமான வாவின்பால் படிதான்ரண்டு
காட்டியே திரிகடுகு திரிபலாதி
    கருவான தாளிசங் கோஷ்டமக்கிரா
வாட்டியே வாய்விளங்கஞ் சீரகமுமோமம்
    வால்மிளகோ டரத்தைரண்டு மேலந்தானே. 216

ஏலமொடு கிராம்புசா திக்காய்பத்திரி
    எடுத்திடுவாய் வகையொன்று கழஞ்சிமூன்று
ஆலமொடு வாவின்பால் விட்டேயாட்டி
    அப்பனே நெய்தனிலே கரைத்துவிட்டு
ஞாலமொடு மெழுகுபத மாகுநேரம்
    நலமாக வடிகொண்டு கரண்டிவீதம்
காலமே மண்டலந்தான் கொண்டாயானால்
    கருவாக க்ஷயமெட்டுங் காணாதன்றே. 217

காணாதே யீளையோ டிருமல் காசம்
    கலங்காதே சேத்துமநோய் தொண்ணூற்றாறும்
நாணுமே மேகமெல்லா நாடாதோடும்
    நல்மான வூஷ்ணநோ யெல்லாந்தீரும்
ஆணுவே யீளையிரைப் பற்றுப்போகும்
    அப்பனே வாயுவென்ற தெல்லாந்தீரும்
கோணுமே குண்டலமாம் வாய்வுதீரும்
    குறிப்பாக வின்னமொரு சேதிகேளே. 218

கண்டங்கத்திரி கிருதம்

கேளடா கண்டங்கத்திரிக் கிருதஞ்சொல்வேன்
    கிருபையாங் கண்டங்கத் திரிதூக்கப்பா
நாளடா சிறுவாகை சிறுகாஞ்சொறி
    நலமான தூதுவளை சங்குமூலம்
வாளடா வகையொன்று பலந்தானஞ்சு
    வகையாக வடித்திரு தூணிநீரில்
தாளடா சோடசத்தொன் றாகக்காய்ச்சி
    தப்பாமல் வடிகொண்டு பாண்டத்திலூற்றே. 219

ஊற்றியே யாவினெய் படிதான்ரண்டு
    உத்தமனே யாவின்பால் படிதான்ரண்டு
தாற்றியே கற்கவகை சொல்லக்கேளு
    தளமான திரிகடுகு திரிபலாதி
ஏற்றியே யேலமோ டக்கிராகாரம்
    இதமான கிராம்புசா திக்காய்பத்திரி

ஆற்றியே தாளிசம் லவுங்கப்பட்டை
அரத்தைரண்டு சீரகம்ரண் டோமமாமே. 220

ஆமப்பா வகையொன்று கழஞ்சுமூன்று
அப்பனே யாவின்பால் விட்டேயாட்டி
நாமப்பா நெய்தனிலே கரைத்துவிட்டு
நலமாக மெழுகுபதந் தனில்வடித்து
தாமப்பா கரண்டிநிறை கொண்டாயானால்
தவறுண்டே சயகாச மெல்லாந்தீரும்
வேமப்பா வலிப்பிசுவும் வெருண்டுபோகும்
விருதான வயிறுவிம்மல் தளரும்பாரே. 221

பாரப்பா விஷக்கடிக டெலிகடிகள் தீரும்
பதறுகின்ற வலிப்பெல்லாம் பறந்துபோகும்
நேரப்பாகுன்மமெட்டு நீங்கிப்போகும்
நிலையான மந்தார காசநீங்கும்
வாரப்பா சேத்துமநோ யெல்லாந்தீரும்
வளமான வாய்வெல்லா மாண்டுபோகும்
ஆரப்பா தாளகத்தின் பற்பங்கூட்டி
அப்பனே மண்டலங்கொ ளகன்றுபோமே. 222

கணத்தெண்ணெய்

போமப்பா கணத்தெண்ணெய் சொல்லக்கேளு
புகல்முத்துக் கொட்டையெண்ணெய் படிதானென்றே
நாமப்பா கையான்சாறு காணிச்சாறு
நலமான குமரிச்சா றீருள்ளிச்சாறு
வேமப்பா கோவைச்சாறு புளியாரைச்சாறு
விதமான கர்ப்பூர வள்ளிச்சாறு
தாமப்பா வகையொன்று சாறுபடிகாலால்
தப்பாம லெண்ணெயிலே கூடவாரே. 223

வார்த்தப்பா சாதிச்காய் சாதிபத்திரி
மைந்தனே மாசக்காய் கர்க்கடகச்சிங்கி
வத்தப்பா கோஷ்டமோ டக்கிராகாரம்
இதமான சீரம்ரண்டு வெந்தயந்தான்
காத்தப்பா லவுங்கப்பத் திரியும்பட்டை
கருவான வெள்ளுள்ளி வகையொன்றுக்குச்
சாத்தப்பா கழஞ்சிநிறை வாங்கியேதான்
தளமான வாவின்பால் விட்டிட்டாட்டே. 224

ஆட்டியே யெண்ணெயிலே கரைத்துவிட்டு
அப்பனே பால்படியா லடுப்பிலேற்றி
நாட்டியே மெழுகுபத மாகவேதான்
நலமாக வடிகொண்டு கலசத்துள்ளே

கூட்டியே கோரோசனை குங்குமப்பூ
குணமான சாதிக்காய் கழஞ்சுவீதம்
ஆட்டியே பொடித்திட்டுக் கழஞ்சிநிரையாக
அப்பனே கொடுத்துவரச் சொல்லக்கேளே. 225

கேளடா கணவெட்டை கணசுரங்கள்
கெடியான மாந்தமோ டுப்பிசங்கள்
நாளடா வுலர்த்துகின்ற ரணங்களெல்லாம்
நலமாக வாறுமடா கெற்பவெட்டை
தாளடா கணப்பாண்டு வெளுத்ததேகம்
தளமான நீரிழிவு விடாதகூடு
வேளடா வுடம்பூறு மூஷ்ணம்போகும்
வெகுசுறுக்கா யின்னமொரு சேதிகேளே. 226

கரப்பானெண்ணெய்

சேதியென்ற கரப்பானும் ரணத்துக்கெல்லாந்
தெளிவான வெண்ணெயொன்று சொல்லக்கேளு
சாதியென்ற பூவரசு செங்கத்தாரி
தளம்பூத கட்பனோடு கண்டங்காலி
வேதியென்ற நிலவாகை வகையொன்றுக்கு
விதமாகப் பலம்பத்து நறுக்கிக்கொள்ளு
ஆதியென்ற துாணிநீ ரெட்டொன்றாக்கி
அப்பனே யாமணக் கெண்ணெய்படியொன்றே. 227

ஒன்றப்பா வெள்ளாட்டின் பால்தானென்று
உத்தமனே மிளகுகருஞ் சீரகந்தான்
வின்றப்பா கார்கோலம் வெள்ளுள்ளிவசம்பு
வேறான சதகுப்பை வலம்புரிக்காய்
நன்றப்பா பரங்கிபட பட்டைதானும்
நலமாக வகையொன்று கழஞ்சிரண்டு
தன்றப்பா முன்பாலா லரைத்துக்கொண்டு
தளமான வெண்ணெயிலே கரைத்துவிட்டே. 228

விட்டப்பா வடுப்பேற்றி மெழுகுபதமானால்
வெருளாதே கரண்டிநிரை கொடுத்தாயானால்
தட்டப்பா சகலகரப் பானும்போகுந்
தளமான வரிப்பெல்லாஞ் சாராதோடுங்
கட்டப்பா ரணத்தின்மேல் தடவிப்போடக்
கசகாம லுதிர்ந்துபோங் கருவாய்க்கேளு
பட்டப்பா பத்தியந்தான் காத்தாயானால்
பறக்குமடா கரப்பனோடு ரணங்கள்தானே. 229

மாந்த எண்ணெய்

தானென்ற மாந்தவெண்ணெய் சொல்லக்கேளு
தயவான வாமணக்கி னெண்ணெய்படியொன்று

வானென்ற வெள்ளிண்டு வுசிலன்பட்டை
வளமான வறுகுமஞ்சள் வெள்ளைப்பூண்டு
கானென்ற வெவ்வேறே நிம்பக்காய்மட்டுக்
கருவாக வரைத்தெண்ணெய் தனிற்கரைத்து
நானென்ற பேய்த்தும்மட் டிக்காயப்பா
நலமாகப் பாதியதில் நறுக்கிப்போடே. 230

போட்டப்பா வடுப்பேற்றிக் காய்ச்சிவந்தால்
பொட்டெனவே யிறக்கியதை யிறுத்துக்கொண்டு
நாட்டப்பா மூன்றுநாள் கால்சேர்வீதம்
நலமாகக் காலமே கொடுத்தாயானால்
காட்டப்பா மாந்தமெல்லாங் காணாதோடுங்
கருவான விசுவுமுதல் கண்டிப்பாகும்
நீட்டப்பா பேய்மாந்தம் பொருமலெல்லாம்
நிலைகெட்டே யோடுமா மின்னங்கேளே. 231

மேகத்தெண்ணெய்

கேளப்பா மேகமென்ற தெல்லாந்தீரக்
கெடியான வெண்ணெயொன்று சொல்லக்கேளு
நாளப்பா கோவைச்சாற் காணிச்சாறு
நலமான வல்லாரை செருப்படையின்சாறு
வேளப்பா யானையுட நெரிஞ்சிச்சாறு
வெகுசுருக்காஞ் சிந்தியுட தலைடுச்சாறு
ஆளப்பா வரசனுட பட்டைச்சாறு
அப்பனே வகைக்குப்படி யரையதாமே. 232

ஆமப்பா வாமணக்கி னெண்ணெய்படி முக்கால்
அப்பனே யெள்ளெண்ணெய் படிதான்முக்கால்
தாமப்பா சாற்றிலே விட்டுக்கேளு
சதுரான சாதிக்காய்ச் சாதிபத்திரி
வாமப்பா மாசக்காய் கற்கடகச்சிங்கி
வளமான சண்பகப்பூ காட்டாத்திப்பூ
வேமப்பா சிறுநாகமே லங்குரோசானி
வெகுசுருக்காய் கழஞ்சிரண் டெடைதான்தூக்கே. 233

தூக்கியே யாவின்பால் விட்டேயாட்டி
சுருக்காக வெண்ணெயிலே கரைத்துவிட்டு
தாக்கியே சித்திரமூலி வேரின்பட்டை
சாதகமாம் பலமொன்று கூடப்போட்டுத்
தேக்கியே யடுப்பேற்றி மெழுகுபதம்பார்த்து
திறமாக வடித்ததனைக் கலசத்துள்ளே
ஆக்கியே கற்கண்டு பலம்ரண்டிட்டு
அப்பனே கரண்டிநிரை கொள்ளுகொள்ளே. 234

கொள்ளப்பா மண்டலந்தான் கொண்டாயானால்
கூறுகெட்ட மேகமெல்லாங் குளிர்ந்துபோகும்
தள்ளப்பா ரிணங்கிரந்தி லிங்கப்புற்று
தள்ளுமே யோனிப்புற் றரிகிரந்தி
நள்ளப்பா வெடிசூலை மேகவூறல்
நலமான சொறிசிரங்கு நாடாதோடும்
தள்ளப்பா சீழிரத்தம் பிரமியங்கள்
தவறுண்டே போகுமடா சார்ந்துபாரே. 235

172193

விழுதியெண்ணெய்

பாரப்பா கெற்பரோ யெல்லாந்தீரப்
பகருகிறேன் விழுதியெண்ணெய் பண்பாய்க்கேளு
சேரப்பா முத்தெண்ணெய் படிதானொன்று
திறமான வாவினெய் படிதானொன்று
தாரப்பா விழுதிச்சாற் படிதானொன்று
தளமான திரிகடுகு வசம்பீருள்ளி
ஆரப்பா கோஷ்டமொடு லவுங்கமேலம்
அப்பனே வெள்ளுள்ளிக் காலதாமே. 236

ஆமப்பா வாவின்பா லாலரைத்து
ஆப்பனே நெய்தனிலே கரைத்துவிட்டுப்
போமப்பா வடுப்பேற்றி மெழுகுபதம்பார்த்து
பொட்டெனவே யிறுத்தொரு கலசத்துள்ளே
நாமப்பா மூன்றுநாள் கால்சேர்வீதம்
நலமாகக் கொண்டுவர வாறுநாள்தான்
வேமப்பா பத்தியந்தா னுப்பைத்தள்ளு
வெகுசுருக்காய்த் தீருமடா கெற்பவாய்வே. 237

கெற்பத்தின் வாய்வெல்லாங் கெதிகெட்டோடும்
கிட்டாது சூதகத்தின் வலியெல்லாம்போம்
நற்புகத்தில் புழுக்களெல்லா நழுவிவீழும்
நாடாது சூலையெல்லா நளினமாகும்
கற்பத்தி விசுவுமுதல் தளர்ந்துபோகும்
சந்திடுப்பில் சூலையெல்லாஞ் சாந்தமாகும்
அற்பமது வல்லவடா கெற்பமுண்டாம்
ஆச்சரிய மின்னமொன் றறைகின்றேனே. 238

அறைகிறே னல்லெண்ணெய் படிதானொன்று
அப்பனே யாவினெய் படிதானொன்று
முறைகிறேன் மூலவேர் பலந்தான்ரண்டு
முனையாக வாவின்பால் விட்டேயாட்டி
நிறைகிறேன் கரைத்துவிட் டடுப்பிலேற்றி
நினைவாக மெழுகுபதந் தனில்வடித்துக்

குறைகிறேன் காண்டிநிரை கொண்டாயானால்
கொடிதான மேகமெல்லாங் கூறிப்போமே. 239

கூறிப்போங் குறியெரிப்பு லிங்கப்புற்று
கொடிதான கிரந்தியெல்லாங் குடிப்போமப்பா
நாறிப்போ முள்ளழலை வாய்நாற்றங்கள்
நாடாதே யரிப்பெல்லா நளினமாகும்
தேறிப்போஞ் சூலைமுதல் வெடிரிணங்கள்
தீராத குட்டமெல்லாந் தீர்ந்துபோகும்
காறிப்போங் கெந்தியிட்டுக் கொண்டாயானால்
கடல்புக்கும் வெகுரிணங்கள் குன்மந்தானே. 240

கலிங்காதியெண்ணெய்

குன்மவகை தீருதற்கு கலிங்காதியெண்ணெய்
குணமாகச் சொல்லுகிறேன் புலத்தியனேகேள்
கன்மமென்ற தும்மட்டிக் காய்ச்சாறப்பா
கருவாக படியிரண் டாவிநீர்தான்
தன்மமென்ற படியிரண்டு வெள்ளாட்டுநீர்தான்
தப்பாமல் படியொன்று கூட்டிச்சேர்த்து
பன்மமென்ற வாமணக்கி னெண்ணெயப்பா
பகராதே படியிரண்டு கூடவாரே. 241

வார்த்தப்பா கடுக்காயுங் கடுகுரோணி
வளமான வாய்விளங்கந் திரிகடுகுமேலம்
வத்தப்பா விந்துப்பு வளையலுப்பு
இதமான கல்லுப்புச் சவுட்டிலுப்பு
காத்தப்பா நவாசார மெவாசாரங்காரங்
கலங்காதே யப்பளா காரங்கூட்டிப்
பார்த்தப்பா வால்மிளகு யானைத்திப்பிலியும்
பாங்கான வெள்ளுள்ளிப் பருப்புமாமே. 242

ஆமப்பா நிலவாகை கண்டங்கத்திரி
அப்பனே வெள்ளைச்சா ரணையின்மூலம்
நாமப்பா சத்திசா ரணைக்கிழங்கு
நலமாக வரைப்பலமா யரைத்துக்கொண்டு
தாமப்பா நொச்சிச்சாறு பசுமஞ்சள்சாறும்
தளமான விஞ்சிச்சாறு குமரிச்சாறு
வேமப்பா படியரையாய்க் கூடவிட்டு
விருதான கடைசரக்குக் கழஞ்சிமூன்றே. 243

மூன்றப்பா வரைத்தெண்ணெய் தனிற்கரைத்து
முதிராம லடுப்பேற்றி மெழுகுபதமானால்

(241) கலிங்கம் - தும்மட்டிக்காய்.

என்றப்பா கலசமதில் வடித்துவைத்தே
என்னசொல்வே னரைக்கால்சேர் வீதமாகக்
கான்றப்பா கொண்டுவரப் பத்துநாள்தான்
கவுசையொடு பீலிகையுங் கரைந்துபோகும்
ஆன்றப்பா பெருவயிறு வாய்கட்டி
அணுகாது மகோதரங்க ளற்றுப்போமே. 244

அற்றுப்போம் வாயுவென்ற திரட்சியெல்லாம்
அப்பனே குணமாகு மெட்டுவாய்வு
நற்றுப்போங் கெற்பவலி கெற்பச்சூலை
நாடாதே யிசுவுபுழு நழுவிவீழும்
கற்றுப்போங் கைகாலில் கட்டுச்சூலை
கடல்புக்குங் குத்துவலி காணுதோடும்
பற்றுப்போம் வயிற்றிலுள்ள வியாதியெல்லாம்
பறக்குமடா வின்னமொன்று பகரக்கேளே. 245

வாத எண்ணெய்

கேளப்பா வேப்பெண்ணெய் புங்கனெண்ணெய்
கெடியான வாமணக்கின் புன்னையெண்ணெய்
நாளப்பா வெள்ளெண்ணெய்,யைந்துங்கூட்டி
நலமாக வகையொன்று படியரைதான்சேர்த்து
தாளப்பா வெள்ளுள்ளி வசம்புகாயம்
தளமான திரிகடுகு வோமங்கிராம்பு
ஆளப்பா சதகுப்பை கடுகுரோணி
அப்பனே சித்திரமா மூலமாமே. 246

ஆமப்பா வகையொன்று பலமரைதான்வாங்கி
அப்பனே காடியா லரைத்துப்போட்டு
வேமப்பா காடிபடி ரண்டிலேதான்
விருதாகக் காலதுவிட் டடுப்பிலேற்றி
போமப்பா மெழுகுபதம் வடித்துக்கொண்டு
புகழாகக் கலசமதில் பதனம்பண்ணி
தாமப்பா மேற்பூசி பிடித்துக்காய்ச்சத்
தவறிப்போம் வாதமெண் பதுவுந்தானே. 247

தானென்ற மேகவகை சூலையெல்லாந்
தளமான திமிர்வாதம் புறவிசிவுமுதலா
நானென்ற விசிவுமுதல் நடுக்குவாதம்
நாடாது சிறுகடுப்பு நளினமாகும்
தேனென்ற காசெடைதா னுள்ளேதாக்கில்
தேகத்தின் வாதமெல்லாந் தெறிபட்டுப்போம்
வானென்ற தேகவலி யெல்லாந்தீரும்
வளமாகுந் துவாலையுட வாதம்போமே. 248

சுகசீதபேதி யெண்ணெய்

போமப்பா சுகபேதி யெண்ணெயொன்று
புகலுகிறேன் முத்தெண்ணெய் படிதானென்று
காமப்பா குமரிச்சாறு படிதானென்று
கருவான பிரமிச்சாறு படியரைதானாகும்
தாமப்பா மிளகுகளிப் பாக்குகடுக்காய்
தவறாமல் கருவேலி பலம்ரண்டப்பா
நாமப்பா பதக்குநீர் தன்னிற்போட்டு
நலமாக வெட்டொன்றாய் வடித்துவாங்கே. 249

வாங்கியே யெண்ணெய்தனக் குள்ளேயப்பா
வளமாகக் கடுக்காயுங் கடுகுரோணி
தாங்கியே மிளகுடனே யுள்ளிவகையொன்று
தவறாமல் பலமரைதா னரைத்துப்போட்டு
ஓங்கியே யடுப்பேற்றி மெழுகுபதமானால்
என்னசொல்வேன் கலசத்துள் வடித்துவைத்து
ஆங்கியே கால்சேர்தான் கொடுத்தாயானால்
அப்பனே சுகசீத பேதியாமே. 250

ஆமப்பா நீர்க்கட்டு வாய்வுலைதல்
அப்பனே வாய்வெல்லா மகன்றுபோகும்
தாமப்பா சரீரமெல்லாங் குளிர்ச்சியாகும்
தளராத வயிறுவிம்மல் தளர்ந்துபோகும்
நாமப்பா மூலத்தின் சூடெல்லாம்போம்
நாடாது பித்தமெல்லாங் கீழேசாடும்
போமப்பா விதனைப்போல் பேதியெண்ணெய்
பூதலத்தில் சுகபேதி யில்லைதானே. 251

பழத்தெண்ணெய்

தானென்ற பழத்தெண்ணெய் சொல்லக்கேளு
தவறாமல் பழச்சாறு படிதானென்று
நானென்ற முத்தெண்ணை படிதானென்று
நலமான குமரிச்சாறு படிதானென்று
வேனென்ற கடுக்காய்தான் பலமிரண்டு
விருதாக வரைத்தெண்ணெய் தன்னிற்போட்டு
கானென்ற வடுப்பேற்றி மெழுகுபதமானால்
கண்டப்பா வடிகொண்டு கலசம்வாரே. 252

வார்த்தப்பா கால்சேர்தான் கொடுத்தாயானால்
வாங்குமடா பித்தமென்ற நாற்பதும்போம்
ஏத்தப்பா வெரிவுமுதல் காந்திதீரும்
என்னசொல்வே னுஷ்ணநோய் யெல்லாந்தீரும்

காத்தப்பா பட்சமொன்று கொடுத்தாயானால்
கருவான நோயெலாங் காணாதோடும்
பார்த்தப்பா வயிற்றிலுள்ள வியாதியெல்லாம்
பறக்குமடா பித்தநோய் பாருபாரே. 253

வீரபத்திரக் கலிக்கம்

பாரப்பா வீரபத்திர கலிக்கங்கேளு
பறக்குமடா பசாசுமுதல் சன்னியெல்லாம்
சேரப்பா திரிகடுகு கடுக்காயிந்து
திறமான வாளமொடு கிராம்போடேழும்
வேரப்பா வெந்தயச்சா றதனாலாட்டி
வெகுசுருக்காய் நால்சாம மரைத்துக்கொண்டு
ஆரப்பா முன்சாற்றிற் கலிக்கம்போட
அப்பனே சன்னிமுதல் தோஷம்போமே. 254

ஆக்கிராண நசியம்

போமப்பா வாக்கிராணஞ் சொல்லக்கேளு
புகழான சண்டைவேர் தும்பைமூலம்
நாமப்பா விலுப்பைபுண் ணாக்குஞ்சுட்டு
நலமாக முன்னிரண்டும் ரவியுலர்த்தி
சேமப்பா பொடிசெய்து வடிகொண்டேதான்
திறமான குழலடைத்தாக் கிராணஞ்செய்ய
தாமப்பா தலையிலுள்ள தோஷமெல்லாம்
சண்ணுண்டு போகுமடா வின்னங்கேளே. 255

நசியம்

கேளப்பா விலுப்பையுட பழம்புண்ணாக்குக்
கிரிகையாய்ப் பொடிசெய்து துணியிற்கட்டி
வாளப்பா வாலையுட வூசிநீரில்
மைந்தனேநசியமிடச் சன்னி தோஷம்
தாளப்பா பித்தத்தா லெடுத்ததோஷம்
தளமான கபவாத தோஷமெல்லாம்
ஆளப்பா பிரமராட் சதன்முதலாய்
ஆகாத பசாசுமுத லகன்றுபோமே. 256

கண்டாவிழ்தம்

போமப்பா கண்டாவிழ்தஞ் சொல்லக்கேளு
புதுமையாங் தங்கமொடு வெள்ளிமுத்து
நாமப்பா மதுரமொடு கிராம்புதிப்பிலி
நலமான பவளமோ டுருத்திராக்ஷம்
தாமப்பா கோஷ்டமோ டக்கிராகாரம்
தளமான காமப்பூ கூவிளத்தின்மூலம்

ஆமப்பா கலைக்கொம்பு ரசசெந்தூரம்
அப்பனே யாடாதோடை மூலந்தானே. 257

தானென்ற மூலைப்பாலா லரைத்துக்கொண்டு
தப்பாமல் தேன்குத்தி நாவிற்போட
நானென்ற தோஷமொடு சன்னியெல்லாம்
நாடாது நாவரட்சி நாவழுத்தல்
தேனென்ற ஸ்திரீசங்கோத் தோஷம்வாந்தி
திறமான விக்கல்முதல் தீருந்தீரும்
வானென்ற வாதமெல்லாம் வாங்கிப்போகும்
வளமான நாக்கின்முள்ளும் வாங்குந்தானே. 258

சூரணங்களின் சுத்தி

தானென்ற சூரணத்தின் சுத்திகேளு
தப்பாதே சாக்கெல்லாஞ் சூரணித்து
நானென்ற வாவின்பா லாற்பிசைந்து
நலமான சட்டியிலே பாலைவிட்டு
வானென்ற சுத்தசலம் பாதிவிட்டு
வளமாக மேற்சீலை கோடுகட்டி
பானென்ற சூரணத்தைப் புட்டுபோல்வைத்துப்
பதறாதே வெந்தெடுக்கச் சுத்தியாமே. 259

ஆமப்பா ரவியுலர்த்திப் பொடிதான்செய்து
அப்பனே சமனாகச் சர்க்கரையைச்சேர்த்து
நாமப்பா கொண்டுவரத் தோஷம்போச்சு
நன்றாகச் சுத்திசெய்யாச் சூரணந்தான்
தாமப்பா ரோகத்தை வெல்லாதப்பா
தளமான வியாதியெல்லாம் பாரிக்கும்பார்
வேமப்பா சுத்திசெய்து கொண்டாயானால்
வெகுசுறுக்காய்த் தீருமடா வியாதிகேளே. 260

செந்தூரவைப்புக்குக்குரு

கேளப்பா செந்தூரப் பற்பமெல்லாம்
கெடியான சிங்கமுப்பூ தொட்டாலாகும்
நாளப்பா விதைவிட்டால் பற்பமில்லை
நன்றான லோகமுதல் சிவப்பேறாது
வாளப்பா விதுவல்லோ புடத்துக்காதி
வகையறியான் வைத்தியனல்ல மாடுமேய்க்கி
தாளப்பா வைத்தியர்க்காய்க் கருவைச்சொன்னேன்
தப்பாது பற்பமுறை செந்தூரந்தானே. 261

லோகசெந்தூரம்

தானென்ற லோகசெந் தூரங்கேளு
தயவான வரப்பொடியில் நல்லெண்ணெய்விட்டு

வானென்ற நாழிகைதான் அறுபதானால்
வளமாக வறுத்ததனைப் பீங்கானில்விட்டு
நானென்ற பழச்சாறு பிழிந்துவிட்டு
நலமாகக் கிண்டிவைத்து நாலாம்நாளில்
தேனென்றே யுறுஞ்சியதைக் கழுவிப்போட்டுத்
திறமாக ரவியுலர்த்திப் பலந்தான்தூக்கே. 262

தூக்கியே சுத்தித்த கெந்திகேளு
சுகமாகப் பலமொன்று கூடப்போட்டு
தாக்கியே பழச்சாற்றால் சாமம்நாலு
சரியில்லாப் பொற்றலையாற் சாமம்நாலு
தேக்கியே யரைக்கையிலே முப்பூவப்பா
திறமாகக் கழஞ்சிநிறை சேர்த்துப்போட்டுத்
வாக்கியே பில்லைசெய்து ரவியிற்காய்ந்தால்
வளமான் முப்பதெருப் புடத்திற்போடே. 263

போடப்பா முக்காலும் போற்கையானால்
புகழாக நால்சாம மாட்டிக்கொண்டு
நாடப்பா பில்லைசெய்து ரவியுலர்த்தி
நலமாக முன்போலே புடத்தைப்போடு
ஆடப்பா வாறினபின் னெடுத்துப்பாரு
அப்பனே முருக்கம்பூப் போலாம்வர்னம்
காடப்பா பணவெடைதா னநுபானத்தில்
கருவாகத் தேன்கூட்டிக் கொள்ளுகொள்ளே. 264

கொள்ளவே பாண்டுவகை யெல்லாந்தீரும்
குறிஞான பித்தவெட்டை பித்தவாய்வு
நள்ளவே வாய்வென்ற தெல்லாந்தீரும்
நாடாதே யரோசியங்க ளன்னதோஷம்
விள்ளவே மயக்கமொடு வாந்திதீரும்
விருதான பித்தமெல்லாம் விழலாய்ப்போகும்
தள்ளவே யிஞ்சியென்ற சூரணத்தில்
சாப்பிடவே தேன்கூட்டிச் சாரும்பாரே. 265

அயக்காந்த செந்தூரம்

பாரப்பா காந்தத்தை யிப்படியேசெய்யில்,
பரிவான காந்தமொடு சிவப்புமெத்த
சாரப்பா வநுபான மறிந்துகொண்டால்
தப்பாது மூலவகை யாவுந்தீரும்
சேரப்பா பித்தமெல்லாஞ் சிதறிப்போகும்
தேகத்தில் பாண்டுவெல்லாந் தீருந்தீரும்
ஆரப்பா தேனிலே கொண்டாயானால்
அருணனைப்போல் காந்தியா மறிந்துகொள்ளே. 266

கொள்ளவே அயக்காந்தச் செந்தூரங்கேளு
குறிப்பான ரண்டையுந்தான் சுத்திசெய்து
நள்ளவே சமனாகரண்டை யுந்தான்கூட்டி
நலமான சாதிலிங்கஞ் சமனாய்க்கூட்டி
தள்ளவே வெண்காரங் கால்தான்கூட்டி
தயவான ரசங்கால்தான் கெந்திசமனப்பா
விள்ளவே சுத்திசெய்து கல்வத்திட்டு
விருதான பழச்சாற்றாற் சாமம்நாலே. 267

நாலாக முப்பூவும் கழஞ்சிரண்டு
நலமான பொற்றலையால் சாமம்நாலு
காலாக வரைத்துபில்லை ரவியிற்காய்ந்தால்
கருவான வோட்டில்வைத் தோடுமூடி
சாலாக முப்பதெருப் புடத்திற்போடு
தப்பாது செந்தூர மருணன்போலாம்
மாலாகப் பணவெடைதா னநுபானத்தில்
மைந்தனே கொண்டுவரப் போம்நோய்கேளே. 268

கேளப்பா பாண்டாறுங் கிராணியாறும்
கிருமையாம் பித்தமது நாற்பதும்போம்
நாளப்பா வாய்வோடு வாதமெல்லாம்
நாடாதே யக்கினியா மந்தங்கேளு
சூளப்பா தாதுவெல்லா முறுக்கமேறும்
சுகமாக வெளுத்தசடம் வண்டுபோலாம்
ஆளப்பா சுயத்தேனிற் கொண்டாயானால்
அணுகாது பாண்டுவென்ற ரோகம்போமே. 269

போமப்பா சூலையொடு வாயுவெல்லாம்
பொல்லாத கெர்ப்பநோய் சொல்லாதோடும்
நாமப்பா வாந்தியொடு பொருமல்விம்மல்
நாடாதே வுஷ்ணமாம் வாய்வுதீரும்
தாமப்பா சேத்துமங்க ளெல்லாந்தீரும்
தலைமயக்கம் வாயூறல் சாந்தமாகும்
வேமப்பா பத்தியங்கார் பித்தமெல்லாம்
வெகுசுருக்காய்த் தீருமடா வின்னங்கேளே. 270

திரிலோக செந்தூரம்

கேளப்பா திரிலோக செந்தூரந்தான்
கெடியான லோகமோ டப்பிரேகங்காந்தம்
நாளப்பா மூன்றையுந்தான் சுத்திசெய்து
நலமாகச் சமன்கூட்டிக் கல்வத்திட்டு
தாளப்பா சுத்தித்த கெந்திசமன்கூட்டி
தப்பாமல் வாலைரசம் பாதிசேர்த்து

ஆளப்பா பழச்சாற்றால் சாமம்நாலு
அப்பனே யரைக்கையிலே பூநீறுபோடே. 271

போடப்பா முக்கழஞ்சி தூக்கியேதான்
பொற்றலையால் நால்சாம மரைத்துக்கொண்டு
நாடப்பா செருப்படையால் சாமம்நாலு
நன்றான குமரிச்சாறு சாமம்நாலு
தேடப்பா பில்லைசெய்து ரவியிற்போடு
திறமாக வோட்டில்வைத் தோடுமூடி
ஆடப்பா சீலைசெய்து புடத்தைப்போட்டு
ஆறியபின் னேயெடுத் தரைக்கக்கேளே. 272

கேளப்பா லிங்கமரைப் பலந்தான்கூட்டி
கெடியான குமரிச்சாறு சாமமெட்டு
நாளப்பா வரைத்துபில்லை ரவியிற்காய்ந்தால்
நன்றாக முப்பதெருப் புடத்தைப்போடு
வேளப்பா செந்தூர மருணன்போலாம்
வெகுசுருக்காய் சஞ்சீவி சூரணத்தில்
தாளப்பா பணவெடைதா னெய்யிற்கொள்ளத்
தப்பாது மேகநீர் தவறிப்போமே. 273

தவறிப்போம் பாண்டுவகை யாவுந்தீரும்
தப்பாது பித்தமென்ற நாற்பதும்போம்
தவறிப்போ மேகமென்ற விருபத்தொன்றும்
சாந்தமாம் வாயுவெல்லா மொழிந்துபோகும்
தவறிப்போ முட்சூடு மிருமலெல்லாம்
சந்திரன்போல் தேகமெல்லாங் குளிர்ச்சியாகும்
தவறிப்போம் பித்தத்தின் கோபமெல்லாம்
சண்ணுமடா வின்னமொன்று சாற்றக்கேளே. 274

பஞ்சலோக செந்தூரம்

கேளடா பஞ்சலோக செந்தூரந்தான்
கெடியான தங்கமொடு வெள்ளிசெம்பு
நாளடா காந்தமோ டிரும்பில்வைத்து
நலமாக சுத்திசெய்து சமனாய்க்கூட்டி
வேளடா கெந்தகந்தான் ரட்டிப்பிட்டு
வெருளான சூதமரை வீரங்கால்தான்
ஆளடா முப்பூவின் சுண்ணமொன்று
அப்பனே பழச்சாற்றால் சாமம்நாலே. 275

நால்சாம மரைத்துமே யுலரவைத்து
நன்றாக வோட்டிலிட் டோடுமூடி
சீலான சீலைசெய்து முழப்புடத்தில்
சென்றேதா னாறினபின் னெடுத்துக்கொண்டு

காலான கரிசாலைச் சாற்றிலாட்டிக்
கசகாமல் நால்சாம மரைத்துக்கொண்டு
வேலான முழப்புடத்தில் செந்தூரமாகும்
விதமாகச் செருப்படைநாற் சாமமாட்டே. 276

ஆட்டியே முழப்புடத்தில் செந்தூரந்தான்
அருணனைப்போ னிறமாகு மெடுத்துக்கொண்டு
மூட்டியே திரிகடுகில் பணந்தான்கொள்ள
மூதண்ட தேன்கூட்டி மண்டலந்தான்
நாட்டியே வாயுவென்ற தெண்பதும்போம்
நாடாது பித்தத்தின் மூலந்தீரும்
காட்டியே சேத்துமங்க ளிருபதும்போம்
கருவாக வின்னமொன்று கருதிக்கேளே. 277

மண்டூர செந்தூரம்

கேளடா வாயிரந்தான் வருஷஞ்சென்று
கெடியான சிட்டமது கொண்டுவந்து
தாளடா வாவினீர் தன்னிலேதான்
தளமாகக் காய்ச்சியே தோய்ச்சுத்தோய்ச்சு
வேளடா பத்துவிசை தோய்ச்செடுத்து
விருதான கல்வத்திற் பொடியாய்ச்செய்து
நாளடா பத்திலொன்று கெந்திரூதம்
நலமான லிங்கமுப்பூ வெண்காரங்கூட்டே. 278

கூட்டியே பழச்சாற்றில் புடந்தான்பத்து
கூசாதே கரிசாலைப் புடந்தான்பத்து
ஆட்டியே செருப்படையின் புடந்தான்பத்து
அப்பனே செம்பைச்சாறு புடந்தான்பத்து
நீட்டியே யாசனுட பட்டைசாற்றில்
நேராகப் புடமஞ்சு போட்டெடுத்து
காட்டியே செந்தூரம் பொடிதான்செய்து
கனமான பாணிதனி லடைத்துக்கொள்ளே. 279

கொள்ளவே திரிகடுகு தேனிலேதான்
கூசாதே பணமிரண்டும் கூட்டிக்கொள்ளே
விள்ளவே விஷப்பாண்டு காமாலையாறும்
விருதான பாண்டுவகை குடிபோமப்பா
தள்ளவே பித்தமெல்லாங் கீழேசாடும்
தளமான சேத்துமநோய் தொண்ணூற்றாறும்
கள்ளவே கடல்புக்கிக் காணாதோடும்
கண்டாயோ வெண்பாண்டங் கரும்பாண்டமாமே. 280

ஆமப்பா வரோசியங்க ளன்னதோஷம்
அகலாத வாந்திவிக்க லகன்றுபோகும்

தாமப்பா வாயுவென்ற தெல்லாம்போகும்
தலமான நீர்த்தோஷ நாடாதோடும்
காமப்பா வூறுமடா தேகமின்னும்
கலகலெனத் தேகமுழு திறுகிப்போகும்
நாமப்பா கண்டபடி சொன்னோமின்ன
நலமான வப்பிரேக வகைசொல்வேனே. 281

அப்பிரேக செந்தூரம்

சொல்லக்கேள் கிஷ்ணவப் பிரேகம்வாங்கி
சுருக்காகக் காய்ச்சியே பாலிற்போட்டு
வல்லக்கேள் கழுவியதை யெடுத்துக்கொண்டு
வாகான நெல்லோடப் பிரேகங்கூட்டி
நல்லக்கேள் காடியிலே பிசைந்தாயானால்
நலமான வப்பிரேக மிறங்கும்பாரு
மெல்லக்கேள் மறுநாள்தான் தெளிவிறுத்து
விருதான வப்பிரேகம் ரவியிற்போடே. 282

போட்டப்பா வுலர்ந்தபின் யெடுத்துக்கொண்டு
புகழான கல்வத்திற் போட்டுநீயும்
ஆட்டப்பா பழச்சாற்றால் நாலுசாமம்
அப்பனே பத்திலொன்று கெந்திகூட்டி
நாட்டப்பா பில்லைதட்டி ரவிகண்டேதான்
நலமாக முப்பதொருப் புடத்திற்போட்டு
நீட்டப்பா கெந்தியிட்டுப் பழச்சாற்றாலே
நேராக நால்சாம மரைத்துக்காட்டே. 283

காட்டியே ரவிதனிலே காய்ந்தபின்பு
கனமான வோட்டிலிட்டுப் புடத்தைப்போடு
ஆட்டியே கல்வத்திற் போட்டுநீயும்
அப்பனே கெந்தியிட்டுப் பழச்சாற்றாட்டி
யாட்டியே பத்துவிசைப் புடத்தைப்போடு
பாங்காகப் பின்னெடுத்துக் கரிசாலைச்சாற்றில்
வாட்டியே புடம்பத்துப் போட்டெடுத்து
வாகான செருப்படைச்சாற் விட்டிட்டாட்டே. 284

ஆட்டியே யிருசாம முலரவைத்து
அப்பனே புடம்பத்துப் போட்டெடுத்து
நீட்டியே பொடுதலைச்சாறு புடந்தான்பத்து
நேரான பொற்றலையிற் புடந்தானஞ்சு
காட்டியே சிறுசெருப் படியின்சாற்றால்
கசகாமற் புடமஞ்சு போட்டெடுத்து
மாட்டியே முருக்கம்பூச் சாற்றாலாட்டி
மைந்தனே புடமைந்து போட்டுக்கொள்ளே. 285

கொள்ளப்பா செந்தூர மருணன்போலாம்
கொடிதான வனுபான மறிந்துகொள்ளு
விள்ளப்பா சயமெட்டு மீளையிருமல்
விருதான சேத்துமநோய் தொண்ணூற்றாறும்
கள்ளப்பா பறந்தோடுங் கடலேபுக்குங்
கருவான சஞ்சீவி சூரணத்தில்
அள்ளப்பா பணவெடைதான் றேனிற்கொள்ள
அற்றுப்போ மேகநீ ரிழிவுபோகும். 286

போமப்பா தேகத்துள் மாந்தையெல்லாம்
போகுமடா பிரமியநோ யிருமலெல்லாம்
சாமப்பா வுட்சூடுள் ளெரிவுகாணும்
தளமான தேகமெல்லாங் குளிர்ச்சியாகும்
வேமப்பா விந்தூறும் புஷ்டியாகும்
வெகுநாளை யெலும்புருக்கி விழலாய்ப்போகும்
காமப்பா கண்குளிருந் தேகமின்னும்
கருவான பற்பவகை சொல்லக்கேளே. 287

துருசுகுரு

சொல்லக்கேள் புலத்தியனே பற்பத்துக்குச்
சுருக்கான குருவொன்று சூட்டக்கேளு
வல்லக்கேள் துருசுசுத்தி பண்ணிக்கொண்டு
வகையாக முப்பூநீர் மூன்றுநாள்தான்
அல்லக்கேள் சாரநீர் மூன்றுநாள்தான்
அழகாக ரவியுலர்த்திப் பலந்தான் தூக்கு
வல்லக்கேள் வங்கத்தைக் கடுஞ்சுண்ணமூதி
வாகாக வெடைக்கெடைதான் கவசம்போடே. 288

இரசபற்பம்

போடப்பா ரவியிலே யேழுநாள்தான்
புகழாகக் காய்ந்தபின்பு சுண்ணச்சீலை
நாடப்பா மூன்றுசுற்றிக் காயவைத்து
நலமான காடையிலே குருவுமாகும்
பாடப்பா சிமிழுக்குள் பதனம்பண்ணு
பறக்கிறதோர் சூதத்தில் பத்திலொன்று
நீடப்பா வாய்நீரா லரைத்துப்பில்லை
நிசமாக ரவியுலர்த்தி யோட்டில்வையே. 289

வையப்பா மேல்கீழுங் கல்லுச்சுண்ணம்
வகையாக நடுவில்வில்லை வைத்துமூட்டி
செய்யப்பா சீலையது மூன்றுசெய்து
திறமாகக் குக்குடத்திற் பற்பமாகும்
மெய்யப்பா ரசபற்பம் பாணிதனிலடைத்து
விருதான நெய்தேனிற் பணந்தான்கொள்ள

கையப்பா காலோடு முடக்குச்சூலை
கண்காணு தோடுமடா வின்னங்கேளே. 290

கேளடா சர்வாங்க வாதந்தீரும்
கெடியான குன்மநோ யெட்டுந்தீரும்
பாளடா விசுவுமுதல் பறந்தேபோகும்
பறக்குமடா சன்னியென்ற பதின்மூன்றுந்தான்
தேளடா குத்தியதோர் கபாலசூலை
தெரிகெட்டே யோடுமடா சிரநோயெல்லாம்
வாளடா தேகமது வலுத்துப்போகும்
மகத்தான கெற்பநோய் மாறுந்தானே. 291

தாளகபற்பம்

மாறுமடா வின்னமொன்று சொல்லக்கேளு
வகையான தாளகந்தான் சுத்திசெய்து
வீறுமடா ரசபற்பந் துருசுநீறும்
விரகாக வாய்நீரா லரைத்துக்கொண்டு
சாறுமடா சமன்தானுந் தாளகத்திலப்பிச்
சதுராக ரவியுலர்த்தி சுண்ணச்சீலை
சீறுமடா மூன்றுசெய்து சுண்ணத்தில்வைத்து
சிறப்பாகக் குக்குடத்தில் சிவன்போலாமே. 292

ஆமப்பா மால்தேவி பற்பந்தன்னை
அளவிலொரு பணந்தூக்கித் தேனிற்கொள்ள
வேமப்பா க்ஷயமெட்டு மீளைப்போடீளை
விருதான சிலோத்துமநோ யெல்லாந்தீரும்
சாமப்பா பிரமியநோய் சாராதோடும்
சடலத்திலே கெற்பநோய் யில்லாதோடும்
காமப்பா வெலும்புருக்கி யஸ்திரிணங்கள்
கண்காணு தோடுமடா வின்னங்கேளு. 293

வங்கபற்பம்

கேளடா வங்கத்தைச் சுத்திபண்ணி
கெடியாக லேசாகத் தகடுதட்டி
தாளடா தாளகமும் ரசமுங்கூட்டிச்
சமனுக வாய்நீரா லரைத்துக்கொண்டு
வாளடா வங்கமென்ற தகட்டிலேதான்
வளமாகப் பூசியே சமனுய்நீயும்
ஆளடா ரவிமுகத்தி லுலரப்போட்டு
அப்பனே சுண்ணாம்பு சீலைசுற்றே. 294

சுற்றியே சுண்ணாம்புக் குள்ளேவைத்து
சுகமாக முழப்புடத்தில் நீறிப்போகும்

மத்தியே வங்கமென்ற பற்பந்தன்னை
வரிசையாய்த் திரிபலாதிச் சூரணத்தில்
குத்தியே பணவெடைதான் தேனிலப்பா
கொண்டுவரப் பத்துநாள் தீரும்நோய்கேள்
வற்றியே பிரமியங்கள் பிரமேகங்கள்
வளருகின்ற வெலும்புருக்கி மாண்டுபோமே. 295

மாண்டுபோங் கிரந்தியது நூற்றுப்பத்தும்
வறட்சியொடு சொறிசிரங்கு மாண்டுபோகும்
மாண்டுபோ மேலூறல் படர்ந்தவூறல்
வகையான சிலவிடங்கள் மாறிப்போகும்
மாண்டுபோம் பெரும்பாடு வயிற்றுக்குத்தல்
மகத்தான புகைச்சல்விழி மாறிப்போகும்
மாண்டுபோம் மேகமென்ற சூலையெல்லாம்
வகையான நாகத்தின் பற்பங்கேளே. 296

நாகபற்பம்

கேளப்பா நாகத்தைச் சுத்திபண்ணி
கெடியாக லேசாகப் பில்லைதட்டித்
தாளப்பா தாளகமும் வங்கபற்பம்
சமனாக நாகத்துக் கிடையேதூக்கி
வாளப்பா வாய்கீரா லரைத்துக்கொண்டு
வளமாகச் சீலைமேல் பூசிக்காய்ச்சி
தாளப்பா சுண்ணாம்புச் சீலைசுற்றி
சத்தமாஞ் சுண்ணாம்புக் குள்ளேவையே. 297

வைத்தப்பா முழப்புடத்தில் நீறிப்போகும்
வாசுகிதா னீறியபின் சொல்லக்கேளு
கைத்தப்பா திரிகடுகு தாளிசபத்திரி
கருவான லவுங்கமைந்துஞ் சமனாய்க்கூட்டிப்
பைத்தப்பா ரவியில்வைத்துச் சூரணித்து
பதறாதே வடிகொண்டு வைத்துக்கொண்டே
எத்தப்பா பணவெடைதான் தேனிற்கொள்ள
எழுந்ததொரு சிலேத்துமநோய் தொண்ணூற்றாறே. 298

ஆறான ரோகமெல்லா மற்றுப்போகும்
அப்பனே வாதமென்ற தெண்பதும்போம்
வீறான பித்தமது நாற்பதும்போம்
வெகுசுருக்காய் மேகமொடு சூலைதீரும்
நாறான குஷ்டமென்ற தெட்டுந்தீரும்
நலமான கடிவிஷங்கள் சாராதோடும்
கூறான குறியெரிப்பு பத்துந்தீரும்
குன்மமென்ற சூலைமுதல் குடிபோம்பாரே. 299

(298) வாசுகி-நாகம்.

தாம்பிரபற்பம்

பாரப்பா தாம்பிரபற்பம் பழச்சாறுதன்னில்
பதறாதே பதினைந்து தரமேசாய்த்து
நேரப்பா லேசாகத் தகடுதட்டி
நினைவாக நாகமுந்தா ளகமுங்கூட்டி
சாரப்பா வாய்கீரா லரைத்துக்கொண்டு
சமனாகத் தாம்பிரந் தனக்குப்பூசி
ஆரப்பா ரவியுலர்த்திச் சுண்ணச்சீலை·
அப்பனே சுற்றியே சுண்ணத்தில்வையே. 300

வைத்தப்பா கனபுடமாய்ப் போட்டெடுக்க
வாகான தாம்பிரம் பற்பமாகும்
கைத்தப்பா போகாது வெகுசுறுக்காம்
காணடா வனுபான மறிந்துபோடு
குத்தப்பா குன்மமெட்டுஞ் சூலைபதினெட்டும்
குடிப்போகுந் திரிகடுகு தேனிற்கொள்ளச்
சித்தப்பா வீளையோ டிருமலெல்லாஞ்
சிதறிப்போம் வெள்ளியுட பற்பங்கேளே. 301

வெள்ளிபற்பம்

கேளப்பா வெள்ளியது தகடுதட்டிக்
கெடியான ரசபஸ்பம் வங்கபற்பம்
நாளப்பா நாகமொடு மூன்றுநேராய்
நலமான வாய்கீரா லரைத்துக்கொண்டு
வேளப்பா வெள்ளிக்குச் சமனாய்ப்போடு
விருதான ரவியுலர்த்திச் சீலைசெய்து
சூளப்பா சுண்ணாம்புக் குள்ளேவைத்து
துடியாக முழுப்புடத்தில் தூக்கிவாங்கே. 302

வாங்கியதோர் பற்பத்தைப் பதனம்பண்ணு
வகையாகப் பணவெடைதான் தேனிற்கொள்ளத்
தேங்கியதோர் கல்லடைப்பு சதையடைப்பு
தீராத கிறிச்சினங்கள் தீருந்தீரும்
ஏங்கியதோர் காசமோ டிளைப்புதீரும்
இளைக்குமே லிங்கப்புற்று யோனிப்புற்று
பாங்கியே யரிகிரந்தி மேகமெல்லாம்
பறக்குமடா வின்னமொரு பற்பங்கேளே. 303

தங்கபற்பம்

கேளப்பா தங்கமொரு பலந்தான்வாங்கி
இருபையாய்த் தகடுதட்டி சொல்லக்கேளு
நாளப்பா பழச்சாற்றில் பூங்காவியாற்றி
நலமாகத் தகட்டின்மேற் பூசிக்காய்ச்சி

தாளப்பா வைந்துதாங் காய்ச்சிக்கொண்டு
தளமாக வங்கபற்பம் நாகபற்பம்
தேளப்பா ரசபற்பம் வீரம்வெள்ளைச்
சேர்சமனு யண்டத்தி னீராலாட்டே. 304

ஆட்டியே சமனுகத் தகட்டிற்பூசி
அப்பனே யண்டத்தின் சுண்ணம்வைத்து
நீட்டியே மேல்மூடிச் சீலைசெய்து
நேராக முழப்புடத்தில் நீறிப்போகும்
காட்டியே கறுத்தக்கால் வீரங்கால்கூட்டி
கனமான வுண்டநீர் தன்னுலாட்டி
சாட்டியே ரவியுலர்த்தி ஓட்டில்வைத்து
சாங்கமாய் முழப்புடத்தில் தாக்கிவாங்கே. 305

வாங்கியே யெடுத்துப்பார் வெண்ணீறாகும்
வளமான தேன்நெய்சர்க் கரையிற்கொள்ள
தாங்கியே சன்னியென்ற மூலமெல்லாம்
தப்பாது தோஷமென்ற வேழுந்தீரும்
நீங்கியே வலிப்பிசுவும் பறந்துபோகும்
நினைவுகெட்ட சேத்துமநோய் தொண்ணூற்றாறும்
தேங்கியே வாதநோ யெண்பதுந்தான்
சிதறிப்போம் பித்தமஃ தொழிந்துபோமே. 306

ஒழிந்துபோம் பித்தவெட்டை கிராணிபெரும்பாடு
ஒழியாத பிரமியநோ யொடுங்கிப்போகும்
ஒழிந்துபோம் குன்மமெட்டும் பாண்டோராறும்
உத்தமனே மேகசலக் கழிச்சல்தீரும்
ஒழிந்துபோஞ் சூலைமுத லிசுவுரோகம்
ஓஹோஓஹோ குஷ்டமெட்டுங் கடலேபுக்கும்
ஒழிந்துபோங் கிரந்தியொடு வெடிமேகந்தான்
உட்சுரங்கள் நீர்ச்சுருக்கு மோடும்பாரே. 307

கல்நாற்பற்பம்

பாரப்பா வெண்காரஞ் சிலாசத்துந்தான்
பாங்கான கலைக்கொம்பு கல்நாருந்தான்
சேரப்பா சமனுகப் பொடித்துக்கொண்டு
சிறப்பான பருத்திதான் சமூலமெல்லாம்
நேரப்பா சுட்டதனைச் சாம்பலாக்கி
நினைவாகப் படியென்ற தளந்துகொண்டு
வாரப்பா நாலாறு படிசலந்தான்
வாகாகக் கலக்கியதை மூடிவையே. 308

வைத்தப்பா நாலாநாள் தெளிவிறுத்து
வாகாக முன்மருந்தில் விட்டேயாட்டி

கைத்தப்பா நால்சாம மரைத்துவில்லை
கனமான ரவியில்வைத் துலரப்போட்டு
ஒத்தப்பா வோட்டில்வைத் தோடுமூடி
உத்தமனே சீலைகட்டி முழப்புடத்திற்போடு
நித்தப்பா நீறியது வெள்ளையாகும்
நினைவாகப் பின்னுமந்த நீராலாட்டே. 309

ஆட்டையிலே சாரமது காசுபோடு
அடங்காது சூடனது காசுபோடு
நீட்டையிலே வீரமது காசுபோடு
நினைவாகப் பூநீறு காசுபோடு
நாட்டையிலே நால்சாம மரைத்துக்கொண்டு
நலமாகப் பில்லைதட்டி ரவியுலர்த்தி
சூட்டையிலே சுண்ணும்புப் பொடியில்வைத்து
சுருக்காக முழப்புடத்தில் சூட்டிவாங்கே. 310

வாங்கியே கறுத்தாக்கா லண்டநீரால்
வளமாக வரைத்தொரு புடந்தான்போடு
தாங்கியே வெண்மையது சங்குபோலாம்
தளமான லிங்கமது சுத்திசெய்து
பாங்கியே பற்பத்தில் பாதிலிங்கம்
பச்சையாய் சேர்த்துநீ பொடியாய்ச்செய்து
தேங்கியே யிளநீரிற் பணந்தான்ரண்டு
தீர்க்கமாய் கொண்டுவரப் போம்நோய்கேளே. 311

கேளப்பா பெருவயிறு மகோதரங்கள்
கிறிச்சினங்கள் கல்லடைப்பு சதையடைப்பு
நீளப்பா நீருகல் நீரெரிவுதானும்
நீடாது கவுசையொடு நீராம்பல்தானும்
ஆளப்பா நீர்ச்சுரப்பு வுப்பிசங்கள்
அணுகாது வயிற்றிலுள்ள நீர்கட்டும்போம்
தேளப்பா நீருகல் துள்ளிவீழ்தல்
தீருமப்பா பவளமது பற்பங்கேளே. 312

பவளபற்பம்

கேளப்பா பவளமது பலந்தானொன்று
கெடியானபீங்கானில் னொறுக்கிப்போட்டு
வேளப்பா பழச்சாறு விட்டுநீயும்
விருதான நாழிகைதா னறுபதானல்
நாளப்பா கழுவியதை யெடுத்துக்கொண்டு
நலமான கர்ப்பூர சிலாசத்துந்தான்
தாளப்பா சமனுகக் கல்வத்திட்டு
சார்வான ரெண்டைச்சா றதனுலாட்டே. 313

ஆட்டியே நால்சாமம் பில்லைதட்டி
அப்பனே ரவியுலர்த்தி யோட்டில்மூடி
நாட்டியே முழப்புடத்தில் நீறும்பாரு
நன்றாகப் பின்னுமந்தச் சாற்றாலாட்டி
காட்டியே ரவியுலர்த்திப் புடத்தைப்போடு
கருவான புளியாரைச் சாற்றாலாட்டி
நீட்டியே விருசாம மரைத்துக்கொண்டு
நினைவாகப் புடம்போடப் பற்பமாமே. 314

ஆமப்பா பணவெடைதான் வெண்ணெயிலேகொள்ள
அடங்காத மேகமெல்லா மகன்றுபோகும்
வேமப்பா வெலும்புருக்கி யஸ்திவேகம்
விருதான மதுமேக மெட்டும்போகும்
தாமப்பா தேனிலே கொண்டாயானால்
சகலரண மேலூறல் தவறிப்போகும்
நாமப்பா வாயுவெல்லாங் கீழேநோக்கும்
தப்பாது மேகத்தின் தினவுபோமே. 315

வாதசுரக்கியாழம்

போமப்பா சுரங்களறு பத்தினாலும்
புகழாக வாதசுர முப்பத்திரண்டு
ஆமப்பா பித்தசுர மிருபத்தொன்றும்
அளவான சேத்துமநோய் பதினொன்றப்பா
நாமப்பா வகைமூன் றறுபத்தினாலும்
நலமான வாதசுரக் கியாழங்கேளு
வேமப்பா சிறுதேக்கு சுக்குதிப்பிலி
விதமான செவியமொடு கோஷ்டந்தானே. 316

தானென்ற துராலப்பை திப்பிலிமூலம்
தளமான சித்திரமூலஞ் சங்குமூலம்
வேனென்ற வெள்ளறுகு நிலவேம்போடு
விருதான முருக்கம்வேர் கழற்சிவேரும்
கானென்ற கண்டங்கத்திரி பேராமுட்டி
கருவான சிற்றரத்தை மாவிலிங்கம்வேரும்
தேனென்ற சிறுகாஞ்சோரி பேராரத்தைத்
தெளிவான சதகுப்பை விஷ்ணுகாந்திபாரே. 317

பாரப்பா விந்தவகை யிருபத்தொன்றும்
பலம்வீதம் தூக்கியே யிடித்துநையச்
சேரப்பா விருபத்தோர் பங்குபண்ணித்
திறமாக வொருபங்கு சட்டியிலிட்டு
வாரப்பா மூன்றுசேர் சலந்தான்விட்டு
வளமான நாழிகைதான் முப்பதானால்

ஆரப்பா வடுப்பேற்றிக் கால்சேரானால்
அப்பனே வடிகொண்டு பீங்கானில்வாரே. 318

வார்த்தப்பா வாதராட் சதன்குளிகை
வளமாகப் பணமொன்று பொடித்துப்போட்டு
தேத்தப்பா தேனதிலே கழஞ்சிகுத்தித்
திறமாக விருநேரங் கொடுத்தாயானால்
பார்த்தப்பா வாதசுரம் நடுக்குவாதம்
பதறுகின்ற நாளின்முறை பறந்துபோகும்
காத்தப்பா கடுப்புவலி கடலேபுக்கும்
கருவான பித்தநோய்க் கியாழங்கேளே. 319

பித்தசுரக்கியாழம்

கேளப்பா பித்தசுர மிருபத்தொன்றும்
கெடியாகத் தீருமடா கியாழங்கேளு
நாளப்பா விலாமிச்சை சிறுகாஞ்சோரி
நலமான வில்வவேர் பாதிரிவேர்தானும்
ஆளப்பா வதிமதுரஞ் செவ்வல்லிகோஷ்டம்
அப்பனே நன்னாரி நிலையாவாரை
தேளப்பா சீரகமும் கொத்துமல்லி
திறமான தும்பைவேர் பேரீச்சங்காயே. 320

காயோடு யானைத்திப் பிலியுமப்பா
கருவான நெல்லிமுள்ளி சுக்கோடொக்கப்
பாயோடு பதினைந்து பலவீதந்தூக்கி
பக்குவமா யிடித்துநையப் பங்குகேளு
தாயோடு விருபத்தோர் பங்குபண்ணி
தப்பாம லொருபங்கு சட்டியிலிட்டு
சேயோடு சலமதிலே மூன்றுசேர்தான்
திறமாக விட்டதிலே யடுப்பிலேற்றே. 321

ஏற்றப்பா நாழிகைதான் முப்பதானால்
என்மகனே கால்சேர்தா னெடுத்துக்கொண்டு
சேர்த்தப்பா தேனதிலே கழஞ்சிகூட்டித்
திறமான கோரோசனைக் குளிகையொன்று
பார்த்தப்பா விழைத்ததனை யிருநேரந்தான்
பதறுமற் கொடுத்துவரப் பித்தசுரமெல்லாம்
காத்தப்பா கண்காணு தோடிப்போகும்
கருவான நாவறட்சி கழன்றுபோமே. 322

போமப்பா நாக்கிலுள்ள முள்ளதெல்லாம்
பொறுக்காத நீர்த்தாகம் போகுஞ்சொன்னேன்
நாமப்பா வுடம்பெரிவு காந்தலெல்லாம்
நடுநடுங்கி யோடுமடா வாயூறலெல்லாம்

சேமப்பா சிரசிலுள்ள பித்தமெல்லாம்
சீக்கிரத்தி லிறங்கிவிடுஞ் சிரோபாரம்போம்
ஆமப்பா சேத்துமசுரம் பதினொன்றுந்தான்
அப்பனே தீருதற்குக் கியாழங்கேளே.

சேத்துமசுரக் கியாழம்

கேளப்பா சுக்குதிப் பிலிகிராம்பு
கெடியான துராலப்பை யக்கிராகாரம்
காளப்பா கருமுள்ளி கடுக்காயோடு
கனத்த வாடாதோடை கர்ப்பூரவள்ளி
நாளப்பா முந்திரிகை கண்டங்கத்திரி
நலமான பதினொன்று வகையைக்கேளு
ஆளப்பா பலவீதம் நிறுத்துக்கொண்டு
அப்பனே யிடித்துதையப் பங்குகேளே.

பங்கென்ன பதினைந்து பண்ணிக்கொண்டு
பக்குவமாயொருபங்கு சட்டியிலிட்டு
பங்கென்ன ரண்டுபடி ஜலந்தான்வாரு
பதறாதே முப்பதுநாழிகையூறினக்கால்
பங்கென்ன வடுப்பேற்றிக் கமலமாகப்
பதறாமல் கால்சேர்தா னிறுத்துக்கொண்டு
பங்கென்ன தேனிலே கழஞ்சுகுத்தி
பாரப்பா சந்திரோதயம் பணந்தான்போடே.

போட்டப்பா கோரோசனை குளிகையொன்று
புகழாகக் கலக்கியிரு நேரங்கொள்ளக்
காட்டப்பா கபமெல்லாங் கீழேசாடும்
கனமான சேத்துமசுரம் காணாதோடும்
சேட்டப்பா விருமலெல்லாம் க்ஷணத்தில்தீரும்
சிறுகடுப்பு குத்துவலி சேராதோடும்
காட்டப்பா வலியிசுவுங் கலங்கியோடும்
கருவான சேதியொன்று சொல்லக்கேளே.

சன்னி பதின்மூன்றுக்கும் பெயர்

கேளப்பா சன்னிவகை பதின்மூன்றுக்கும்
கெடியான நாமமது சொல்லக்கேளு
நாளப்பா தாந்திரிக னந்தகனுமாகும்
நலமான சீதாங்க முருத்திரதாகம்
வேளப்பா சித்தவிப் பிரமையோடு
விதமான கண்டகுபசங் கருணியாகும்
ஆளப்பா விக்கனுதம் பக்கநேத்திரம்
அருளான ரக்தஷ்டிவிருக்கி தாகமாமே.

தோஷமேழுக்கும் பெயர்

ஆமப்பா பிரலாப மபினியாசம்
அப்பனே சன்னிவகை பதின்மூன்றுக்கும்
வேமப்பா தோஷமென்ற தேழுங்கேளும்
விருதான கிஷ்ணதோஷம் ரத்ததோஷம்
நாமப்பா நீர்தோஷ மஸ்திதோஷம்
நலமான கொடிதோஷம் வலிதோஷந்தான்
சாமப்பா சையோக தோஷத்தோடு
சதுரான தோஷவகை யேழுந்தானே. 328

தானென்ற சன்னிவகை பதின்மூன்றுக்கும்
தளமான தோஷவகை யேழுக்குந்தான்
நானென்ற மருந்துவகை முன்னேசொன்னோம்
நலமான சன்னிக்குத் தைலஞ்சொன்னோம்
கானென்ற மாத்திரையுங் கலிக்கஞ்சொன்னோம்
கருவான வைத்தியத்தில் மனதையூன்றி
வானென்ற வைத்தியத்தைப் பார்த்தாயானால்
மைந்தனே தன்வந்திரிக் கொப்பாம்பாரே. 329

கெந்தி செந்தூரம்

பாரப்பா செந்தூரஞ் சொல்லக்கேளு
பண்பான கெந்தியரைப் பலந்தான்வாங்கி
நேரப்பா வோட்டிலிட் டிருக்கும்போது
நேரான ரசம்பலந்தா னூலுவிட்டே
காரப்பா வறுத்தாக்கால் பற்பம்போலாம்
சாதகமாய்ப் புதுச்செங்கல் பாக்குபோலுடைத்து
வாரப்பா பாண்டத்தில் போட்டுப்பின்பு
வளமான கறியுப்பு சேரைதான்வாங்கே. 330

வாங்கியே முன்பற்பங் கல்லுப்புக்கலந்து
வாகாகப் பாண்டத்திற் றாவிநீயும்
தாங்கியே மேல்பானை கவிந்துமூடி
தப்பாம லெழுசீலை மண்ணுசெய்து
சாங்கியே காயவைத் தடுப்பிலேற்றிச்
சாதகமாய் கமலகாடாக் கினியினாலே
தேங்கியே நாற்சாம மெரியிட்டாக்கால்
திறமாக மேல்தூரில் பற்பமாமே. 331

ஆமப்பா சூதபற்பம் பலந்தானது
அப்பனே கெந்திபல மரையுங்கூட்டி
நாமப்பா வரிதாரம் பலங்கால்தூக்கி
நலமாகப் பொடிசெய்து குப்பியிலேபாதி
வேமப்பா போட்டதிலே யெழுசீலைசெய்து
விருதான ரவியிலே வையப்போட்டு

தாமப்பா தாளிக்குள் நாலுவிரல்மணல்தான்
தப்பாமல் பாதிமேல் குப்பிவையே.

வைத்தப்பா கழுத்தளவு மணலைக்கொட்டி
வாகாக முத்தீயுஞ் சாமம்நாலு
கைத்தப்பா வெரியிட்டே யாறிப்பார்த்தால்
கசகாது தேங்காய்போல் செந்தூரமாகும்
நைத்தப்பா வுடைத்தெடுத்துப் பதனம்பண்ணு
நலமான வியாதியெல்லாம் நாடாதோடும்
மைத்தப்பா செந்தூரம் பலந்தானென்று
மைந்தனே முன்பற்பம் பலந்தானாலே.

நாலான கெந்திபல மரைதான்போட்டு
நலமான தாரங்கால் பலமுமாகும்
காலான கல்வத்தில் பொடித்துநீயும்
கசகாமல் குப்பிக்குப் பாதிபோட்டு
சேலான சீலையோ ரேழுஞ்செய்து
திறமான வாய்க்குசெங்கல் தேய்த்துப்போட்டு
வாலான சீலையோ ரேழுஞ்செய்து
மைந்தனே வாலுகையி லடுப்பிலேற்றே.

ஏற்றியே நாற்சாம முத்தீயாற்போட்டு
எடுத்துப்பார் செந்தூர மருணன்போலாம்
பாத்தியே யிப்படியே பத்துமுறைசெய்து
பாங்கான செந்தூர மெடுத்துக்கொண்டு
தேத்தியே செந்தூரம் பலந்தானாலு
திறமான பற்பமது பலந்தானாலு
ஆத்தியே கெந்தியது பலந்தான்ரண்டு
அப்பனே தாரமது பலமரையுமாமே.

ஆமப்பா சிலைகால்தான் தாளகங்கால்தான்
அப்பனே கல்வத்திற் பொடித்துக்கொண்டு
நாமப்பா செம்பரத்தம் பூச்சாற்றாலே
நலமாக நாற்சாம மாட்டிக்கொண்டு
தாமப்பா பூவரசன் பூநாற்சாமம்
தப்பாமல் தக்காளி பழச்சாறுகேளு
சாமப்பா விருசாம மாட்டிக்கொண்டு
சமர்த்தாகப் பொற்கையான் சாறுகேளே.

கேளப்பா சாமம்ரண் டாட்டிக்கொண்டு
கெடியான ரேக்கதிலே பலமும்போட்டு
காளப்பா வரைத்துலர்த்திப் பொடியாய்ச்செய்து
நலமான குப்பியிலே யரைதான்போட்டு
வேளப்பா சீலையோ ரேழுசெய்து
வெகுசுறுக்காய் வாங்கிசெங்கல் தேய்த்துப்போட்டு

ஆளப்பா வாய்க்குமந்தச் சீலைசெய்து
அப்பனே வாலுகையி லேற்றியாட்டே. 337

ஆட்டப்பா சாமம்நால் தீபமாக
அப்பனே சாமம்நால் கமலவன்னி
மூட்டப்பா காடாக்கி சாமமெட்டு
மூதண்ட நிருவாணிப் பூஜைசெய்து
காட்டப்பா வாறினபின் னெடுத்துப்பாரு
கதிர்போலே செந்தூரங் கண்கொள்ளாது
நீட்டப்பா லோகத்தில் நூற்றுக்கொன்று
நிலைக்குமடா வர்னமது பத்துந்தானே. 338

பத்தாகுந் தேகத்தில் குன்றியெடைதேனில்
பக்குவமாய் வருடமொன்று கொண்டாயானால்
வித்தாகும் விந்துவது கீழ்நோக்காது
விட்டுவிட்டு சரீரத்தோர் வாசிக்கட்டும்
அத்தாகும் ஸ்திரீகளுட னும்போகித்தால்
அப்பனே நூறுபேர் தோற்றுப்போவார்
சித்தாகுந் தேகமது சிவந்துமின்னும்
செடமிறுகி வயிரம்போ லாகும்பாரே. 339

காலகண்ட மேக நாராயண செந்தூரம்

பாரப்பா காலகண்ட மேகநாராயணன்
பரிவான செந்தூரஞ் சொல்லக்கேளு
சேரப்பா ரசபற்பம் பலந்தானெட்டு
திறமான கெந்தகமோர் பலந்தானப்பா
வாரப்பா தாளகமோர் பலந்தானென்று
வளமான சிலையரைசெந் தூரமரைதான்
ஆரப்பா லிங்கங்கால் வெள்ளிகால்தான்
அப்பனே வெள்ளீயம் பலந்தானென்றே. 340

ஒன்றான நாகமரை வங்கங்கால்தான்
உத்தமனே செம்பதுவுங் கழஞ்சிரண்டு
நன்றான தங்கமது கழஞ்சியொன்று
நாட்டப்பா நாபியொரு பலமும்நீதான்
குன்றாமற் பொடிசெய்தே யரைப்புகேளு
கூறான பொற்கையான் சாமம்நாலு
சென்றான குமரிப்பூச் சாமம்நாலு
சேர்முருக்கம் பூச்சாறு சாமம்ரண்டே. 341

ரெண்டான பாதிரிப்பூச் சாறுசாமம்
ரெண்டாகும் பழச்சாற்றில் (செம்பரத்) தம்பூப்போட்டு
வென்றாக வெளுத்தபின் பெற்றிந்துபோட்டு
விரைவாக விருசாம மெடுத்தேயாட்டு

சென்றாக ரவியுலர்த்திப் பொடிதான்செய்து
சேரப்பா குப்பிக்குச் சீலைசெய்து
வின்றப்பா குப்பிக்குப் பாதிபோட்டு
விருதாக வாய்மூடி சீலைசெய்யே. 342

செய்தப்பா வாலுகையி லடுப்பிலேற்றித்
திறமாகத் தீபாக்கினி யெட்டுசாமம்
செய்தப்பா கமலமோ ரெட்டுசாமம்
தீர்க்கமாய்க் காடாக் கினிசாமமெட்டு
செய்தப்பா தீயாற்றி யீசானியத்தில்
சேர்க்கறியு மதுவோடு பூஜைபண்ணு
செய்தப்பா குப்பிதனை வாங்கிப்பாரு
திறமாகக் கருஞ்சிவப்பாய்ச் செந்தூரமாமே. 343

ஆமப்பா பணவெடைதான் தேனிற்கொள்ள
அணுகாது குன்மமெட்டும் பீலியாறும்
போமப்பா பெருவயிறு மகோதரங்கள்
பொல்லாத சதைவிம்மல் நீருருக்கல்
காமப்பால் விரைத்ததொரு சோகைபாண்டு
கனமான நீர்க்குத்தல் காணாதோடும்
சாமப்பா வக்கினியா மந்தமெல்லாம்
சண்ணுண்டு போகுமடா சேதிகேளே. 344

ரசலோக செந்தூரம்

சேதியொன்று சொல்லுகிறேன் புலத்தியனேயையா
திறமான ரசலோக செந்தூரந்தான்
ஆதியென்ற சூதபற்பம் பலந்தான்ரண்டு
அப்பனே லோகமொன்று காந்தமரைகூட்டி
வாதியாம் லிங்கமரை வெண்காரமரைதான்
வளமாக சாரங்கால் நாபிகால்தான்
நாதியென்ற கெந்தியினால் செந்தூரங்கால்தான்
கனமாகப் பொடிசெய்தே யரைப்புகேளே. 345

கேளப்பா பழச்சாற்றால் சாமம்நாலு
கெடியாக பொற்கையால் சாமம்ரண்டு
நாளப்பா செருப்புக்கால் சாமம்ரண்டு
நலமான குமரிப்பூ சாமம்ரண்டு
தாளப்பா செம்முள்ளி சாமமொன்று
தளமாக வேயரைத்து ரவியிற்போட்டு
வேளப்பா செய்ததனைக் குப்பிக்கேற்றி
விதமான வாய்மூடி வாலுகையில்வையே. 346

வைத்தப்பா வடுப்பேற்றி யெட்டுசாமம்
வாகாகத் தீபாக்கினி கமலங்கேளு

கைத்தப்பா சாமமெட் டெரித்துக்கொண்டு
கனமான காடாக்கினி சாமமெட்டு
வித்தப்பா வாறவிட் டுடைத்துவாங்கு
விருதாக செங்கல்நிற மாகக்காணும்
பைத்தப்பா பொடிசெய்து பணந்தேனிலுண்ணப்
பறக்குமடா காமாலை பாண்டுதானே. 347

தானென்ற பித்தநோய் தலைகெட்டோடும்
தப்பாது வாதமென்ற தெண்பதும்போம்
நானென்ற சன்னியெல்லாம் நாடாதோடும்
நலமான வாயுவென்ற தெல்லாந்தீரும்
கானென்ற தலையிலுள்ள வியாதியெல்லாம்
கடல்புக்குஞ் சூலைபதி னெட்டும்தீரும்
மானென்ற தேனிலே பத்துநாள்கொள்ள
மதுமேகந் தீருமடா வின்னங்கேளே. 348

ரசகற்பூர பற்பம்

கேளடா ரசகற்பூரப் பற்பங்கேளு
கிருபையாய் சுத்தரசஞ் சுத்திசெய்து
நாளடா கல்லுப்பு குகைபோற்பண்ணி
நலமான ரவியிலே காயப்போட்டு
தேளடா சட்டிக்கு ளுப்பைப்போட்டு
திறமான மேற்சட்டிக் கொண்டுமூடி
தாளடா வெழுசீலை மண்ணுஞ்செய்து
தளமான ரவியிலே காயப்போடே. 349

போட்டப்பா வடுப்பேற்றிக் கமலமாகப்
புகழாக நாற்சாம மெரித்தாயானால்
நீட்டப்பா தேங்காய்போ லிறுகிநிற்கும்
நிசமாக வதையெடுத்துத் தூக்கிக்கொண்டு
காட்டப்பா பலநாலு பீங்கானுக்குள்
கருவான வெற்றிலையின் சாற்றில்விட்டு
ஆட்டப்பா ரவிமுகத்தி லுலர்ந்தபின்பு
அப்பனே நீயைஞ்சுதரம் சாறுவிட்டே. 350

விட்டப்பா ரவியிலே யுலர்ந்தபின்பு
விருதாக பொடிபண்ணி குப்பிக்கிட்டு
விட்டப்பா வரைவாசி மட்டம்போட்டு
விளக்கியே யெழுசீலை மண்ணுஞ்செய்து
விட்டப்பா வாலுகையில் வைத்துநன்றாய்
விதமாக வெண்சாம முத்தீயிட்டு
விட்டப்பா வாறியபின் னுடைத்துப்பாரு
விதமான பற்பமதை யெடுத்துக்கொள்ளே. 351

கொள்ளப்பா நாலுபல மெடுத்துக்கொண்டு
குறிப்பான பற்பமது பலம்நால்தூக்கி
நள்ளப்பா பொடிசெய்து வெற்றிலையின்சாறு
நலமாக விட்டதிலே ரவியுலர்த்தி
விள்ளப்பா மேருவிலே யரைவாசிபோட்டு
விருதான வாலுகையி லடுப்பிலேற்றி
கள்ளப்பா முத்தியுஞ் சாமமெட்டு
கசகாமலெடுத் தாறியபின் னுடைத்துப்பாரே. 352

பாரப்பா முன்போலே பத்துத்தொந்தம்
பரிவாக வெடுத்தெடுத்துப் பதனம்பண்ணி
சாரப்பா பணவெடைதா னெய்தேனிற்றான்
சார்வாக மண்டலங்கால் கொண்டாயானால்
சேரப்பா சூலைபதி னெட்டுந்தீரும்
தினவான கிரந்திபுண்கள் புரைகள்தீரும்
வேரப்பா மேலூர லஸ்திரணங்களெல்லாம்
வெவ்வேறாய்த் தீருமடா வின்னங்கேளே. 353

காரீய செந்தூரம்

கேளப்பா காரீய செந்தூரந்தான்
கெடியான காரீயம் பலந்தானாறு
நாளப்பா பழச்சாற்றி லுருக்கிச்சாய்த்து
நலமான நல்லெண்ணெய் கோமயத்திலேழு
தாளப்பா கோசலத்தில் கொள்ளுச்சாற்றில்
தளமான காடியிலே யுருக்கிச்சாய்த்து
ஆளப்பா வகையொன்றுக் கேழுதரஞ்சாய்த்து
அப்பனே பலநாற்சட் டியிலேவையே. 354

வைத்தப்பா ரசமதுதான் கால்தான்கூட்டி
வளமாக வுருக்கயிலா வாரைப்பஞ்சாங்கம்
வைத்ததிலே நறுக்கியே யிடித்துக்கொண்டு
பலமாகப் போட்டதிலே வறுப்பாயப்பா
னைத்ததிலே நாற்சாமம் வறுத்தீயானால்
நலமான செந்தூர மருணன்போலாம்
பைத்ததிலே செந்தூர மெடுத்துக்கொண்டு
பத்தியமாய்ச் சீசாவிற் பதமதாமே. 355

ஆமப்பா நாற்சாம மருந்துபோட்டு
அப்பனே நால்சாமஞ் சும்மாய்வறுத்து
தாமப்பா செந்தூர மெடுத்துக்கொண்டு
தளமான தேனெய்யில் பணந்தானுண்ண
போமப்பா பிரமியநோய் பெரும்பாடெல்லாம்
பொல்லாத கிறிச்சினங்கள் போகுஞ்சொன்னேன்

காமப்பா நீரிழிவு கடலேபுக்கும்
கலங்காதே கல்லடைப்பு தெறிக்கும்பாரே. 356

பூரணசந்திரோதயம்

பாரப்பா பூரணச்சந் திரோதயமென்றால்
பறக்குமடா வியாதியெல்லாஞ் சொல்லக்கேளு
தாரப்பா ரசமிரண்டு சிலையரைக்கால்
தவறாமல் மால்தேவி யரையுங்கூட்டி
வேரப்பா லிங்கமரை செந்தூரமரைதான்
வெகுசுருக்காய் ரேக்கதுவும் பலந்தானென்று
காரப்பா சரக்கெல்லாங் கல்வத்திட்டு
கசக்காமற் பொடித்துமன மொன்றுபட்டே. 357

ஒன்றப்பா வரைப்புக்குச் சாறுகேளு
உத்தமனே பழச்சாற்றில் செம்பரத்தம்பூபோட்டு
கன்றப்பா வெளுத்ததிலே நாள்தான்சென்றால்
கலங்காதே பிழிந்தெறிந்து மருந்தில்விட்டு
வின்றப்பா சாமமே யிருபதாகும்
வேளாத பொற்கையா னிருபத்தொன்றும்
சென்றப்பா வரைக்கையிலே துருசுகுருகேளு
திறமாக பணவெடைதான் கூடப்போடே. 358

போட்டப்பா ரவியுலர்த்திப் பொடிதான்செய்து
புகழான மேருவிலே யரைவாசிபோட்டு
காட்டப்பா சிலையோ ரேழுசெய்து
கனமான வாலுகையி லடுப்பிலேற்றி
நீட்டப்பா தீபமோ ரெட்டுச்சாமம்
நிலையான கமலவன்னி யெட்டுச்சாமம்
ஆட்டப்பா காடாக்கினி யாறுசாமம்
அப்பனே சலாகையிட்டுக் கிண்டிப்பாரே. 359

பாரப்பா சலாகைமுகங் கறுப்புகண்டால்
பக்குவமென் றேதீயை யாற்றிபோட்டு
சேரப்பா பூரணச்சந் திரனைப்போலே
திறமாகக் காந்தியதா யிருக்கும்பாரு
வாரப்பா வுடைத்தெடுத்து பலமேதூக்கி
வகையாகப் பொடிசெய்து கஸ்தூரிகேளு
ஆரப்பா கழஞ்சியொன்று கூடப்போடு
அப்பனே கோரோசினைதான் கழஞ்சியாமே. 360

ஆமப்பா கூடவிட்டுப் பொடிதான்செய்து
அப்பனே பாணிதனி லடைத்துக்கொண்டு
சேமப்பா பணவெடைதான் தேனிற்கொள்ள
தீராத சன்னியென்ற மூலந்தீரும்

வேமப்பா தோஷமென்ற தேழுந்தீரும்
வெருளாத சேத்துமநோய் தொண்ணூற்றாறும்
வாமப்பா கீழ்நோக்கி வலியுந்தேகம் 361
வளமான குப்பிவைத்து தியானஞ்செய்யே.

செய்யவே பூரணச்சந் திரோதயமென்றால்
திடுக்கிடுமே சுரமென்ற தறுபத்தினலும்
கையவே காசமெட்டுங் கடலேபுக்கும்
கன்மான மேகநோ யிருபத்தொன்றும்
பையவே பிரமியங்க ளகன்றுபோகும்
பாரப்பா தேகமது சிவந்துமின்னும்
வையவே வருடமொன்று பணவெடைதான்கொள்ள 362
மகத்தான தேகமது சந்திரன்போலாமே.

ஆமப்பா கோங்கின்பூச் சூரணமேசெய்து
அப்பனே பூரணச்சந் திரோதயம்வைத்து
நாமப்பா மண்டலந்தான் மூன்றுசென்றால்
நலமான தேகமே யருணன்போலாம்
போமப்பா சரஸ்வதிதா னிருத்தஞ்செய்வாள்
புகழான சுயமெல்லாம் பாடலாங்கேள்
காமப்பா விறுகுமடா சையோகத்தில் 363
கருவான விந்துவது வீழாதென்னே.

என்னவே பத்தியந்தான் பாலுஞ்சோறும்
இதமான வாவினெய் சிறுகீரையாகும்
பன்னவே பொன்னாங்காணி புளியாரையாகும்
பக்குவமாய் தேனொடுசர்க் கரையுமாகும்
கன்னவே மிளகுசீ ரகமுமாகும்
கறியென்றால் முத்து துளையுமாகும்
தன்னவே பருப்புக்குள் பாசிப்பயறுமாகும் 364
இளமான சந்தனாதித் தயிலமூழ்கே.

முழுகவே வியாதியெல்லாங் கடலேபுக்கும்
மூக்கியமா யகத்தியர்க்குச் செபந்தான்பண்ணு
நெகிழவே தியானமது நிலையாய்ச்செய்வாய்
நேராக தேவியைத்தான் பூசைபண்ணு
திகழவே சிவன்தனையே பூசைபண்ணு
தீராத வியாதியெல்லாந் தீர்ந்தேபோகும்
மகிழவே வைத்தியனிவ் வகையாய்ச்செய்தால் 365
மண்டலத்தி லீசனவனுகு முற்றே.

வைத்திய ரத்தினச் சுருக்கம்-360

முற்றிற்று.

மருந்தின் தலைப்புகளின் அகராதி

பக்கம்	பெயர்	பாடற்றொகை	பக்கம்	பெயர்	பாடற்றொகை
27	அக்கினிசூரணம்	125	45	கூழ்ப்பாண்டகிருதம்	211
28	அசுவகெந்திசூரணம்	129	71	கெந்திசெந்தூரம்	330
33	அசுவகெந்தி பலராக்ஷத தைலம்	151	36	கொம்பரக்குத்தைலம்	165
61	அப்பிரேகசெந்தூரம்	282	12	கோரோசனைக்குளிகை	55
57	அயக்காந்தசெந்தூரம்	266	31	சஞ்சீவிச்சூரணம்	145
13	அர்த்தநாரீஸ்வரச்சூரணம்	60	37	சந்தனாதித்தைலம்	173
55	ஆக்கிராணநசியம்	255	21	சரபங்கவில்வாதிலேகியம்	97
40	ஆதண்டைத்தைலம்	187	26	சவுபாக்கியசுண்டி	119
9	இதுவுமொருவகை	41	70	சன்னி பதின்மூன்றுக்கும் பெயர்	327
11	இரசசிந்தாமணி	50	7	சித்தாந்தவைரவம்	33
62	இரசபற்பம்	289	14	சிலோதாரிமணி	64
7	இரசானந்தவைரவம்	35	18	சித்தாதிலேகியம்	83
32	ஏலாதிசூரணம்	149	54	சுகசீதபேதியெண்ணெய்	249
48	கணத்தெண்ணெய்	223	8	சுயமக்கினி	39
16	கண்டாத்திரிலேகியம்	73	56	சூரணங்களின்சுத்தி	259
17	கண்டங்கத்திரிலேகியம்	80	56	செந்தூரவைப்புக்குக் குரு	261
22	கண்டங்கத்திரிலேகியம்	103	70	சேத்துமசுரக்கியாழம்	324
47	கண்டங்கத்திரிகிருதம்	219	6	ஸ்திரீபுருடர்களுக்கு நாடிபார்க்கும்வகை	30
28	கண்டாத்திரிசூரணம்	131	65	தங்கபற்பம்	304
55	கண்டாவிழ்தம்	257	65	தாம்பிரபற்பம்	300
9	கபாடமாத்திரை	43	63	தாளகபற்பம்	292
23	கபாடலேகியம்	108	29	தாளிசப்பத்திரிசூரணம்	134
49	காப்பர்னெய்ணெய்	227	24	திப்பிலிரசாயனம்	112
14	கரிசாலைலேகியம்	66	27	திரிராட்சதசூரணம்	126
52	கலிங்காதியெண்ணெய்	241	58	திரிலோகசெந்தூரம்	271
66	கல்நாற்பற்பம்	308	62	துருசு குரு	288
16	காரீயச்செந்தூரம்	354	46	தூதுளைக்கிருதம்	215
3	காளகண்ட மேகநாராயண செந்தூரம்	340	71	தோஷமெழுக்கும் பெயர்	328
40	கீழ்[illegible]ப்பெல்லித்தைலம்	185	55	நசியம்	256
35	குமரி[illegible]தைலம்	161	64	நாகபற்பம்	297
20	கூழ்ப்பாண்டலேகியம்	94	3	நாடிநிதானம்	1

பக்கம்	பெயர்	பாடற்றொகை	பக்கம்	பெயர்	பாடற்றொகை
4	நாடிபார்க்குங்காலம்	13	19	மகாவில்வாதிலேகியம்	88
5	நாடி இலக்கணம்	14	60	மண்டூரச்செந்தூரம்	278
6	நாடிபார்க்கும் மாதவகை	31	25	மஸ்துமிரசாயனம்	114
30	நிலவாகைச்சூரணம்	139	49	மாந்தயெண்ணெய்	230
42	நிலைப்பனைக்கிருதம்	196	36	மிருகாமலத் தைலம்	169
17	பஞ்சதீபாக்கினிலேகியம்	77	50	மேகத்தெண்ணெய்	232
30	பஞ்சதீபாக்கினிசூரணம்	137	75	ரசகற்பூரபற்பம்	349
59	பஞ்சலோகசெந்தூரம்	275	74	ரசலோகசெந்தூரம்	345
41	பதின்மூன்றுவித சன்னிக்குத் தைலம்	190	56	லோகசெந்தூரம்	262
54	பழத்தெண்ணெய்	252	63	வங்கபற்பம்	294
67	பவளபற்பம்	313	31	வல்லாரைச்சூரணம்	142
69	பித்தசுரக்கியாழம்	320	45	வல்லாரைக்கிருதம்	207
44	புளியாரைக்கிருதம்	204	53	வாத எண்ணெய்	2[illegible]
10	பூபதிகுளிகை	46	68	வாதசுரக்கியாழம்	
12	பூமணிக்குளிகை	58	8	வாதராக்ஷசன்	
77	பூரணசந்திரோதயம்	357	34	வில்வாதிதைலம்	
39	பொன்னாங்காணிதைலம்	183	51	விழுதியெண்ணெய்	
43	பொன்னாங்காணிக்கிருதம்	201	55	வீரபத்திரக்களிக்கம்	
			65	வெள்ளிபற்பம்	

மருந்தின் தலைப்புகளின் அகராதி

முற்றிற்று.

172193